வெளியீடு 5-7-99 Issued 5-7-99

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

புதன்கிழமை, நவம்பர் 25, 1998 - தொகுதி 61 - எண் 1

Wednesday the 25th November, 1998—Volume 61 - No. 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

Assembly Secretariat, Fort St. George,
Chennai - 600 009

[Price Rs. 3.00

D
V24,3,N98
N98-61-1
219402

25–11–1998

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் | iii-vi |
| Personnel of the Government of Tamil Nadu | vii-x |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல் | xiii-xiv |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி) | xv-xxv |
| 1. **வினாக்கள்-விடைகள்--** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 1-40 |
| 2. **சிறப்புக் கவன ஈர்ப்பு--** | |
| (அ) தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலையில் ஏற்பட்ட விபத்து மற்றும் உயர்நீதிமன்ற உத்தரவு | 40-48 |
| (ஆ) மாஞ்சோலை எஸ்டேட் தொழிலாளி கொலை | 49-68 |
| 3. **தகவல் கோரல்--** | |
| (அ) குளிர்காலக் கூட்டத்தொடரில் உறுப்பினர்களுக்கு கம்பளி ஆடை அளிக்கக் கோருதல் | 48 |
| (ஆ) உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை | 69-71 |
| 4. அறிவிப்பு-- | |
| எடுத்துக் கொள்ள அறிவித்த சிறப்புக் கவன ஈர்ப்பை நேரமின்மை கருதி மறுநாள் எடுத்துக்கொள்ளுதல் | 68 |

| | பக்கங்கள் |
|---|---|
| **5. அறிக்கைகள் அளித்தல்--** | |
| (அ) பொதுக் கணக்குக் குழு | 71 |
| (ஆ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு | 71 |
| **6. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)--** | |
| தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு, *1998* | 72 |
| **7. மின்வாரிய நிதிநிலை அறிக்கை, *1998-99* மற்றும் திருத்திய மதிப்பீடுகள், *1997-98* அளித்தலும், அவற்றின்மீது விவாதமும்--தொடர்ச்சி** | 72-125 |
| மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி | 75,85,93,94 95,96,97,98 103-125 |
| டாக்டர் தே. குமாரதாஸ் | 73-77 |
| திரு. குத்தாலம் பி. கல்யாணம் | 77-80 |
| திரு. கே. சுப்பராயன் | 80-86 |
| திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் | 86-91 |
| திரு. பி.ஆர். சுந்தரம் | 91-98 |
| திரு. பி. வெங்கடசாமி | 98-100 |
| திரு. டி. மணி | 100-103 |
| **8. அரசினர் தீர்மானம்--** | |
| விதி *32*-ஐத் தளர்த்தல் | 125 |
| **9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்--** | 126-128 |


219402



## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர்--நீதிபதி செல்வி மீ. பாத்திமா பீவி

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. முதலமைச்சர் : **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :**
பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, மாவட்ட வருவாய் அதிகாரிகள், உள் துறை, நிதி, திட்டம், தொழில்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, சிறுபான்மையினர் நலன், கடவுச் சீட்டு மற்றும் வணிக வரிகள்.

2. கல்வி அமைச்சர் : **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :**
தொழிற்கல்வி உள்ளிட்ட கல்வி, சட்டமன்றம், தேர்தல்கள், மின்னணு வியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், விளையாட்டு மற்றும் இளைஞர் பணிப்படை மற்றும் முன்னாள் இராணுவத்தினர்.

3. மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி :**
மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலம் மற்றும் மின்சாரம்.

4. வருவாய்த் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் :**
வருவாய், வருவாய் வாரியம், மாவட்ட வருவாய் நிருவாகம் மற்றும் மாவட்டத் துணை ஆட்சியாளர்கள்.

5. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. கோ.சி. மணி :**
நகராட்சி நிருவாகம், சமுதாய வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.

6. வேளாண்மைத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் :
வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்புப் பயிர் மேம்பாடு.

7. பொதுப்பணித் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. துரைமுருகன் :
பொதுப்பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டம் மற்றும் செயற் திட்டப் பணிகள்.

8. போக்குவரத்துத் துறை அமைச்சர் : மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி :
போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம் மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

9. நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன் :
நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள்.

10. தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் : மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:
தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை.

11. உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. கா. நா. நேரு :
உணவு, விலைக் கட்டுப்பாடு மற்றும் குடிமைப் பொருட்கள் வழங்கல், பொது விநியோக முறை, கூட்டுறவு மற்றும் புள்ளிவிவரங்கள்.

12. பால்வளத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. க. சுந்தரம் :
பால், பால்பண்ணை வளர்ச்சி, குடிசை மாற்றுத் திட்டம் மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.



13. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான் :
தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, இரும்பு மற்றும் எஃகுக் கட்டுப்பாடு, பத்திரிகை அச்சுக் காகிதக் கட்டுப்பாடு மற்றும் இசுலாமிய அறக்கட்டளை (வக்ஃப்).

14. சட்டத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. ஆலடி அருணா :
சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள், எடைகள் மற்றும் அளவைகள் குறித்த சட்டம், கம்பெனிகள் பதிவு, கடன் வழங்கல் பற்றிய சட்டமியற்றல் உள்பட கடன் நிவாரணம் மற்றும் சீட்டு நிதி பற்றிய சட்டம் இயற்றுதல்.

15. கைத்தறித் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி :
கைத்தறி மற்றும் துணித் தொழில்.

16. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் :
பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.

17. வனத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி :
வனம், சின்கோனா மற்றும் சுற்றுச் சூழல் மாசுக் கட்டுப்பாடு

18. வீட்டு வசதித் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி :
வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி, நகர அமைப்பு திட்டமிடல் மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி.

| | |
|---|---|
| **6. Minister for Agriculture** | .. **The Hon. Thiru Veerapandi S. Arumugam:** Agriculture, Agricultural Engineering. Agro Service Co-operatives, Horticulture. Sugarcane Cess and Sugarcane Development. |
| **7. Minister for Public Works** | .. **The Hon. Thiru Duraimurugan:** Public Works, Irrigation including Minor Irrigation and Programme Works. |
| **8. Minister for Transport** | .. **The Hon. Dr. K. Ponmudi :** Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Chennai Metropolitan Development Authority. |
| **9. Minister for Highways** | .. **The Hon. Thiru Pasumpon Tha. Kiruttinan:** Highways and Ports. |
| **10. Minister for Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments** | .. **The Hon. Dr. M. Thamizhkudimagan:** Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments. |
| **11. Minister for Food, Public Distribution System and Co-operation** | .. **The Hon. Thiru K.N. Nehru:** Food, Price Control and Civil Supplies. Public Distribution System, Co-operation and Statistics. |
| **12. Minister for Milk** | .. **The Hon. Thiru K. Sundaram:** Milk and Dairy Development. Slum Clearance and Accommodation Control. |



| | |
|---|---|
| **13. Minister for Labour** | .. **The Hon. Thiru A. Rahman Khan:** Labour. Census. Employment and Training. Iron and Steel Control. Newsprint Control and Wakf. |
| **14. Minister for Law** | .. **The Hon. Thiru Aladi Aruna:** Law, Courts, Prisons. Legislation on Weights and Measures. Registration of Companies. Debt Relief including Legislation on Money lending and Legislation on Chits. |
| **15. Minister for Handlooms** | .. **The Hon. Thiru N.K.K. Periasamy:** Handlooms and Textiles. |
| **16. Minister for Backward Classes** | .. **The Hon. Thiru M.R.K. Panneerselvam:** Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas. Refugees and Evacuees. |
| **17. Minister for Forest** | .. **The Hon. Thiru Pongalur N. Palanisamy:** Forest. Cinchona and Environmental Pollution Control. |
| **18. Minister for Housing** | .. **The Hon. Thiru K. Pitchandi:** Housing. Rural Housing Development. Town Planning and Urban Development. |
| **19. Minister for Rural Industries and Registration** | .. **The Hon. Thiru I. Periasamy:** Rural Industries including Village and Cottage Industries. Registration and Stamp Act and Nutritious Meals. |

19. ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. இ. பெரியசாமி : கிராமக் குடிசைத் தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பதிவுத் துறை, முத்திரைத் தாள் சட்டம் மற்றும் சத்துணவு.

20. செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன் : செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல் மற்றும் திரைப் படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை மற்றும் அரசு அச்சகம்.

21. கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் : மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன் : கால்நடைப் பராமரிப்பு.

22. சமூக நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குண பாண்டியன் : மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், இரவலர் காப்பு இல்லம், அனாதை இல்லங்கள், குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம்.

23. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு : ஆதிதிராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்.

24. சுற்றுலாத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன் : சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.

25. கதர்த் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு : கதர் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்.

26. மீன் வளத் துறை அமைச்சர் : மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன் : மீன் வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்.



## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR—Justice Selvi M. FATHIMA BEEVI

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. **Chief Minister** .. **The Hon. Kalaignar M. Karunanidhi :** Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Home, Finance, Planning, Industries, Prohibition and Excise, Minorities Welfare, Passports and Commercial Taxes.

2. **Minister for Education..** **The Hon. Prof. K. Anbazhagan:** Education including Technical Education, Legislature, Elections, Electronics, Science and Technology, Sports and Youth Service Corps and Ex-Servicemen.

3. **Minister for Health and Electricity** .. **The Hon. Thiru Arcot N. Veerasamy:** Health, Medical Education and Family Welfare and Electricity.

4. **Minister for Revenue** .. **The Hon. Thiru Nanjil K. Manoharan:** Revenue, Board of Revenue, District Revenue Establishment and Deputy Collectors.

5. **Minister for Rural Development and Local Administration** .. **The Hon. Thiru Ko.Si. Mani:** Municipal Administration, Community Development, Panchayats, Panchayat Unions and Rural Indebtedness and Urban and Rural Water Supply.

| | |
|---|---|
| **20. Minister for Information, Publicity and Printing** | .. **The Hon. Thiru V. Mullaivendan:** Information and Publicity, Film Technology and Cinematography Act, Stationery and Printing and Government Press. |
| **21. Minister for Animal Husbandry** | .. **The Hon. Pulavar P.M. Senguttuvan:** Animal Husbandry. |
| **22. Minister for Social Welfare** | .. **The Hon. Tmt. S.P. Sarkunapandian:** Social Welfare including Women's and Children's Welfare, Beggars Home, Orphanages and Correctional Administration and Integrated Child Development Services Scheme. |
| **23. Minister for Adi-Dravidar and Tribal Welfare** | .. **The Hon. Thiru Samayanallur S. Selvarasu:** Adi-Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour. |
| **24. Minister for Tourism** | .. **The Hon. Thiru N. Suresh Rajan:** Tourism and Tourism Development Corporation. |
| **25. Minister for Khadi** | .. **The Hon. Thiru Andhiyur P. Selvarasu:** Khadi Board, Bhoodan and Gramdan. |
| **26. Minister for Fisheries** | .. **The Hon. Tmt. S. Jenefer Chandran:** Fisheries and Fisheries Development Corporation. |



# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்

பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

திரு. ரா. சேதுநாதன்

திரு. கு. மனோகரன்

திரு. வ. வேலுசாமி

திரு. சி. ஞானசேகரன்

திரு. நா. பெரியசாமி

திரு. முகம்மது கோதர் மைதீன்

செயலாளர்

திரு. டி. சாலமன் ஜெயபால்

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல்

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு. வெ. இராசாராமன், பி.எஸ்சி., பி.எல். | .. | கூடுதல் செயலாளர் |
| 2. | திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல். | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 3. | திருமதி பானுமதி ஆனந்தராஜன், பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| 4. | திரு. கா.ப. இராஜன், டி.ஆர்.எஸ்., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| 5. | திரு. இரா. வெங்கடேசன், எம்.ஏ., எல்.எல்.பி. | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 6. | திரு. கி. சாயிநாதன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 7. | திருமதி வீ.நா. உமா, பி.ஏ. | .. | குழு அலுவலர் |
| 8. | திருமதி பவானி சுப்பையா. பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 9. | திரு. சா. கணேசன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 10. | திரு. தி. திருமாவளவன், பி.எஸ்சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 11. | திரு. வெ. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.எல். | .. | பேரவைத் தலைவரின் சிறப்புத் தனிச் செயலர் |
| 12. | திரு. மு. ஆறுமுகப்பெருமாள், எம்.ஏ., பி.லிட். | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 13. | திரு. சு. ராஜகுரு | .. | குழு அலுவலர் |
| 14. | திரு. சௌரி அய்யாத்துரை | .. | பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர் |
| 15. | திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 16. | திரு. கோ. ஸ்ரீராமன். பி.காம். | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 17. | திரு. எம். ஜோபாய். பி.காம்.. பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 18. | திரு. இரா. முருகானந்தம். பி.எஸ்சி.. பி.எல். | .. | துணைச் செயலாளர் |

| | | |
|---|---|---|
| 19. | திரு. இல. மாரியப்பன், பி.ஏ. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 20. | திரு. ம. பிலிப், எம்.ஏ., பி.ஜி.எல். | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 21. | திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | சார்புச் செயலாளர் |
| 22. | திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். | சார்புச் செயலாளர் |
| 23. | திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல். | சார்புச் செயலாளர் |
| 24. | திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். | சார்புச் செயலாளர் |
| 25. | திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ.,பி.எல். | சார்புச் செயலாளர் |
| 26. | திருமதி என். துளசிபாய், பி.ஏ. | சார்புச் செயலாளர் |
| 27. | திரு. கோ. ரவீந்திரன், எம்.ஏ., பி.ஜி.எல். | சார்புச் செயலாளர் |
| 28. | திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. | சார்புச் செயலாளர் |
| 29. | திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். | சார்புச் செயலாளர் |
| 30. | திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | சார்புச் செயலாளர் |
| 31. | திருமதி சி. கனகவல்லி, டி.சி.பி. | தலைமை நிருபர் |
| 32. | திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ. | தலைமை நிருபர் |
| 33. | திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். | சார்புச் செயலாளர் |
| 34. | திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | சார்புச் செயலாளர் |
| 35. | திருமதி கே. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | சார்புச் செயலாளர் |
| 36. | திரு. நா. நடராஜன், பி.ஏ. | தலைமை நிருபர் |
| 37. | திருமதி என். மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். | சார்புச் செயலாளர் |
| 38. | திரு. மு. பொன்னுரங்கம், எம்.ஏ., பி.எல். | தலைமை நிருபர் |
| 39. | திரு. தி. உமாபதி, பி.ஏ. | தலைமை நிருபர் |



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

### உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி)

### பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. | திருவாரூர் (செ.வ.) |
| 2. | அந்தியூர் ப. செல்வராசு, திரு. | அந்தியூர் (செ.வ.) |
| 3. | அபுல்ஹசன், திரு. எம்.எம்.எஸ். | மயிலாடுதுறை |
| 4. | அப்துல் நாசர், திரு. அ.வ. | புவனகிரி |
| 5. | அப்துல் லத்தீப், திரு. ம. | வாணியம்பாடி |
| 6. | அப்பாவு, திரு. மு. | ராதாபுரம் |
| 7. | அமரமூர்த்தி, திரு. டி. | அரியலூர் |
| 8. | அய்யலுசாமி, திரு. வி. | கோவில்பட்டி |
| 9. | அருண்குமார், திரு. பா. | மேட்டுப்பாளையம் |
| 10. | அழகராஜா, திரு. என்.ஆர். | தேனி |
| 11. | அழகிரி, திரு. ச. | சிதம்பரம் |
| 12. | அழகுவேலு, திரு. ச. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 13. | அன்பழகன், திரு. வ. | செய்யார் |
| 14. | அன்பழகன், பேராசிரியர் க. | துறைமுகம் |
| 15. | அன்பில் பொய்யாமொழி, திரு. | திருச்சிராப்பள்ளி-2 |
| 16. | ஆசையன், திரு. பெ. | ஆண்டிப்பட்டி |
| 17. | ஆண்டமுத்து, திரு. வெ.அ. | பவானிசாகர் |
| 18. | ஆண்டி அம்பலம், திரு. எம். | நத்தம் |
| 19. | ஆருண் ரஷீத், திரு. ஜெ.எம். | வில்லிவாக்கம் |
| 20. | ஆலடி அருணா, திரு. | ஆலங்குளம் |

21. ஆல்பன், டாக்டர் வே. .. திருவட்டாறு
22. ஆவுடையப்பன், திரு. இரா. .. அம்பாசமுத்திரம்
23. ஆறுமுகம், திரு. தி.ப. .. திருச்செங்கோடு
24. ஆற்காடு நா. வீராசாமி, திரு. .. அண்ணா நகர்
25. ஆனந்தன், திரு. பால. .. வந்தவாசி (செ.வ.)
26. இரகுமான்கான், திரு. அ. .. இராமநாதபுரம்
27. இராசமாணிக்கம், திரு. க.வெ.வீ. .. மேலூர்
28. இராசமாணிக்கம், திரு. பி. .. ஒரத்தநாடு
29. இராசன், திரு. வி. பி. .. ராஜபாளையம் (செ.வ.)
30. இராசேந்திரன் என்கிற தீரன், திரு. ஆ. .. ஆண்டிமடம்
31. இராமசாமி, டாக்டர் வை. .. பண்ருட்டி
32. இராமசாமி, திரு. கே.ஆர். .. திருவாடனை
33. இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். .. கம்பம்
34. இராமச்சந்திரன், திரு. சி. இரா. .. தொண்டாமுத்தூர்
35. இராமச்சந்திரன், திரு. மா. .. திருவோணம்
36. இராமலிங்கம், திரு. ஏ. .. காட்டுமன்னார்கோவில் (செ.வ.)
37. இராமலிங்கம், திரு. செ. .. திருவிடைமருதூர்
38. இராமன், டாக்டர் இ. எஸ். எஸ். .. பள்ளிப்பட்டு
39. இராமஜெயம், திரு. ந.பூ. .. மயிலாப்பூர்
40. இராஜ ரெட்டி, திரு. ச. .. தளி
41. இராஜேந்தர், திரு. டி. .. பூங்கா நகர்
42. இளங்கோ, திரு. கோ. .. அவினாசி (செ.வ.)
43. ஈஸ்வரன், திரு. ரா. .. வாசுதேவநல்லூர் (செ.வ.)



44. உதயசூரியன், திரு. தா. .. சங்கராபுரம்
45. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். .. தஞ்சாவூர்
46. கணேசன், திரு. ஐ. .. எடப்பாடி
47. கணேசன், திரு. கே. சி. .. ஜெயங்கொண்டம்
48. கருணாநிதி, கலைஞர் மு. .. சேப்பாக்கம்
49. கருப்பசாமி, திரு. சொ. .. சங்கரநயினார்கோவில் (செ.வ.)
50. கருப்பண்ண உடையார், திரு. ந. .. பாபநாசம்
51. கருப்புசாமி, திரு. டி. .. உப்பிலியாபுரம் (ஆ.வா.)
52. கன்னையன், திரு. க. .. தொட்டியம்
53. காஞ்சனா கமலநாதன், டாக்டர் .. கிருஷ்ணகிரி
54. காந்தி, திரு. ஆர். .. இராணிப்பேட்டை
55. கிருஷ்ணசாமி, டாக்டர் க. .. ஒட்டப்பிடாரம் (செ.வ.)
56. கிருஷ்ணன், திரு. எஸ். வி. .. நாங்குநேரி
57. கிருஷ்ணன், திரு. சீ. வெ. .. வேடசந்தூர்
58. குண்டன், திரு. டி. .. உதகமண்டலம்
59. குத்தாலம் பி. கல்யாணம், திரு. .. குத்தாலம்
60. குமாரதாஸ், டாக்டர் தே. .. கிள்ளியூர்
61. குழந்தை தமிழரசன், திரு. .. விருத்தாசலம்
62. கோதண்டம், திரு. ஏ. .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
63. கோபால், திரு. பா. .. மேட்டூர்
64. கோபு, திரு. சி. .. அணைக்கட்டு
65. கோமதி சீனிவாசன், திருமதி .. வலங்கைமான் (செ.வ.)
66. கோவிந்தன், திரு. ப. .. தாரமங்கலம்

67. கோவிந்தன், திரு. வெ. .. பேரணாம்பட்டு (செ.வ.)
68. சக்ரபாணி, திரு. ஆர். .. ஒட்டன்சத்திரம்
69. சண்முகம், திரு. கோ. .. திருப்பத்தூர்
70. சண்முகம், திரு. சி. .. ஆலந்தூர்
71. சண்முகம், திரு. ம. .. கிணத்துக்கடவு
72. சந்தானம், திரு. லா. .. சோழவந்தான்
73. சந்திரசேகரன், திரு. சி. .. சேந்தமங்கலம் (ஆ.வா.)
74. சந்திரசேகரன், திரு. துரை. .. திருவையாறு
75. சமயநல்லூர் எஸ். செல்வராசு, திரு. .. சமயநல்லூர் (செ.வ.)
76. சம்பத், திரு. ஏ.ஜி. .. முகையூர்
77. சரஸ்வதி, திருமதி ஆர். .. தாராபுரம் (செ.வ.)
78. சற்குணபாண்டியன், திருமதி எஸ்.பி. .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
79. சாமிநாதன், திரு. மு.பெ. .. வெள்ளக்கோவில்
80. சிங்காரவேலு, திரு. வி.பி. .. வால்பாறை (செ.வ.)
81. சிவபுண்ணியம், திரு. வை. .. மன்னார்குடி
82. சிவராமன், திரு. ஆர். .. திருப்பத்தூர்
83. சிவராஜ், திரு. சு. .. ரிஷிவந்தியம்
84. சிவலிங்கம், திரு. எஸ்.ஆர். .. பனமரத்துப்பட்டி
85. சிவானந்தம், திரு. ஆர். .. ஆரணி
86. சிவாஜி, திரு. இ.ஏ.பி. .. திருத்தணி
87. சின்னய்யா, திரு. வெ. .. திருமயம்
88. சீனிவாசன், திரு. ஏ.ஆர்.ஆர். .. விருதுநகர்



89. சுகவனம், திரு. இ.ஜி. .. பர்கூர்
90. சுடலைமுத்து, திரு. அ. .. போடிநாயக்கனூர்
91. சுதர்சனம், திரு. டி. .. பூந்தமல்லி
92. சுந்தரம், திரு. க. .. பொன்னேரி (செ.வ.)
93. சுந்தரம், திரு. ந. .. காரைக்குடி
94. சுந்தரம், திரு. பி.ஆர். .. ராசிபுரம்
95. சுந்தர், திரு. கே. .. உத்திரமேரூர்
96. சுப்பராயன், திரு. கே. .. திருப்பூர்
97. சுப்பிரமணி என்கிற சி.சு.மணி, திரு. சி. .. திருவள்ளூர்
98. சுப்பிரமணி, திரு. பி.என். .. ஆற்காடு
99. சுப்பிரமணியன், திரு. அ.லெ. .. திருநெல்வேலி
100. சுப்புலட்சுமி செகதீசன், திருமதி .. மொடக்குறிச்சி
101. சுரேஷ் ராஜன், திரு. என். .. கன்னியாகுமரி
102. செங்குட்டுவன், புலவர் பூ.ம. .. மருங்காபுரி
103. செங்கை சிவம், திரு. .. பெரம்பூர் (செ.வ.)
104. செல்லக்குமார், டாக்டர் அ. .. தியாகராய நகர்
105. செல்வம், திரு. ரெ. .. குளித்தலை
106. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன், திரு. .. கொளத்தூர் (செ.வ.)
107. செல்வராஜ், திரு. து. .. உடுமலைப்பேட்டை
108. சேகரன், திரு. ஆர்.ஆர். .. ஓமலூர்
109. சேதுநாதன், திரு. ரா. .. திண்டிவனம்
110. சைதை கா. கிட்டு, திரு. .. சைதாப்பேட்டை

| | | |
|---|---|---|
| 111. சொக்கர், திரு. ஆர். | .. | சிவகாசி |
| 112. சொக்கலிங்கம், திரு. ஜி. | .. | திருப்போரூர் (செ.வ.) |
| 113. ஞானசேகரன், டாக்டர் ஆ. | .. | மேல்மலையனூர் |
| 114. ஞானசேகரன், திரு. சி. | .. | வேலூர் |
| 115. டேவிட் செல்வின், திரு. எஸ். | .. | ஸ்ரீவைகுண்டம் |
| 116. தங்கமணி, திரு. கே. | .. | மானாமதுரை (செ.வ.) |
| 117. தங்கம் தென்னரசு, திரு. | .. | அருப்புக்கோட்டை |
| 118. தங்கவேலன், திரு. சுப. | .. | கடலாடி |
| 119. தங்கவேல், திரு. அ. ல. | .. | சேலம்-2 |
| 120. தண்டபாணி, திரு. சி. டி. | .. | கோயம்புத்தூர் மேற்கு |
| 121. தமிழ்க்குடிமகன், முனைவர் மு. | .. | இளையான்குடி |
| 122. தமிழ்ச்செல்வன், திரு. ஆர். | .. | அரக்கோணம் (செ.வ.) |
| 123. தமிழ்மணி, திரு. வீ. | .. | செங்கல்பட்டு |
| 124. தளபதி, திரு. கோ. | .. | சேடப்பட்டி |
| 125. தனபாலன், திரு. கே.ஆர்.ஜி. | .. | சேலம்-1 |
| 126. தனபால், திரு. வி. ஜி. | .. | குடியாத்தம் |
| 127. தாமரைக்கனி, திரு. இரா. | .. | ஸ்ரீவில்லிபுத்தூர் |
| 128. திசைவீரன், திரு. உ. | .. | பரமக்குடி (செ.வ.) |
| 129. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. | .. | பேராவூரணி |
| 130. திருநாவுக்கரசு, திரு. எஸ். | .. | அறந்தாங்கி |
| 131. திருவேங்கடம், திரு. பெ.சு. | .. | கலசப்பாக்கம் |
| 132. துரைசாமி, திரு. பா. | .. | வரகூர் (செ.வ.) |
| 133. துரை. திரு. கே. | .. | திருவெறும்பூர் |
| 134. துரைமுருகன், திரு. | .. | காட்பாடி |



| | | |
|---|---|---|
| 135. தெய்வநாயகம், திரு. எ. | .. | மதுரை மத்தி |
| 136. தேவராஜன், டாக்டர் மு. | .. | பெரம்பலூர் (செ.வ.) |
| 137. நடராசன், திரு. ஆ. | .. | பேரூர் |
| 138. நடராஜன், திரு. த. | .. | செஞ்சி |
| 139. நயினா முகமது, திரு. கோ. | .. | கடையநல்லூர் |
| 140. நன்னன், திரு. கொ.வீ. | .. | செங்கம் (செ.வ.) |
| 141. நாகரத்தினம், திரு. ச. | .. | கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 142. நாஞ்சில் கி. மனோகரன், திரு. | .. | திருவல்லிக்கேணி |
| 143. நிஜாமுதீன், திரு. ஜி. | .. | நாகப்பட்டினம் |
| 144. நெல்லிக்குப்பம் அ. மணி, திரு. | .. | நெல்லிக்குப்பம் |
| 145. நேரு, திரு. கா.நா. | .. | லால்குடி |
| 146. பசும்பொன் தா. கிருட்டிணன், திரு. | .. | சிவகங்கை |
| 147. பத்மா, டாக்டர் | .. | நன்னிலம் (செ.வ.) |
| 148. பரணிகுமார், திரு. பா. | .. | திருச்சிராப்பள்ளி-1 |
| 149. பரிதி இளம்வழுதி, திரு. | .. | எழும்பூர் (செ.வ.) |
| 150. பழனிசாமி, திரு. ஜி. | .. | திருத்துறைப்பூண்டி (செ.வ.) |
| 151. பழனிவேல் ராஜன், திரு. பி.டி.ஆர். | .. | மதுரை மேற்கு |
| 152. பன்னீர்செல்வம், திரு. எம். ஆர்.கே. | .. | குறிஞ்சிப்பாடி |
| 153. பன்னீர்செல்வம், திரு. மு. | .. | சீர்காழி (செ.வ.) |
| 154. பாண்டுரங்கன், திரு. ந. | .. | பெரணமல்லூர் |
| 155. பாலகிருஷ்ணன். திரு. சோ. | .. | முதுகுளத்தூர் |
| 156. பாலசுப்பிரமணியன். திரு. எஸ்.என். | .. | பவானி |
| 157. பாலசுப்பிரமணியன். திரு. ப. | .. | பட்டுக்கோட்டை |

158. பிச்சாண்டி, திரு. கு. .. திருவண்ணாமலை
159. புகழேந்தி, திரு. இ. .. கடலூர்
160. புரட்சிமணி, திரு. ச. .. மங்களூர் (செ.வ.)
161. பூவேந்தன், திரு. த. .. பழனி (செ.வ.)
162. பெரியசாமி, திரு. இ. .. ஆத்தூர்
163. பெரியசாமி, திரு. என். .. தூத்துக்குடி
164. பெரியசாமி, திரு. என்.கே.கே. .. ஈரோடு
165. பெரியசாமி, திரு. நா. .. பெருந்துறை
166. பெருமாள், திரு. வி. .. ஏற்காடு (ஆ.வா.)
167. பெர்னார்டு, திரு. இரா. .. குளச்சல்
168. பொங்கலூர் நா. பழனிசாமி, திரு. .. சிங்காநல்லூர்
169. பொன்முடி, டாக்டர் க. .. விழுப்புரம்
170. பொன்முடி, திரு. எஸ்.எஸ். .. பல்லடம்
171. பொன்னம்மாள், திருமதி ஏ.எஸ். .. நிலக்கோட்டை (செ.வ.)
172. மகேந்திரன், திரு. இரா. .. நாட்ராம்பள்ளி
173. மணிக்கண்ணன், திரு. ஆ.செ. .. திருநாவலூர்
174. மணி, டாக்டர் அ. .. உளுந்தூர்பேட்டை (செ.வ.)
175. மணி, திரு. கோ.சி. .. கும்பகோணம்
176. மணி, திரு. டி. .. விளவங்கோடு
177. மணி, திரு. ஜி.கே. .. பெண்ணாகரம்
178. மணி நாடார், திரு. எஸ்.எஸ். .. சாத்தான்குளம்
179. மணிமாறன், திரு. இரா. .. திண்டுக்கல்



180. மணிவர்மா, திரு. க. .. தண்டராம்பட்டு
181. மதிவாணன், திரு. இரா. .. இராயபுரம்
182. மதிவாணன், திரு. செ. .. அச்சரப்பாக்கம் (செ.வ.)
183. மனோகரன், திரு. கு. .. தர்மபுரி
184. மாயவன், திரு. தி.ப. .. ஸ்ரீரங்கம்
185. மாரி அய்யா, திரு. பே. .. புதுக்கோட்டை
186. மாரிமுத்து, திரு. அ. .. வானூர் (செ.வ.)
187. முகம்மது இஸ்மாயில், திரு. எஸ்.எஸ். .. அரவக்குறிச்சி
188. முகம்மது கோதர் மைதீன், திரு. .. பாளையங்கோட்டை
189. முத்து, திரு. வி. .. சங்கரி (செ.வ.)
190. முத்துராமலிங்கம், திரு. ம. .. திருமங்கலம்
191. முபாரக், திரு. பா.மு. .. கூடலூர்
192. முருகேசன், திரு. பொ. .. காஞ்சிபுரம்
193. முல்லைவேந்தன், திரு. வ. .. மொரப்பூர்
194. முனிரத்தினம், திரு. ஆ.மு. .. சோளிங்கர்
195. மூக்கப்பன், திரு. இரா. .. சின்னசேலம்
196. மூக்கையா, திரு. எல். .. பெரியகுளம்
197. மோகனதாசன், திரு. கோ. .. பூம்புகார்
198. மோகன் கந்தசாமி, திரு. ப. .. பொங்கலூர்
199. மோசஸ், டாக்டர் எம். .. நாகர்கோவில்
200. ரங்கநாதன். திரு. எம். .. குன்னூர் (செ.வ.)
201. ரங்கநாதன். திரு. ப. .. புரசைவாக்கம்
202. ரவி அருணன். திரு. கே. .. தென்காசி

| | | |
|---|---|---|
| 203. ரவிசங்கர், திரு. கு. | .. | விளாத்திகுளம் |
| 204. ராசேந்திரன், திரு. ஏ. | .. | போளூர் |
| 205. ராணி, செல்வி க. | .. | தலைவாசல் (செ.வ.) |
| 206. ராமசாமி, திரு. ஏ.எம். | .. | ஆத்தூர் |
| 207. ராமச்சந்திரன், திரு. செ. | .. | திருப்பரங்குன்றம் |
| 208. ராஜு, திரு. எஸ். | .. | பொள்ளாச்சி |
| 209. ராஜேந்திரன், திரு. எஸ்.கே. | .. | சத்தியமங்கலம் |
| 210. ராஜ்குமார் மன்றாடியார், திரு. என்.எஸ். | .. | காங்கேயம் |
| 211. லட்சுமணன், திரு. வி.கே. | .. | கோயம்புத்தூர் கிழக்கு |
| 212. வல்லரசு, திரு. பி.என். | .. | உசிலம்பட்டி |
| 213. வாசுகி முருகேசன், திருமதி | .. | கரூர் |
| 214. விஜயகுமார், திரு. கே.எம். | .. | சாத்தூர் |
| 215. விஜயன், திரு. டி.சி. | .. | திருவொற்றியூர் |
| 216. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. | .. | வீரபாண்டி |
| 217. வீரப்பன், திரு. கே.கே. | .. | கபிலர்மலை |
| 218. வெங்கடசாமி, திரு. பி. | .. | ஓசூர் |
| 219. வெங்கடாசலம், திரு. அ. | .. | ஆலங்குடி |
| 220. வெங்கடாசலம், திரு. ஜி.எல். | .. | பாலக்கோடு |
| 221. வெங்கடேசன், திரு. ச. க. | .. | மதுராந்தகம் |
| 222. வெங்கடேசன், திரு. பி.வி.எஸ். | .. | காவேரிப்பட்டினம் |
| 223. வெங்கிடு, திரு. ஜி. பி. | .. | கோபிச்செட்டிப் பாளையம் |
| 224. வேடம்மாள், திருமதி ஏ.ஆர். | .. | அரூர் (செ.வ.) |



| | | |
|---|---|---|
| 225. வேணு, கும்மிடிப்பூண்டி திரு. கி. | .. | கும்மிடிப்பூண்டி |
| 226. வேதரத்தினம், திரு. எஸ்.கே. | .. | வேதாரண்யம் |
| 227. வேலாயுதன், திரு. சி. | .. | பத்மநாபபுரம் |
| 228. வேலுசாமி, திரு. வ. | .. | மதுரை கிழக்கு |
| 229. வேல்சாமி, திரு. க. | .. | நாமக்கல் (செ.வ.) |
| 230. வேல்துரை, திரு. பா. | .. | சேரன்மகாதேவி |
| 231. வைதியலிங்கம், திரு. மீ.அ. | .. | தாம்பரம் |
| 232. ஜெனிபர் சந்திரன், திருமதி எஸ். | .. | திருச்செந்தூர் |
| 233. ஜோதிகண்ணன், திரு. மு.ந. | .. | முசிறி |
| 234. ஸ்டாலின், திரு. மு.க. | .. | ஆயிரம் விளக்கு |
| 235. ஆன் டி' மான்டி, திருமதி | .. | நியமனம் |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. கே.வி. வெங்கடபதி .. அரசு தலைமை வழக்கறிஞர்

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

### கார்த்திகை 10, வெகுதான்ய - திருவள்ளுவர் ஆண்டு 2029
### 1998 நவம்பர் 25, புதன்கிழமை

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** *அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்*
*உடையானாம் வேந்தர்க் கொளி"*

*நல்வாழ்வுக்கு வேண்டியவற்றை வழங்கியும், நிலையுணர்ந்து கருணை காட்டியும், நடுநிலை தவறாமல் ஆட்சி நடத்தியும், மக்களைப் பேணிக் காப்பதே ஓர் அரசுக்குப் புகழொளி சேர்ப்பதாகும்.*

## 1. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினாக்கள்-விடைகள், வினா எண் 41, திரு. பி. வெங்கடசாமி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

**41—**

### வெளிநாடுகளுக்கு மலர்கள் ஏற்றுமதி

***13652—திரு. பி. வெங்கடசாமி:**

*மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய ரோஜா மற்றும் பிற மலர்களை வளர்க்க ஓசூர் தாலுகாவில் தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தினால் ஒரு மலர்த்தோட்டம் அமைக்க, கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரங்கள் என்ன?*

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்**: தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) மலர்ச் செடி வகை வளர்ப்பு அடிப்படைக் கட்டமைப்புப் பூங்கா ஒன்றினை ஓசூர் பகுதியில் சுமார் 200 ஏக்கர் பரப்பளவில் ரூ. 20 கோடி திட்டச் செலவில் அமைக்க அரசு நிறுவனமான 'TIDCO' நடவடிக்கை எடுத்து வருகிறது. சக தொழில் முனைவர் (Co-promoter) விரைவில் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1999 ஆம் ஆண்டின் முற்பகுதியில் வணிக அளவிலான பணிகள் தொடங்கக் கருதப்பட்டுள்ளது.

**THIRU B. VENKATASAMY:** There are a large number of flower growers in Hosur. They are not in a position to export the roses to other nations, as there is no infrastructural facility. May I know from the Hon. Chief Minister whether this project will provide infrastructural facilities to those who are growing roses and other flowers?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தந்த கேள்வியின் அடிப்படையிலேதான், அங்கே infrastructure போன்றவற்றையெல்லாம் சரிபார்த்து ஒரு பூங்காவை அமைப்பதற்கு அரசு முடிவு எடுத்து 'TIDCO' மூலமாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதற்கான Co-promoters இன்னும் தேர்ந்தெடுக்கப்படவில்லை. அந்தப் பணி முற்றுப்பெற்றதும், மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட infrastructure எல்லாம் நல்லமுறையிலே அந்தப் பகுதியிலே இருக்கின்ற காரணத்தினால், உடனடியாக அந்தப் பணி தொடங்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 42, திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**42—**

**காவலர்களுக்குக் குடியிருப்புகள்**

***15077—திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) அரவக்குறிச்சியில் காவலர்களுக்குக் குடியிருப்புகள் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது எப்போது கட்டப்படும்?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்**: தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அரசு ஆணை (நிலை) எண் 332, உள் துறை, நாள் 21-3-1998-இல், 1998-99 ஆம் ஆண்டில் காவல் துறைக்குச் சொந்தமான இடங்களில் 2,500 காவலர் குடியிருப்புகளை தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம் மூலம் கட்டுவதற்கு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. அரவக்குறிச்சியில் உள்ள காவலர்களுக்குக் குடியிருப்புகள் கட்ட தற்போது நிலம் கைவசம் இல்லை. எனவே, அங்கு காவலர்களுக்குக் குடியிருப்புகள் கட்ட நிலம் கையகப்படுத்தப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. நிலம் கையகப்படுத்தப்பட்ட பின்னர், குடியிருப்புகள் கட்டித்தரத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரவக்குறிச்சியிலுள்ள காவல் நிலையக் கட்டடம் ஆங்கிலேயர் காலத்தில் கட்டப்பட்டது. அங்கு ஓர் ஆய்வாளரும், ஓர் உதவி ஆய்வாளரும் மற்றும் காவலர்களும் பணிபுரிந்து வருகிறார்கள். அங்கே இருக்கும் குடியிருப்புகளில் நாட்டு ஓடுகள் வேயப்பட்டுள்ளன. பலமுறை அவை பழுதுபார்க்கப்பட்டிருக்கின்றன. அங்கு போதுமான இடம் இருக்கின்ற காரணத்தினால், அந்த இடத்திலேயே அடுக்குமாடிக் கட்டடம் கட்டலாம். காவல் நிலையத்து பின்புறமேகூட நிலம் காலியாக இருக்கிறது. மேலும் N.H. 7 ரோட்டிலே சந்தைக்கு அருகில் அரசாங்கத்தினுடைய புறம்போக்கு நிலம் இருப்பதாக தாசில்தார் மூலம் தகவல் தெரிய வருகிறது. எனவே, அருள்கூர்ந்து எனது தொகுதியில் இருக்கின்ற காவல் நிலையத்தைப் புதிதாக அமைக்கவும், காவலர்களுக்குக் குடியிருப்புகளைக் கட்டிக் கொடுப்பதற்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனிக் கவனம் செலுத்தி அவற்றைச் செய்து கொடுப்பார்களா என்று பணிவன்புடன் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவருடைய கேள்விக்கு என்னுடைய முதல் பதிலிலேயே விடை இருப்பதாக நம்புகின்றேன். காவலர்கள் குடியிருப்புகளைக் கட்ட அங்கே நிலம் கையகப்படுத்தப்பட நடவடிக்கை

எடுக்கப்பட்டு வருகிறது என்றுதான் பதில் சொல்லி இருக்கின்றேன். நிலம் இல்லை, ஆகவே கட்டப்படாது என்று நான் குறிப்பிடவில்லை. இருக்கின்ற நிலம் பற்றிய விவரங்களையும், அதை எடுப்பது குறித்த வசதிகளையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எனக்கு ஒரு கடிதம் மூலம் குறிப்பிட்டு அனுப்புவாரேயானால், அதுவும் காவல் துறைக்கு அனுப்பப்பட்டு கவனிக்கப்படும்.

முற்பகல் 9-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. குத்தாலம் பி. கல்யாணம்.

**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவலர் குடியிருப்பு கட்டுவதற்கு நிலம் கையகப்படுத்தப்பட்டு பல ஆண்டுகாலமாகக் கட்டப்படாமல் உள்ள நாகை மாவட்டம் குத்தாலத்தில் காவலர் குடியிருப்பு கட்ட மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இந்த பல ஆண்டுகால இடைவெளியில் ஒரு நாளாவது உறுப்பினர் என்னிடத்திலே முறையிட்டாரா என்று நான் அவரைக் கேட்கிறேன். (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் 2,400 குடியிருப்புகளுக்குத் திட்டமிட்டிருப்பதாக அறிவித்திருக்கிறார்களே, அது மாவட்ட வாரியாக அறிவிக்கப்பட்டிருக்கிறதா? திருவாரூர் மாவட்டம், மன்னார்குடிக்குக் காவலர் குடியிருப்பு வேண்டுமென்று கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. அங்கேயிருக்கின்ற குடியிருப்புகள் மிகப் பழமையானதாகவும், பயன்படுத்தக்க வகையிலே இல்லாத சூழ்நிலையிலும் இருக்கின்ற காரணத்தால் அங்கே காவலர்களுக்கான குடியிருப்பும், அதிகாரிகளுக்கான குடியிருப்பும் கட்ட நடவடிக்கை எடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இதற்கு பொதுவான ஒரு பதிலைச் சொன்னால் பொருந்தும் என்று கருதுகின்றேன். தற்போது காவல் துறையிலே பணியாற்றுகின்ற



சற்றொப்ப 86,000 காவல் பணியாளர்களில் 28,824 காவல் பணியாளர்களுக்குக் குடியிருப்புகள் வழங்கப்பட்டுவிட்டன. அது காவலர் குடியிருப்புக்கான தேவையிலே 34 சதவீதமாகும். தற்போது கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்ற குடியிருப்புகள் 6,570. அவை விரைவில் கட்டி முடிக்கப்படும். கட்டி முடிக்கப்பட்ட பிறகு, அந்தத் தேவையிலே 41 சதவீதம் பூர்த்தி செய்யப்படும். அதற்கு இடையிலே அவர்கள் குறிப்பிடுகின்ற பகுதிகள் வருமேயானால், அங்கும் விரைவிலே முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவலர்களுக்கான குடியிருப்புகளிலே மிகப் பழமையான குடியிருப்புகள் நிறைய இருக்கின்றன. குறிப்பாக எங்கள் பகுதியிலே திருத்தணியை எடுத்துக்கொண்டால்கூட, பல ஆண்டுகளுக்கு முன்பாக, 30, 35 ஆண்டுகளுக்கு முன்பாகக் கட்டப்பட்ட குடியிருப்புகள் எல்லாம் பழுதடைந்திருக்கின்றன. இப்போது வீட்டுவசதி அமைப்பிலே பெரும் மாற்றம் வந்திருக்கிறது. ஆகவே, பழுதடைந்த குடியிருப்புகளை இடித்துவிட்டு, புதிய குடியிருப்புகளை நவீன முறையிலே கட்டித்தர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல் அப்படி இருக்குமேயானால், அவை எல்லாம் பட்டியல் இடப்பட்டு, அவையும் பழுதுபார்க்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவலர்களுக்குக் குடியிருப்புகள் கட்டும்போது காவலர்கள்தான் குடியிருக்கிறார்கள். S.P. போன்றவர்களுக்கு—சிலயிடங்களில் அரசுக் கட்டடங்கள் இருக்கின்றன. Deputy S.P.-Inspector, Sub-Inspector, இவர்கள் எல்லாம் வாடகைக் கட்டடங்களில்தான் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட இடங்களில் எல்லாம் காவலர் குடியிருப்புக் கட்டும்போது, S.P., Deputy S.P., Inspector, Sub-Inspector என எல்லோரும் ஒருங்கே அங்கே குடியிருக்கிற மாதிரி இனிமேல் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா? அதுமட்டுமல்லாமல் ஆங்கிலேயர்கள் காலத்தில் கட்டப்பட்ட ஓட்டுக் குடியிருப்புகள்தான் இருக்கின்றன. ஓடெல்லாம் கீழே போய் விட்டதால்,

அங்கே குடியிருக்காமல், வாடகை வீட்டில்தான் காவலர்கள் எல்லாம் குடியிருக்கிறார்கள். அப்போது கட்டிய கட்டடங்களில் எல்லாம் குடிநீர் வசதி கிடையாது. பொதுக் கழிப்பிடம்தான் இருக்கிறது. தனியாக ஒவ்வொரு வீட்டோடும் சேர்ந்த கழிப்பிடமே இல்லை. மின்சார வசதிகூட இல்லாமல் இருக்கிறது. ஆகவே, பழைய காலத்தில், ஆங்கிலேயர் காலத்தில் கட்டப்பட்ட கட்டடங்களையெல்லாம் அகற்றி, நவீனக் கழிப்பிடம், குடிநீர் வசதியோடு கூடிய அடுக்குமாடிக் கட்டடங்களைக் கட்ட அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கேள்விக்கு மொத்தமாகவே என்னிடத்தில் உள்ள குறிப்புகளைப் படித்தால் விடை கிடைத்துவிடும் என்று நம்புகின்றேன். சென்னையிலே, காவலர் முதல் ஆய்வாளர் வரையிலும், மற்ற மாவட்டங்களில், காவலர் முதல் உதவி ஆய்வாளர் வரையிலும் இந்த இலவசக் குடியிருப்பில் வசிப்பதற்குத் தகுதி வாய்ந்தவர்கள். இதில் அவரது முதல் கேள்விக்குப் பதில் அடங்கியிருக்கிறது. எனவே, காவலர்களுக்குக் குடியிருப்பு வசதி செய்து தரப்படும்போது அவர்களிடமிருந்து வாடகைப் பிடித்தம் செய்யப்படுவதில்லை. இதர வேறு அலுவலர்களுக்கு வீட்டு வாடகைப்படி வழங்கப்பட்டு, அரசால் நிர்ணயிக்கப்பட்ட விகிதாச்சார அடிப்படையில் வீட்டு வாடகை பிடித்தம் செய்யப்படுகிறது. அனைத்துக் காவலர் குடியிருப்புகளுக்கும் மின்சார வசதி செய்து தரப்பட்டுள்ளது. இன்னமும் 11,140 காவலர் குடியிருப்புகளுக்கு மின் விசிறி வசதி செய்து தர, அரசு ஆணை 799, நாள் 18-6-1998-இல் ரூ. 1.67 கோடி செலவு அனுமதிக்கப்பட்டு, இந்தப் பணி தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணி இந்த ஆண்டு இறுதிக்குள் முடிவடையும். தனி மீட்டர் வசதி இல்லாத 13,932 காவலர் குடியிருப்புகளுக்கு, தனி மீட்டர் ரூ. 4.18 கோடி செலவில் பொருத்த அரசு ஆணை இடப்பட்டிருக்கிறது. 30-5-1997-இல் ஆணையிடப்பட்டு, இந்தப் பணிகள் முடிவடையும் தருவாயில் உள்ளன. காவலர் குடியிருப்புகள் அனைத்திற்கும், குடியிருப்பு ஒன்றுக்கு, மாதம் ஒன்றுக்கு, 20 யூனிட் மின்சாரம் இலவசமாகத் தரப்பட்டுள்ளது. இதற்கான ஆணை 26-5-1969-லேயே வெளியிடப்பட்டிருக்கின்றது. அனைத்துக் காவலர் குடியிருப்புகளுக்கும் குடிநீர் வசதி செய்து தரப்பட்டுள்ளது. 2,751 காவலர் குடியிருப்புகளில் அரசாணை எண் 884-ன்படி., 12-6-1997-இல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 5.23 கோடி ரூபாய் செலவில் நவீனக்



கழிப்பிட வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இவைதான் அவருடைய கேள்விக்கு மொத்தமாக விரிவான பதில்.

முற்பகல் 9-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குக் காவல் நிலையங்கள் கிராமப்புறங்களிலே நிறைய உள்ளன. கிராமப்புறங்களிலே காவலர்கள் தங்குவதற்கு வாடகை வீடுகூட கிடைப்பதில்லை. எனவே, கிராமப்புறங்களிலே உள்ள காவல் நிலையங்களிலே இருக்கின்ற காவலர்களுக்கு முன்னுரிமை கொடுத்து, வீடு கட்டுகின்ற திட்டத்தை முதல்வர் அவர்கள் செயல்படுத்துவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, காவலர் வீட்டுவசதிக் கழகத்தின் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் இங்கே எடுத்துக்கூறிய அந்தக் குறைபாட்டைக் களைவதற்குப் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 43, திரு. வை. சிவபுண்ணியம், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

43—

## நூலகம் அமைத்தல்

***7479—திரு. வை. சிவபுண்ணியம்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி ஒன்றியம், ஆலங்கோட்டை கிராமத்தில் நூலகம் ஒன்று அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நடைமுறையிலுள்ள விதிகளின்படி ஒரு கிராமத்தில் கிளை நூலகம் ஏற்படுத்துவதற்கு அடிப்படையாக, அக்கிராமத்தில் மக்கள் தொகை குறைந்தபட்சம் 5,000 ஆக இருக்க வேண்டும். மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி ஆலங்கோட்டை கிராமத்தின் மக்கள்

[1998 நவம்பர் 25

தொகை 3,212 ஆக உள்ளது. எனவே, தற்சமயம் இக்கிராமத்தில் கிளை நூலகம் அமைக்க வாய்ப்பில்லை. எனினும், ஆலங்கோட்டை கிராம மக்கள் பகுதிநேர நூலகம் திறப்பதற்கு, அதற்குரிய தேவையான நிபந்தனைகளைப் பூர்த்தி செய்துதரும்பட்சத்தில், அந்தக் கிராமத்தில் ஒரு பகுதிநேர நூலகம் திறக்க வழிவகை உள்ளது.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சொன்ன விளக்கத்தின்பேரில், அந்தக் கிராமத்திலே பகுதிநேர நூலகமாகத் திறப்பதற்குரிய முயற்சிகளை மேற்கொள்வதற்கு என்னென்ன விதிமுறைகள் கடைபிடிக்கப்பட வேண்டியிருக்கின்றன, என்ன ஏற்பாடுகளை அந்தக் கிராமத்தின் சார்பிலே செய்ய வேண்டியிருக்கிறது என்பதை அறிய விரும்புவதோடு, என்னுடைய தொகுதியிலே ராதா நரசிம்மபுரம் என்ற கிராமத்திலே பகுதிநேர நூலகம் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. அந்த நூலகத்தை முழுநேர நூலகமாக மாற்றுவதற்குரிய முயற்சியை அரசு மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பகுதிநேர நூலகம் திறக்க, நூலகம் இயங்க ஒரு வாடகை இல்லாத இலவசக் கட்டடம் வேண்டும். பின்னர் நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு 5 சென்ட் முதல் 10 சென்ட் வரை இலவசக் காலி மனை அல்லது புறம்போக்கு மனை தரப்பட வேண்டும். 200 உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டும். ரூபாய் 2,000 மதிப்புள்ள - அது அந்தக் காலத்திலே மதிப்பிடப்பட்டது. இப்போது சற்று அதிகமாகலாம் - தளவாடங்கள் வழங்கப்பட வேண்டும். ரூபாய் 1,000 தொகை செலுத்துகின்ற இரண்டு புரவலர்கள் சேர்க்கப்பட வேண்டும். பகுதிநேர நூலகம் திறப்பதற்கு அந்தக் கிராமத்து மக்கள் ஆர்வத்தோடு முன்வருவதற்கு, இவையெல்லாம் அடையாளமாகக் கொள்ளப்படுகின்றன. அடுத்து, ஏற்கெனவே உள்ள பகுதிநேர நூலகத்தை, கிளை நூலகமாக மாற்றுவதற்கு ஒவ்வொரு மாவட்டத்திலேயும், அந்த மாவட்டத்திலே எவ்வளவு நிதி வசதி, பணம் கிடைக்கிறதோ, அந்த நிதியைக் கொண்டு, பரவலாகக் கேட்கப்படுகின்ற இடங்களுக்குள் பரிசீலனை செய்து, ஒருசில நூலகங்கள், கிளை நூலகங்கள் ஓராண்டுக்கு ஏற்றுக்கொள்ளப்படலாம். அது அந்த மாவட்டத்திற்குள்ள நிதி வசதியைப் பொறுத்து அமையும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.பி. இராசன்.



1998 நவம்பர் 25]

**திரு. வி.பி. இராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் மூலம் சம்சிகாபுரம் ஊராட்சியில் நூலகக் கட்டடம் கட்டப்பட்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொல்லியதுபோல, ரூ.20 சந்தாவில் 200 உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டு, 15 புரவலர்கள் 1,000 ரூபாய்க்கு சேர்க்கப்பட்டு, அந்த நூலகம் இப்போது பகுதிநேர நூலகமாக இருக்கிறது. அதை முழுநேர நூலகமாக ஆக்குவதற்கு ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பகுதிநேர நூலகம் தொடங்கியது அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில்; உடனே, முழுநேர நூலகமாக ஆக்குவதற்கு வாய்ப்பு, வழி, வசதி எதுவும் இல்லை.

முற்பகல் 9-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 44. திரு. கே. சுப்பராயன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**44—**

**அரசுக் கல்லூரிகளில் பாடப் பிரிவுகளை விஸ்தரித்தல்**

***15357—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசுக் கல்லூரிகளில் தற்போதுள்ள பாடப் பிரிவுகளை மேலும் விஸ்தரிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

[1998 நவம்பர் 25

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலைக்குதவாத, காலம் கடந்த, பல பாடப் பிரிவுகள் அரசுக் கல்லூரிகளில் மட்டும் அனுமதிக்கப்பட்டு வருகின்றன. காசு பண்ணுவதற்குரிய பாடப் பிரிவுகள் முழுவதும் தனியார் துறைக்கு அனுமதிக்கப்பட்டுவிடுகிறது. இது ஒரு கண்ணுக்கு வெண்ணெயும், இன்னொரு கண்ணுக்கு சுண்ணாம்பும் தேய்ப்பதுபோல் இருக்கிறது. இந்த நடைமுறையின் மூலம், இந்த மாநிலத்தில் ஏழை வீட்டிலே பிறந்த மாணவர்கள் கல்வி பெறுகிற உரிமை மறுக்கப்படுகிற ஒரு தவறான நிலையும், சரஸ்வதியை, அதாவது கல்வியை, பணம் பண்ணுவதற்குரிய குற்ற நடவடிக்கையாகச் செய்வதற்குரிய வழியும் ஏற்படுகிறது. ஆகவே, மாநில அரசு தங்களுடைய கருத்தை மறுபரிசீலனை செய்து நவீன அறிவியல் பாடங்கள் உட்பட அனைத்துப் பாடப் பிரிவுகளையும் அரசுக் கல்லூரிகளில் கொண்டுவருவதற்கு மறுபரிசிலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள், கல்வித் துறை குறித்து ஒரு எல்லைக்குப் போனால் இன்னொரு எல்லைக்கும் போக வேண்டும் என்பதற்காக இன்னொரு எல்லைக்கே போய்விட்டார். உள்ளபடியே கல்லூரிக் கல்வியிலே உள்ள பல்வேறு பாடப் பிரிவுகள் அத்தனையும் obsolete அல்லது பயனற்றவை என்று கருதுவதற்கு இடம் இல்லை. அவற்றுக்கும் பயன் உண்டு. இன்னும் சொல்லப்போனால், அரசியல்வாதிகளேகூட இப்படிப்பட்ட மற்ற பாடங்களைத்தான் தேடி வருகிறார்கள். கேட்கப்பட்ட கேள்வி அடிப்படையிலேதான் இங்கே விடை சொல்ல முடியும். தற்போதுள்ள பாடப் பிரிவுகளை மேலும் விஸ்தரிக்க செயற்குறிப்பு இருக்கிறதா என்று கேட்கப்பட்ட காரணத்தினால் சொல்லப்பட்டது, 'அதற்கென்று தனிச் செயற்குறிப்பு கிடையாது' என்று. ஆனால் நடைமுறையிலே வளர்ச்சி உண்டு. தனியாகவே கல்லூரிகளிலே இன்னின்ன புதிய பாடங்களைத் தொடங்க வேண்டும் என்று தனியாக அதற்காக நிதி ஒதுக்கி பெரிய அளவிலே செய்கிற வாய்ப்பு இல்லாத காரணத்தினால் தனிச் செயற்குறிப்பு இல்லை. ஆனால், நடைமுறையில் இந்த ஆண்டு மட்டும் ஏறத்தாழ 16 கல்லூரிகளில், அரசுக் கல்லூரிகளில் 10 கல்லூரிகளில் பி.எஸ்.ஸி. கணினி அறிவியல் பாடம் தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது. அதேபோல திருப்பூரிலே உள்ள கல்லூரியில் பி.ஏ. பொருளாதாரம் தொடங்கப்பட்டிருக்கிறது. திருத்தணி கல்லூரியில் எம்.ஏ. வரலாறு, பி.எஸ்.ஸி. கணித அறிவியல் தொடங்கப்பட்டிருக்கிறது.



1998 நவம்பர் 25]

அரியலூர், விழுப்புரம், ஆத்தூர், உடுமலைப்பேட்டை, தருமபுரி, மேலூர், திருவாரூர், வட சென்னை பாரதி மகளிர் கலைக் கல்லூரி, நாமக்கல் கல்லூரி ஆகியவற்றில் கணினி அறிவியல் தொடங்கப்பட்டிருக்கிறது. சேலம் அரசு கலைக் கல்லூரியில், எம்.ஏ. பொருளியல், எம்.ஏ. தமிழ் தொடங்கப்பட்டிருக்கிறது. இராணி மேரிக் கல்லூரியில் எம்.ஃபில் தாவரயியல் தொடங்கப்பட்டு இருக்கிறது. வட சென்னை பாரதி மகளிர் கல்லூரியில் எம்.ஏ. வரலாறு, எம்.எஸ்ஸி. வேதியியல் தொடங்கப்பட்டிருக்கிறது. காரைக்குடி அரசுக் கலைக் கல்லூரியில் பி.பி.ஏ. என்ற அந்த நிர்வாகப் படிப்பு தொடங்கப்பட்டிருக்கிறது. வாலாஜாப்பேட்டை மகளிர் கல்லூரியில் எம்.ஏ. தமிழ் தொடங்கப்பட்டிருக்கிறது. இதிலே அடிப்படை என்னவென்றால், புதிய செலவினத்தை அரசு ஏற்றுக்கொள்வது ஒரு அளவிலேதான் முடியும். எனவே, ஏற்கெனவே உள்ள ஆசிரியருடைய பணி இந்த வகையிலே விரிவுபடுத்தப்படுவதற்கு அல்லது பரவலாக வழங்கப்படுவதற்கு வாய்ப்பு இருக்ுமானால் இந்த வகுப்புகள் தொடங்கப்படுகின்றன. புதிய செலவை, பகுதி-2 அரசினுடைய திட்டப்பணி அடிப்படையில் வரவு செலவுத் திட்டத்திலே ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலைமை இருக்கிறபோதுதான் அரசு விரிவாக, பெரிய அளவில் சில திட்டங்களைக் கொண்டு வரும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய பாடப் பிரிவுகள், ஆசிரியர்கள் மத்தியிலும், மாணவர்கள் மத்தியிலும் ஏதோ மதிப்பெண்களைக் கூடுதலாகப் பெற்று மேற்படிப்புக்குச் செல்ல வேண்டும், பணிக்குச் செல்ல வேண்டும் என்ற நோக்கத்தோடு இருக்கின்றனவே தவிர, வேறல்ல. மாணவர்கள்தான் நாளைய நாட்டை உருவாக்கக்கூடியவர்கள் என்ற வகையிலே இந்தப் பிஞ்சு உள்ளங்களில், பச்சைக் களிமண்ணைப் போன்ற இந்த மாணவர்களுடைய மனதிலே ஒழுக்கத்தை வளர்க்கக்கூடிய வகையிலே நாட்டுப்பற்றை உண்டாக்கக்கூடிய வகையிலே Moral Class என்று சொல்லக்கூடிய நீதி போதனை வகுப்பைக் கட்டாயப் பாடமாக அரசு கொண்டு வருமா? அதிலும் குறிப்பாக விளையாட்டு, பேச்சு, எழுத்து போன்ற திறன்களை எல்லாம் வளர்ப்பதற்கு கல்விக்கூடங்களிலே அவற்றைக் கட்டாயப் பாடமாக.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்விக்கு வாருங்கள்.

[1998 நவம்பர் 25

**திரு. ஜி.கே. மணி:** அரசு அறிவிக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்கள் கேட்டது இந்தக் கேள்வியிலிருந்து எழாது. இது கல்லூரிக் கல்விபற்றியது. அவர் பிஞ்சு உள்ளங்களுக்குப் போகிறார். பிஞ்சு உள்ளங்களுக்கு ஆசிரியர்களாக உள்ளவர்கள்தான், அந்தக் குழந்தைகள் விரும்பக்கூடிய முறையில் தரமான கல்வி வழங்க வேண்டுமென்று ஆலோசனை வழங்கப்பட்டிருக்கிறது. ஆலோசனைகள் இலவசம், செயல்படுத்துவது மிகக் கடினம். ஏனென்றால், அவர்களுடைய மனதில் அந்த உணர்வு ஏற்பட்டு, அந்த ஆசிரியர்கள் தாங்கள் ஒரு பெரிய பொறுப்பை ஏற்றிருப்பதாகக் கருதி அவர்கள் அதைச் செய்ய வேண்டும். அதிலே, பல்வேறு இடங்களிலே ஆசிரியர்கள் இந்தக் கடமையை, இந்த உணர்வோடு நிறைவேற்றுகிற ஆர்வம் உள்ளவர்களாக இல்லை என்பதை நான் காண்கிறேன். மேலும், சட்டமன்ற உறுப்பினர்களைச் சார்ந்தவர்கள் பலபேர் ஆசிரியர்களாக இருக்கிறார்கள். சில ஆசிரியர்களை, ஏன் பள்ளிக்கூடம் வரவில்லை என்று கேட்டால், சட்டமன்ற உறுப்பினரோடு போயிருந்தேன் என்று சொல்லக்கூடிய அளவுக்குச் சில இடங்களிலே நிலைமை இருக்கிறது. ஆகவே, சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் ஆசிரியர்கள் கடமையுணர்வோடு செயலாற்றுவதற்கு ஊக்கம் தரவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 9.50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணவர் சேர்க்கைக் குறைவு காரணமாக பல அரசுக் கலைக் கல்லூரிகளிலே பல பாடப் பிரிவுகள் கைவிடப்பட்டிருக்கின்றன. திருப்பூரிலேகூட அரசுக் கலைக் கல்லூரிகளில் சில பாடப் பிரிவுகள் நிறுத்தப்பட்டிருக்கின்றன. இதற்கெல்லாம் அரசினுடைய மானியம் பெறும் பல்கலைக்கழகங்கள் காலத்தின் தேவைக்கேற்ற பாடத் திட்டங்களை மாற்றியமைக்காதது காரணமா? அல்லது பல்கலைக்கழக ஆட்சிக் குழுக் கூட்டங்களிலே கலந்துகொள்ளும் நம்முடைய அரசுப் பிரதிநிதிகள் இவற்றையெல்லாம் அந்தக் கூட்டங்களிலே வலியுறுத்தாதது காரணமா என்பதைத் தங்கள் மூலமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.



1998 நவம்பர் 25]

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்விக்கு விடை சொல்வது அவ்வளவு எளிதல்ல. ஏனென்றால், திரு. லட்சுமணன் அவர்களுக்கே விடை தெரியாது. (சிரிப்பு). எனக்கோ, அவருக்கோ தெரியாது. இது. திரும்பத் திரும்ப, தொடர்ந்து ஆய்வு செய்து, தொடர்ந்து செய்யப்பட வேண்டிய சீர்திருத்தம்தான், கல்வித் துறையிலே, அதுவும் உயர் கல்வித் துறையிலே இருக்கிறது. நம்முடைய நாட்டுப் பொருளாதார நிலை, பல்கலைக்கழகங்களுக்குக் கிடைக்கிற நிதி வசதி, கல்லூரிகளில் இருக்கிற infrastructure வசதி. இவை எல்லாவற்றிலேயும் சில குறைபாடுகள் இருக்கின்றன.

இரண்டாவது, மாணவர்கள், இளைஞர்கள், அவ்வப்போது எந்தவிதமான கல்வி பெற்றால் தங்களுடைய வாழ்க்கையிலே தொழில் வாய்ப்பு அல்லது ஒரு வேலைவாய்ப்பு அதிக எளிதாகக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறார்களோ, அந்தப் படிப்பைத்தான் அதிகம் விரும்புகிறார்கள். ஆகவே, வெறும் அறிவுக்காகப் பெறும் கல்வியாக, திரு. மணி அவர்கள் சொன்னதைப்போல, உள்ளத்தைப் பண்படுத்துவதற்காகக் கல்வி பெறுகின்றவர்களாக மாணவர்களும் இல்லை, பெற்றோர்களும் இல்லை, அரசியல்வாதிகளே இல்லை. ஆகவே, இப்படி ஒரு நிலைமை இருக்கிறபோது, மெல்ல மெல்லப், பல்வேறு மட்டங்களிலே உள்ள குறைபாடுகளைத் தீர்ப்பதற்கு அவ்வப்போது பரிந்துரை செய்து முயற்சி எடுக்க வேண்டும்.

மூன்றாவது, ஒரு வகுப்பில் சேருகிற மாணவர்கள் 3 பேர்களாக இருந்து, அந்த வகுப்பை நடத்த இரண்டு ஆசிரியர்கள் தேவையாக இருந்தால், அது நமது நாட்டுப் பொருளாதாரத் துறையிலே பெரிய இழப்பு. எனவே, அப்படி வருகிறவர்களைக் கூடுமானவரையில் வேறு கல்லூரிகளில் சேர வைத்தோ அல்லது இணைப்பு வகுப்பு என்று இன்னொரு கல்லூரியோடு இணைத்து நடத்தியோ, அதனால் ஏற்படுகிற செலவைக் குறைப்பது. வேறு பல வளர்ச்சிப் பணிகளுக்காக நாம் கையாள வேண்டிய சிக்கன முறையாக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. மணிவர்மா.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை என்பது மாவட்டத்தின் தலைநகராக இருக்கிறது. அங்கே கடந்த 30 ஆண்டுகளாக அரசுக் கலைக் கல்லூரி இயங்கி வருகிறது. அந்தக் கலைக் கல்லூரியிலே பட்ட மேற்படிப்பு வசதி

எதுவும் இல்லாமல் மாணவர்கள் அதிகமான முறையிலே திண்டாடிக் கொண்டிருப்பது அரசுக்குத் தெரியுமா? பட்ட மேற்படிப்பு வசதியைத் தொடங்கப் பல்வேறு வகைகளில் அரசுக்குப் பரிந்துரைக்கப் பட்டிருக்கின்றன. இந்த ஆண்டு, பட்ட மேற்படிப்பு வசதியைத் தொடங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, அந்தக் கல்லூரியிலேயுள்ள ஆசிரியர்கள் நடத்துகிற வகுப்புகளோடு இணைத்து நடத்தக்கூடிய ஒரு பாடத் திட்டம், வருகிற ஆண்டில் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 45, திரு. பெ.சு. திருவேங்கடம், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**45—**

**தனியார் கண் மருத்துவமனை அமைக்க அரசு நிலம் ஒதுக்குதல்**

***13742—திரு. பெ.சு. திருவேங்கடம்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டத்தில் தனியார் கண் மருத்துவமனை அமைக்க அரசு நிலம் ஒதுக்கீடு செய்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) ஆற்காடு வட்டம், குப்பிடிச்சாத்தம் கிராமம், புல எண் 15ஏ 1-ல் 0.05.0 எக்டேர் மற்றும் புல எண் 42ஏ 1-ல் 0.76.0 எக்டேர்—ஆக மொத்தம் 0.81.0 எக்டேர் நிலம் கண் மருத்துவமனை அமைப்பதற்காக, 'கண் ஆராய்ச்சி மையம்', சென்னை என்ற நிறுவனத்திற்கு நில உரிமை மாற்றம் செய்து ஆணையிடப்பட்டுள்ளது.



முற்பகல் 9-55

**திரு. பெ.சு. திருவேங்கடம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர், திருவண்ணாமலை மாவட்டங்களுக்கு உதவிகாமாக இருக்கும் இந்த மருத்துவமனைக்கு அரசு நிலத்தை வழங்கியதற்காக அரசுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் நன்றி. ஆனால் இது இலவசமாகத் தரப்பட்டுள்ளதா அல்லது நிலத்தினுடைய மதிப்பைப் பெற்று தரப்பட்டுள்ளதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருவேங்கடம் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன், நிலத்திற்குண்டான கிரயத் தொகையைச் செலுத்தவும் டாக்டர் அகர்வால் ஒத்துக்கொண்டிருக்கிறார். நில உரிமை மாற்றம் செய்ய சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர் அனுப்பிய பரிந்துரையை அரசு பரிசீலனை செய்து, அரசாணை எண் 648, வருவாய்த் துறை, நாள் 29-7-1998-இல் பின்வரும் நிபந்தனைகளுடன் ஆணையிடப்பட்டுள்ளது. அந்த நிபந்தனைகளைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

நில உரிமை மாற்றம் செய்யப்படும் ஆண்டில் நிலவும் சந்தை மதிப்பில் இரண்டு மடங்குத் தொகையை நிலக் கிரயமாக வசூலிக்க வேண்டும். கல் கட்டணம், மரக் கட்டணம், உட்பிரிவுக் கட்டணம் போன்ற பிற கட்டணங்களையும் வசூலிக்க வேண்டும். மேற்படி நிலத்திற்கு நில உரிமை மாற்றம் செய்ய விதிக்கப்பட்டுள்ள தடையாணை இருந்தும், உள்ளாட்சி அமைப்பின் கட்டுப்பாடு இருந்தும், அவற்றை விடுவித்து இந்நேர்வில் விலக்கு அளிக்கப்படுகிறது. கண் ஆராய்ச்சி மையத்திற்கு நில உரிமை மாற்றம் செய்யும் நாளிலிருந்து இரண்டு வருட காலத்திற்குள் இம்மருத்துவமனை செயல்படத் தொடங்கி, இலவசமாகவோ அல்லது சலுகை அடிப்படையிலோ கட்டணம் வசூல் செய்து, எல்லாப் பொதுமக்களுக்கும் சிகிச்சை அளிக்க வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 46, திரு. எல். மூக்கையா, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

[1998 நவம்பர் 25

**46—**

**குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்தல்**

***2465—திரு. எல். மூக்கையா:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கொடைக்கானல் ஒன்றியம், கும்பூர் மக்களின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

கும்பூர் கிராமத்திற்குக் குடிநீர் வழங்கும் திட்டம், 1998-99 ஆம் நிதியாண்டில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு உண்டாகும் திட்டச் செலவு ரூ. 10.00 இலட்சமும், பராமரிப்புச் செலவு ஒரு வருடத்திற்கு ரூ. 1.50 இலட்சமும் ஆகும். அனைத்துப் பணிகளும் முடிவுற்றபின், இத்திட்டம் உள்ளாட்சியிடம் பராமரிப்பிற்காக ஒப்படைக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எல். மூக்கையா, இருக்கையில் இல்லை.

வினா எண் 47, திரு. க.வெ.வீ. இராசமாணிக்கம், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**47—**

**பாதாளச் சாக்கடைத் திட்டம் அமல்படுத்துதல்**

***11725—திரு. க.வெ.வீ. இராசமாணிக்கம்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை, மாடக்குளம் கிராமம், முத்துப்பட்டி - அழகப்ப நகரில் பாதாளச் சாக்கடைத் திட்டம் அமல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?



1998 நவம்பர் 25]

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தற்சமயம் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க.வெ.வீ. இராசமாணிக்கம், இருக்கையில் இல்லை.

வினா எண் 48, திரு. ஜி.பி. வெங்கிடு, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

**48—**

**கால்வாய்களைச் சீரமைக்கும் திட்டம்**

***6464—திரு. ஜி.பி. வெங்கிடு:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு மாவட்டம், தடப்பள்ளி, அரக்கன்கோட்டை கால்வாய்களைச் சீரமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது தடப்பள்ளி, அரக்கன்கோட்டை கால்வாய்களைச் சீரமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. ஜி.பி. வெங்கிடு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தடப்பள்ளி, அரக்கன்கோட்டை கால்வாய்கள் 200 ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்ட கொடிவேரி அணையிலிருந்து வருகிற கால்வாய்கள் ஆகும். அணை அமைக்கப்பட்ட நாளிலேயிருந்து இன்று வரைக்கும் அவற்றினுடைய சீரமைப்பு பணி மேற்கொள்ளப்படாமல் கரைகள் எல்லாம் பழுதடைந்து, கார் வண்டிகள்கூட அதிலே செல்லமுடியாத அளவிற்கு மோசமான நிலையிலே இருக்கின்றன. ஆகவே, அவற்றைப் பகுதி, பகுதியாகவாவது அரசு சீரமைத்துத் தருமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப்போல

இந்தக் கால்வாய்கள் பழமையானவை. அதே நேரத்திலே பழுதுபட்டிருக்கின்றன. சுமார் 10 ஆயிரம் எக்டேர் நிலத்திற்குப் பாசனத்தைத் தரக்கூடிய இந்தக் கால்வாய்களைச் சமீபத்திலேகூட நான் பார்த்தேன்; பழுதான நிலையில் இருக்கின்றன. ஆனால், அவற்றை உலக வங்கியினுடைய நிதியுடன் எடுத்துச் சீரமைக்கலாம் என்றால் காவிரிப் பிரச்சினை குறுக்கிடுகிறது. பவானி நதி, காவிரி நதியினுடைய உப நதியாக இருக்கிறது. இருந்தாலும், இந்த அரசு அவற்றை வேறு வழிகளிலே செய்யலாமா என்பதை ஆராய்ந்து கொண்டிருக்கின்றது. எனவே, அரசு அடுத்து இதுகுறித்து ஆய்ந்து, இந்தக் கால்வாய்களைச் சீரமைக்க நடவடிக்கை எடுக்கும். ஆனால் ஒன்றேயொன்று, வருடத்திற்கு 10 மாதங்கள் தண்ணீர் போகும்; வருடத்திற்கு 2 மாதங்கள் மராமத்துவேலை செய்தால் அதுவே 10 வருடத்திற்குப் போதும். அந்த நேரத்திலே மாண்புமிகு உறுப்பினர் ஒத்துழைத்தால் ஒன்றிரண்டு ஆண்டுகளிலே பணியை முடிப்பதற்கு ஏதுவாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 49, திரு. மு.பெ. சாமிநாதன், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

**49—**

### பரம்பிக்குளம் - ஆளியாறு திட்டம்

***8539—திரு. மு.பெ. சாமிநாதன்:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நான்கு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ள பரம்பிக்குளம் - ஆளியாறு திட்டத்தை (P.A.P.) மூன்று மண்டலங்களாகக் குறைக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரம்பிக்குளம் - ஆளியாறு திட்டத்தின் மூலம் பல இலட்சம் ஏக்கர் நிலம் பாசனம் பெற்று வருகிறது. இந்தச் சூழ்நிலையில், திருப்பூர் போன்ற முக்கிய நகரங்களையொட்டிய நிலங்களை, அந்தப்



பகுதியிலேயிருக்கின்ற பரம்பிக்குளம் - ஆளியாறு திட்டத்திலே பயன்பெறக்கூடிய பாசன நிலங்களை, பல்வேறு வீட்டுமனைகளுக்கும், அதேபோல பனியன் ஆலைகளுக்குமாக விற்பனை செய்து, அதனாலே பாசனப் பரப்பு குறைந்து, இப்போது நான்கு மண்டலங்களாக அதே சூழ்நிலையில் பாய்ந்து கொண்டிருப்பதால் தண்ணீர்ப் பற்றாக்குறை ஏற்படுகிறது. விற்கப்பட்டிருக்கின்ற பாசனத்திற்குப் பயன்படாத நிலங்களையெல்லாம் கழித்துவிட்டு, அதை 3 முறை பாசனத்திற்காக மாற்றித்தர அரசு மறுபரிசீலனை செய்யுமா என்றும், அதேபோல ஒரு மடை விட்டு ஒரு மடை பாசனத்தை இப்பொழுது விவசாயிகள் விரும்புகிறார்கள். அதற்கும் அரசு ஆவன செய்யுமா எனத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-00

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** தலைவரவர்களே, இந்தப் பரம்பிக்குளம் - ஆளியாறு திட்டம் மாண்புமிகு உறுப்பினர் சொல்லுகின்ற, இப்பொழுது பாசனத்தில் இருக்கிற எல்லா நிலங்களுக்காகவும் உருவாக்கப்பட்டது அல்ல. ஒருகாலததில் அது 2 இலட்சத்து 50 ஆயிரம் ஏக்கர்களுக்குத்தான் பாசனத்தைத் தரும் என்று கணக்கிட்டிருந்தார்கள். காரணம், நமக்குக் கிடைக்க வேண்டிய தண்ணீர் 30½ TMC தண்ணீர். ஆனால் 30½ TMC தண்ணீர் நமக்குக் கிடைக்காது. ஆனமலையாறு திட்டம் நிறைவேற்றப்பட்ட பிறகு இரண்டரை TMC வரும். இருப்பது 28 TMC அந்த 28 TMC-யும் ஒரு வருஷம்கூட நமக்கு முழுக்க வரவில்லை. அதிலேயிருந்து புறப்படுகிற காண்டூர் கால்வாய் மூலமாகத்தான் திருமூர்த்தி அணைக்கு வர வேண்டும். திருமூர்த்தி அணையினுடைய கொள்ளளவே 18 TMC தான். இதை வைத்துக் கொண்டு 2 இலட்சத்து 50 ஆயிரம் ஏக்கர்களுக்குப் பாசனத்திற்கு வருஷத்திற்கு 2 போகம் தண்ணீர் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் இப்படி மாண்புமிகு உறுப்பினர் கேட்டதைப்போல, ஒவ்வொருவரும் கேட்டு, கேட்டு, கேட்டு, கடைசியில் 1 இலட்சத்து 75 ஆயிரம் ஏக்கரை அதிகமாக்கி இப்போது 4 இலட்சத்து 25 ஆயிரம் ஏக்கர் ஆகிவிட்டது. ஆக, 2 இலட்சத்து 50 ஆயிரம் ஏக்கருக்குப் பாய வேண்டிய தண்ணீர் 4 இலட்சத்து 25 ஆயிரம் ஏக்கருக்குப் பாய்கிறபொழுது ஒரு மண்டலம் இரண்டு மண்டலம் ஆயிற்று, இரண்டு மண்டலம் 3 மண்டலம் ஆயிற்று. அதிலேயும் தண்ணீர் போதவில்லை என்று நீதிமன்றத்திற்குப் போனார்கள். நீதிமன்றம் 4 மண்டலம் ஆக்கு என்று சொல்லிவிட்டார்கள். ஆனால் மாண்புமிகு உறுப்பினர், இப்பொழுது

மறுபடியும் 3 மண்டலமே ஆக்க வேண்டுமென்று கேட்கிறார். அடுத்த ஒரு கேள்வி. மடை விட்டு மடை பாய்கிற நிலைமை உருவாக்கப்படுமா என்று கேட்டு இருக்கிறார். அவருக்கு அதில் நியாயம் உண்டு. காரணம், முதல் மண்டலம் அவர்கள் ஊரை எட்டிப் பார்க்காது. திருப்பூர் வரையில் அந்த மண்டலம் போகாது. காரணம், வட்டமலை ஓடையோடு நின்று இந்தப் பக்கத்தோடு நின்று விடும் முதல் மண்டலம். ஆகையினாலே அதிலே மக்களுடைய கோரிக்கை இருக்கிறது. 4 மண்டலங்களுக்குத் தண்ணீர் தர வேண்டுமென்ற நீதிமன்றத்தினுடைய நீதி இருக்கிறது. இரண்டையும், அரசு தனக்கு வந்திருக்கிற பரிசீலனையில் கவனித்துக் கொண்டு இருக்கிறது. விரைவில் விவசாயிகள் மத்தியிலே ஒரு பாசனக் கருத்தரங்கு நடத்தப்பட்டு, கருத்தறிந்து, அதில் சட்டத்திற்குட்பட்ட பணிகள் நிறைவேற்றப்பட முடியுமானால் அரசு நிறைவேற்றும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்திலே P.A.P. பாசன விவசாயிகள் பொங்கலூர் பகுதியிலே ஒரு பாசனக் கருத்தரங்கு நடத்தி, இரண்டு விஷயங்களை மாநில அரசுக்கு வலியுறுத்தியிருக்கிறார்கள். ஒன்று, நம்முடைய மாநிலப் பொதுப்பணித் துறை அமைச்சரவர்களே குறிப்பிட்டதைப்போல, P.A.P. திட்டம், 2 இலட்சத்து 50 ஆயிரம் ஏக்கர்களுக்கான அந்தத் திட்டம் இன்றைக்கு 4.25 இலட்சம் ஏக்கர்களுக்கு விஸ்தரிக்கப்பட்டிருக்கிற காரண காரியங்கள் பற்றி நான் இப்பொழுது விளக்க விரும்பவில்லை. ஆனால் அப்படி விஸ்தரிக்கப்படுவதன் மூலம் பாசன விவசாயிகள் நீர் பெறுகிற வாய்ப்பு பெரிதும் குறைந்துவிட்டதால், ஒரு மடை விட்டு ஒரு மடை பாசன உரிமை வழங்குவதன் மூலம் நிலத்தடி நீர் பெருகுவதற்கும், நிலத்தடி நீர் ஆதாரங்களைப பாதுகாப்பதற்கும் பயன்படும் என்பதோடு P.A.P.-யை strengthen செய்வதற்காக ஆனைமலையாறு மற்றும் நல்லாறு திட்டங்களையும் நிறைவேற்ற வேண்டும். அதில் கிட்டத்தட்ட எட்டரை, ஒன்பது TMC தண்ணீர் அதிகப்படுத்துவதற்குரிய வாய்ப்பு இருப்பதாகச் சொல்கிறார்கள். அதுவும் நல்லாறைப் பொறுத்தவரையிலும் கேரள அரசோடுகூடப் பேச வேண்டிய அவசியமில்லை, மாநில அரசே செய்யலாம் என்று ஒப்பந்த ஷரத்து இருக்கிறது. அந்த அடிப்படையிலேகூட செய்வதற்கு உரிய முயற்சிகளை மேற்கொண்டு P.A.P.-க்குத் தண்ணீர் வரத்தை அதிகரிப்பதற்குரிய ஆனைமலையாறு, நல்லாறு திட்டங்களையும் நிறைவேற்ற அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள், நல்லாறு, ஆனைமலையாறு திட்டங்களை நிறைவேற்றுவதன் மூலம், நமக்குப் பற்றாக்குறையாக இருக்கிற தண்ணீர்த் தேவையை ஓரளவுக்குச் சமாளிக்க முடியும் என்று சொல்கிறார். ஆனைமலையாறுக்குத் தனியாக இந்த P.A.P. ஒப்பந்தம் போடுகிறபொழுதே, மறுபடியும் தமிழக அரசும், கேரள அரசும் பேசி ஒரு ஒப்பந்தம் போட்டுக் கொள்ள வேண்டுமென்று செய்திருக்கிறார்கள். அதற்குத்தான் பலமுறை நாங்கள் பேசிக் கொண்டிருக்கிறோம். நல்லாறு திட்டத்தை நிறைவேற்றுவதற்குக் கேரள அரசோடு பேசத் தேவையில்லை என்கிறார்கள். அது சரியில்லை. காரணம், மேல் நீராற்றிலேயிருந்து, அக்டோபரிலேயிருந்து ஜனவரி வரையிலே தண்ணீர் அவர்களுக்குப் போகிறது. இடமலை ஆற்றின் தண்ணீரை காடமலை ஆற்றிலே விடுகிறோம். இடமலை ஆற்றினுடைய திட்டம் நிறைவேற்றப்படுகிற வரையில் நாம் தண்ணீரைத் திருப்ப முடியாது. ஆனால், உள்ளபடியே சொல்ல வேண்டுமானால இடமலையாற்றில் மின் உற்பத்திக்காகக் கட்டப்பட்ட அந்தத் திட்டம் நிறைவேறிவிட்டது. ஆனால், இன்னும் பாசனத் திட்டம் முடியவில்லை என்று, அவர்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள். இதையெல்லாம் ஒட்டுமொத்தமாகப் பேசி முடிப்பதற்காகத்தான் மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் கேரள முதல்வரவர்களுக்குச் சென்று வாரம்கூடக் கடிதம் எழுதியிருக்கிறார்கள். எப்படியிருந்தாலும் டிசம்பர் மாதத்திலே பெரியாறு அணை குறித்துப் பேசப்போகிறபொழுது அதோடு இவற்றைப் பேசுவதற்காகத் தமிழக அரசு திட்டமிட்டிருக்கிறது. எனவே, அந்த நீர் ஆதாரத்தைப் பெருக்கித் தண்ணீரைக் கொடுக்க வேண்டுமென்பதுதான் இந்த ஆட்சியினுடைய முக்கிய நோக்கம்.

(முற்பகல் 10-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 50, டாக்டர் இஎஸ்எஸ் இராமன், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**50—**

## சிறு கப்பல் போக்குவரத்துப் பணி தொடங்குதல்

***9806—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மண்டபத்திற்கும் இராமேஸ்வரத்திற்கும் இடையே பயணிகள் போக்குவரத்திற்காக சிறு கப்பல் போக்குவரத்துப் பணி தொடங்கப்படுமா?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மண்டபத்திற்கும் இராமேஸ்வரத்திற்கும் இடையே படகுப் போக்குவரத்து தொடங்கப்படுவது பற்றி செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் இராமேஸ்வரத்தின்மீது மிகுந்த அக்கறை எடுத்துக்கொண்டிருக்கின்ற காரணத்தால் இந்தப் பதிலையும் தெரிவித்துக்கொள்கிறேன். இராமேஸ்வரத்திற்கும் தனுஷ்கோடிக்கும் இடையில் இப்போது போக்குவரத்து மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்ற காரணத்தால், இராமேஸ்வரத்திலிருந்து கோதண்டராமர் கோயிலுக்குச் சென்றுவர சிறிய விசைப்படகு விடலாம் என்ற கருத்துத் தெரிவிக்கப்பட்டது. அது இப்போது பரிசீலிக்கப்பட்டு, கடல்சார் வாரியம் அதுகுறித்து முடிவு எடுத்து, சிறிய படகு விடுவதற்காக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டிருக்கிறது என்ற செய்தியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மண்டபத்திற்கும் இராமேஸ்வரத்திற்கும் இடையே இப்போது மேம்பாலம் இருந்தாலும்கூட, Ferry service என்று சொல்லக்கூடிய சிறு கப்பல்கள் விடப்படுமானால், அது சுற்றுலாப் பயணிகளைக் கட்டாயமாக ஈர்க்கும். ஹாங்காங் தீவிற்கும், கௌலோன் என்ற Mainland-க்கும் இடையே இப்போது tube trains இருந்தாலும்கூட, அங்கே Ferry service விடப்பட்டு அது சுற்றுலாப் பயணிகளை மிகவும் கவர்ந்திருக்கிறது. அந்த வகையிலே, வடநாட்டுப் பயணிகள் அதிகமாக வரக்கூடிய இராமேஸ்வரத்திற்கும் மண்டபத்திற்கும் இடையே Ferry service என்று சொல்லப்படுகின்ற சிறு கப்பல்களை விட்டால் மிகப் பயன் உள்ளதாக இருக்கும். ஆகவே, இதை அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டிருக்கிறது என்றால், மறுபரிசீலனை செய்வீர்களா என்கிறீர்களே, இது என்ன கேள்வி?

வினா எண் 51, திருமதி ஆர். வேடம்மாள், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.



**51—**

## நெடுஞ்சாலைகளைச் செப்பனிடுதல்

***13284—திருமதி ஆர். வேடம்மாள்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூரிலிருந்து நரிப்பள்ளி, அரூரிலிருந்து கோட்டப்பட்டி செல்லும் நெடுஞ்சாலைகளைச் செப்பனிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலையான அரூர்-நரிப்பள்ளி, அரூர்-கோட்டப்பட்டி சாலை, மூன்று அரசு சாலைகளாக அமைந்துள்ளன.

1. அரூர்-கோட்டப்பட்டி சாலை - 34.8 கி.மீ.
2. அரூர்-தீர்த்தமலை சாலை - 15.8 கி.மீ.
3. பையர்நாயக்கன்பட்டி-நரிப்பள்ளி சாலை - 8 கி.மீ.

மேற்கூறிய மூன்று சாலைகளும் அரசு, இதர மாவட்டச் சாலைகளாகும். இம்மூன்று சாலைகளிலும் மோசமான பகுதிகளைப் புதுப்பிக்க மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**திருமதி ஆர். வேடம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 3 சாலைகளையும் பழுதுபார்க்க எவ்வளவு நிதியை அரசு ஒதுக்கியுள்ளது என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புவதோடு, மீதமுள்ள சாலைகள் எப்போது புதிய சாலைகளாக மாற்றப்படும் என்றும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரூர்-கோட்டப்பட்டி சாலை 34.8 கி.மீ. தூரம். 1997-98 ஆம் ஆண்டில் 4 கி.மீ. தூரம் எடுத்துக்கொள்ளப்பட்டு, 13.27

இலட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது. சாலை சரி செய்யப்பட்டிருக்கிறது. 1998-99, நடப்பாண்டில் 2.6 கி.மீ. தூரம் எடுத்துக்கொள்ளப்பட்டு, 9.38 இலட்சம் ரூபாய் இதற்குச் செலவாகும் என மதிப்பிடப்பட்டிருக்கிறது. மேலும் 1.8 கி.மீ. தூரம் 5.70 இலட்ச ரூபாயில் சரி செய்ய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. இது தவிர, மீதமுள்ள பகுதியில் 14.4 கி.மீ. தூரம் நபார்டு திட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ள கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. இதற்கான மதிப்பீடு 85 இலட்சம் ரூபாய்.

இரண்டாவது, அரூர்-தீர்த்தமலை சாலை 15.8 கி.மீ. தூரம். இதில் சென்ற ஆண்டு, 1997-98இல் 5.2 கி.மீ. தூரம் 4.70 இலட்ச ரூபாய் செலவில் சரி செய்யப்பட்டிருக்கிறது. நடப்பாண்டில் மீதமுள்ள பகுதியைச் சரிசெய்ய 8.3 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

மூன்றாவது, பையர்நாயக்கன்பட்டி-நரிப்பள்ளி சாலை, மொத்தம் 8 கி.மீ. சென்ற ஆண்டு, 1997-98இல் 0.6 கி.மீ. தூரம் 1.90 இலட்சம் ரூபாய் செலவில் சரிசெய்யப்பட்டிருக்கிறது. நடப்பாண்டில், அங்கு பள்ளங்களையெல்லாம் சரி செய்வதற்கு 24,958 ரூபாய் செலவில் பணி மேற்கொள்ளப்படவிருக்கிறது. இது தவிர, 40 இலட்சம் ரூபாயில் இந்தச் சாலையை நபார்டு திட்டத்திலே செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 52, திரு. பி.என். வல்லரசு, மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

முற்பகல் 10-10

**52—**

**பாப்பாபட்டி ஒச்சாண்டம்மன் திருக்கோயிலில் பூஜை நடத்துதல்**

***16023—திரு. பி.என். வல்லரசு:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உசிலம்பட்டி தொகுதி, பாப்பாபட்டி ஒச்சாண்டம்மன் திருக்கோயிலில் மாதம் இருமுறை பூஜை நடத்தும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?



(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், உசிலம்பட்டி வட்டம், பாப்பாபட்டி கிராமத்தில் உள்ள அருள்மிகு ஒச்சாண்டம்மன் திருக்கோயிலில் ஏற்கெனவே வாரம் இருமுறை பூஜை நடைபெறுவதால், புதிதாக மாதம் இருமுறை பூஜை நடைபெறுதல் தொடர்பான திட்டத்திற்குத் தற்போது அவசியம் எழவில்லை.

**திரு. பி.என். வல்லரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது உசிலம்பட்டி தொகுதியில் உள்ள பாப்பாபட்டி கிராமம், ஒச்சாண்டம்மன் திருக்கோயில் என்பது, அந்தத் தொகுதியில் இருக்கிற அதிகப்படியான, ஆயிரக்கணக்கான மக்களால் வழிபாடு செய்யப்படுகின்ற ஒரு ஆலயமாகும். இந்தச் சட்டமன்றத்தில் 25 ஆண்டுகாலம் சட்டமன்ற உறுப்பினராக இருந்த அமரர் திரு. மூக்கையா தேவர் அவர்களுடைய குலதெய்வமும் ஆகும். அந்த ஆலயம். பல்லாயிரக்கணக்கான மக்கள் வழிபடுகின்ற அந்த ஆலயத்திற்குப் போதிய அளவிற்கு வருமானம் இல்லாத காரணத்தினால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து, மாதம் இருமுறை அந்தக் கோயிலுக்குப் பூஜை நடத்த வேண்டும்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் அமைச்சர் பதிலைச் சரியாகக் கேட்கவில்லையா? (குறுக்கீடு) திரும்பவும் எதற்காக அதைப் படித்துக்கொண்டு இருக்கிறீர்கள்? அமைச்சர் சொன்ன தகவல் சரியில்லை என்று சொல்லிவிட்டு, உட்காருங்கள்.

**திரு. பி.என். வல்லரசு:** சரியில்லை என்று சொன்னால் மட்டும் போதாது. பூஜை நடைபெற வேண்டுமல்லவா? ஆகையினாலே, அங்கு பூஜை நடைபெறுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பெரிய வியப்பு என்னவென்றால், இது எங்களுடைய துறையின் கீழ் வரவில்லை. இருந்தாலும் பெருந்தன்மையோடு உறுப்பினர் அவர்களுக்கு நாங்கள் விடை சொல்லி இருக்கிறோம். இந்த ஆலயத்திற்கு மொத்த வருமானமே ஒரு மாதத்திற்கு

750 ரூபாய்தான்; ஆண்டுக்கு 9 ஆயிரம் ரூபாய். அதுமட்டுமல்ல, ஏற்கெனவே 6.96 ஏக்கர் புன்செய் நிலமும் உள்ளது. அதிலிருந்து எந்த வருவாயும் பெரும்பாலும் வராத காரணத்தினால்தான் இந்த இக்கட்டு. முதலில் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் வருவாய்க்கு ஒரு தக்க ஏற்பாட்டைச் செய்ய வேண்டும்; செய்தால், உறுப்பினர் அவர்கள் நினைப்பதுபோல, ஒவ்வொரு நாளும் ஒருகால பூஜைக்கே ஏற்பாடு செய்துவிடலாம். அதுமட்டுமல்ல, அதற்குத் தனியாக அவர்களுக்கென்று சிறப்பாக 22,500 ரூபாய் ஒதுக்கித் தருவோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பி.என். வல்லரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள், அவர் சொன்னதை முதலில் செய்யுங்கள்.

அடுத்து, வினா எண் 53, திரு. இரா. மணிமாறன், மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**53—**

### கூட்டுறவு வங்கிக் கடன்களை வசூல் செய்தல்

***16931—திரு. இரா. மணிமாறன்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் மாவட்டக் கூட்டுறவு வங்கியில் முந்தைய ஆட்சியில் கொடுக்கப்பட்ட கடன் தொகைகள் வசூலாகவில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) திண்டுக்கல் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியால் முந்தைய ஆட்சியில் கொடுக்கப்பட்ட கடன்கள் முழுவதும் வசூலாகவில்லை என்பதை அரசு அறியும்.





(ஆ) திண்டுக்கல் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியிலிருந்து முந்தைய ஆட்சியில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு 1991-92ஆம் ஆண்டு முதல் 1996-97ஆம் ஆண்டு முடிய வழங்கிய கடன்களில், 30-6-1997-இல் நிலுவையிலுள்ள குறுகியகாலக் கடன் ரூ.505.03 இலட்சமும், மத்தியகாலக் கடன் ரூ.52.86 இலட்சமும் தவணை கடந்த கடன்களாக நிலுவை உள்ளது. மேற்படி கடன்களை வசூலிக்கும் பொருட்டு தாவா நடவடிக்கை தொடர்ந்தும், நிறைவேற்றும் நடவடிக்கைகள் மேற்கொண்டும், சட்டப்பூர்வமான நடவடிக்கைகள் தொடரப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முந்தைய ஆட்சிக் காலத்தில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி மூலமாக அல்ல; நேரடியாகவே மாவட்டக் கூட்டுறவு வங்கி, பல்வேறு புதிய கூட்டுறவுச் சங்கங்கள், விசைத்தறி போன்ற சங்கங்கள் ஆரம்பித்து இலட்சக்கணக்கான ரூபாய் கடன்கள் அளித்து, அந்தக் கடன்கள் முழுமையாக வசூலாகவில்லை. இப்போது அதிகாரிகளும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளும் சென்று பார்க்கின்றபோது, அங்கே விசைத்தறிகள்கூட இல்லாத நிலை இருக்கின்றது என்பதை அமைச்சர் அவர்களுக்கு நினைவூட்டி, முந்தைய ஆட்சியில் ஏமாற்றுகின்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது மக்கள் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டதற்குப் பின்னர், நகரக் கூட்டுறவு வங்கிகளிலும், மாவட்டக் கூட்டுறவு வங்கிகளிலும் டெபாசிட் தொகை அதிகமாக வந்து இருக்கிறது. 'அனுபவ்' போன்ற நிறுவனங்கள் மக்களுக்குப் பல அனுபவங்களை அளித்ததன் விளைவாக....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாவுக்கு வாருங்கள், இது உரையாற்றுகிற நேரமல்ல.

**திரு. இரா. மணிமாறன்:** பொதுவாக நிதி ஆதாரம் கூடி இருக்கிற நிலையில், படித்த இளைஞர்கள் எளிதாக மாவட்டக் கூட்டுறவு வங்கிகள் மூலமாகப் பணம் பெற்று தொழில் செய்ய அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விசைத்தறிச் சங்கம் என்பது கைத்தறித் துறை தொடர்புடையது; கைத்தறித் துறை அமைச்சரின்கீழ் வருகிறது.

[1998 நவம்பர் 25

குறிப்பிட்டு உறுப்பினர் அவர்கள் தெரிவிப்பார்களேயானால், அது அந்தத் துறைக்குத் தெரிவிக்கப்படும். குறிப்பாக, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள், ஊரக வளர்ச்சி வங்கிகள், நகர வங்கிகள் அத்தனையுமே கடந்த கால ஆட்சியிலே எந்தவித நெறிமுறைகளையும் பின்பற்றாமல், அவர்களாகவே யாருக்கு வேண்டுமானாலும் கடன் தரலாம் என்ற ஒரு முடிவை எடுத்து, பல்வேறு வங்கிகள் மோசமான நிலைக்கு ஆளாக்கப்பட்டன. இப்போது நமது கலைஞர் அவர்கள் நான்காவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பு ஏற்றுக்கொண்ட பிறகு, கூட்டுறவுத் தேர்தல்களை நடத்தி, அவற்றிற்குத் தலைவர்கள் வந்த பிறகு, அங்கே போய் ஆய்வு செய்யப்பட்டபோது, சம்பளம் தருவதற்கே பல வங்கிகளிலே அவர்களால் முடியவில்லை.

*முற்பகல் 10-15*

உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். ஊரக வளர்ச்சி வங்கியில் கடன் வழங்க, நிலம் இருக்கவேண்டும் அல்லது சொத்துப் பத்திரம் இருக்கவேண்டும், அல்லது நகையை வைத்துத்தான் கடன் வழங்கவேண்டும். அப்படி இருக்கிற காலகட்டத்தில் கடந்த கால ஆட்சியில் ஒரு நபர் இன்னொரு நபருக்கு ஜாமீன் போட்டால் கடன் தரலாம் என்று சொல்லி, பல ஆயிரக்கணக்கான ரூபாயைக் கடனாக வழங்கியிருக்கிறார்கள். இப்பொழுது அவர்கள் இருக்கிறார்களா என்று பார்த்து வசூல் செய்யலாம் என்று செல்கிறபோது, அவர்களுடைய விலாசமே இல்லை. இப்படி இருக்கின்ற நிலையில் தொடர்ந்து பல இடங்களில் நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறோம். அன்றைக்கு இருந்த பணியாளர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர், புதிய முறையிலே அதிக அளவுக்கு இலகுவான முறையிலே கடன்கள் வழங்குவதற்கு முடியுமா என்று கேட்டார். மாண்புமிகு முதல்வர் அவர்கள், தலைவர்களுக்கு அதிக அதிகாரத்தைத் தந்திருக்கிறார்கள். தொடர்ந்து வருகின்ற ஆண்டுகளில், அது ஆய்வு செய்யப்படவிருக்கிறது. விரைவில் சங்கத் தலைவர்களை அழைத்துப் பேசி நல்லதொரு முடிவை நாம் எடுப்போம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 54, திரு. ந. கருப்பண்ண உடையார், மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.



1998 நவம்பர் 25]

**54—**

**பயிர் காப்பீட்டுத் திட்டம்**

***16978—திரு. ந. கருப்பண்ண உடையார்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*பயிர் காப்பீட்டுத் திட்டத்தினைத் தனிநபர் பயிர்களுக்கும் நீட்டிக்க அரசு ஆணை வெளியிடுமா?*

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மத்திய அரசு 18-11-1998 ஆம் நாளிட்ட கடிதத்தில், திருத்தி அமைக்கப்பட்ட விரிவான பயிர் ஈட்டுறுதித் திட்டத்தினைச் செயல்படுத்துவதற்கான தனது முடிவினை மாநில அரசுக்குத் தெரிவித்துள்ளது. திருத்தி அமைக்கப்பட்ட திட்டத்தின்படி, கடன் பெற்ற மற்றும் பெறாத விவசாயிகளுக்குப் பயிர் காப்பீட்டுத் திட்டத்தினை செயல்படுத்துவதென்று திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளது. இத்திட்டத்திற்கான விவரங்கள் கிடைக்கப்பெற்ற பின்னர், மாநிலத்தில் செயல்படுத்துவது குறித்து ஆராய்ந்து முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் விவசாயிகள் பயிரிடுகின்ற நெல், வாழை, கரும்பு, சவுக்கு, தென்னை போன்ற பயிர்களெல்லாம், காற்றடிக்கின்ற காலங்களில், மழைக்காலங்களில் சேதமடைகின்றன. அதனால்தான் அவர்களுக்குப் பயிர் காப்பீட்டுத் திட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று கோரிக்கை வைத்திருந்தோம். இப்பொழுது அதற்கு அனுமதி கிடைத்திருப்பதற்காக அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மத்திய அரசு மூலமாக சில மாதங்களுக்கு முன்பாக, 1,300 கோடி ரூபாய் தமிழகத்திற்காக ஒதுக்கப்பட்டிருப்பதாக, பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது. அது விவசாயிகளுக்குப் பிரித்துக் கொடுக்கப்பட்டிருக்கிறதா, அவர்கள் கடன்களில் வரவு வைக்கப்பட்டிருக்கிறதா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

[1998 நவம்பர் 25

**மாண்புமிகு திரு. கா. நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைப்பற்றிய விவரம் ஏதும் கையில் இல்லை. தனியாக எழுதிக் கொடுத்தால் பார்க்கலாம். எதற்காக 1,300 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள் என்றுகூட எனக்குத் தெரியவில்லை.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுடைய காப்பீட்டுச் செலவிற்காகக் கொடுக்கப்பட்ட கடன்களில் வரவு வைப்பதற்காக மத்திய அரசு 1,300 கோடி ரூபாய் தமிழகத்திற்கு ஒதுக்கியிருப்பதாகப் பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது. அதைத்தான் நான் இங்கே கூற விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அப்படி ஒன்றும் தகவல் இல்லை என்று சொல்கிறார். உங்களிடம் இருந்தால் கொடுங்கள்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** பத்திரிகையிலிருந்து எடுத்துக் காண்பிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ. இராமலிங்கம்.

**திரு. செ. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு ஏற்பட்ட புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்குப் பயிர் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட பயிர் இழப்பீட்டுத் தொகை, கும்பகோணம் மத்தியக் கூட்டுறவு வங்கிப் பகுதிக்கு மட்டும் 7 கோடி ரூபாய் வரவேண்டியுள்ளது. விரைவில் அரசு உரிய நடவடிக்கையை எடுத்து, காப்பீட்டு நிறுவனத்திலிருந்து பெற்று விவசாயிகளுக்குக் கொடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பிட்ட கடிதத்தைக் கொடுப்பாரேயானால், முறைப்படி முயற்சி எடுத்து, வழங்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ச. அழகிரி.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1996 ஆம் ஆண்டு ஏற்பட்ட பெருவெள்ளத்தின் காரணமாக, தமிழகம் முழுவதும் பயிர்கள் சேதமுற்றன. அதற்கான காப்பீட்டுத் தொகை இதுவரை தமிழக விவசாயிகளுக்கு வந்து சேரவில்லை. அதற்குப் பிறகு



1998 நவம்பர் 25]

மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்களின் பெருமுயற்சியின் காரணமாக, பொதுக் காப்பீட்டு நிறுவனத்திலிருந்து வந்த 13 கோடி ரூபாயில், கும்பகோணம் நகரக் கூட்டுறவு வங்கிக்கு 7 கோடி ரூபாய் வந்திருப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால் மாநில அரசின் பங்கு இதுவரை போய்ச் சேராத காரணத்தால், அந்தத் தொகை விவசாயிகளுக்குப் போய்ச் சேரவில்லை என்று கூறப்படுகிறது. அதைப்பற்றி அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

**மாண்புமிகு திரு. கா. நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசிலிருந்து insurance பணம் மாநில அரசுக்கு வந்து, வங்கிகள் தராமல் இருக்குமேயானால், விரைவில் அதைப் பெற்றுத் தருவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும். ஏற்கெனவே இருக்கிற insurance திட்டத்தின் அடிப்படையில், கடந்த காலத்தைவிடச் சிறப்பாக இந்த இரண்டு ஆண்டு காலத்தில் விவசாயிகளுக்குப் பணம் வழங்கப்பட்டிருக்கிறது. அதற்கான குறிப்புகள் எல்லாம் என்னிடம் உள்ளன. இதுபோல குறிப்பிட்ட பகுதிகளில், வங்கிகளுக்கு வராத தொகை இருக்குமானால் இலாகா மூலமாக விரைவில் வழங்க சட்டப்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 55 திரு. டி. மணி, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**55—**

**துணை வேலைவாய்ப்பு அலுவலகம் தொடங்குதல்**

***14335—திரு. டி. மணி:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், மார்த்தாண்டம் நகரத்தில் துணை வேலைவாய்ப்பகம் தொடங்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?

[1998 நவம்பர் 25

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): கன்னியாகுமரி மாவட்டம், மார்த்தாண்டம் நகரத்தில் துணை வேலை வாய்ப்பு அலுவலகம் தொடங்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் ஆய்வில் இல்லை.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் நாகர்கோவிலில் செயல்பட்டு வரும் வேலை வாய்ப்பு அலுவலகத்தில் அதிகப்படியானவர்கள் பதிந்திருக்கிற காரணத்தினால், முறையான விவரங்கள் தரப்படுவதில்லை, கிடைக்கப்பெறுவதில்லை. எனவே, அந்த நெருக்கடியைத் தீர்த்துக் கொள்வதற்கும், முறைப்படுத்தி வைக்கும் வகையில் seniority list-ஐ மிக ஒழுங்காகப் பராமரித்துக்கொள்வதற்கும், கல்குளம், விளவங்கோடு ஆகிய இரண்டு தாலுக்காக்களையும் சேர்த்து மார்த்தாண்டத்தில் ஒரு பிரிவை அமைத்துத் தர அரசு மறுபரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலில் ஏற்கெனவே மாவட்டம் முழுவதுமுள்ள மக்களுடைய வேலை வாய்ப்பு சம்பந்தமான பணிகளை நிறைவேற்றுவதற்கு ஒரு வேலை வாய்ப்பு அலுவலகம் இருக்கிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் துணை வேலை வாய்ப்பு அலுவலகம் தொடங்கப்பட வேண்டுமென்று சொன்னால், அதற்கென்று சில விதிமுறைகள் இருக்கின்றன. ஏற்கெனவே 12-க்கும் மேற்பட்ட துணை வேலை வாய்ப்பகங்கள் இருந்தன. அவற்றையெல்லாம் அரசு எடுத்துவிட்டு, இப்போது ஓசூரில் மட்டும்தான் அனுமதித்துள்ளது. அங்கே தொழிற்பேட்டைகள் அதிகமாக இருக்கின்ற காரணத்தாலும், வேலை வாய்ப்பு அதிகமாக இருக்கின்ற காரணத்தாலும், மாநகரத்தில் இருக்கக்கூடிய மக்கள் தொடர்புகொள்ள வேண்டுமென்ற அடிப்படையிலும் அதுமட்டும் வைக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக, துணை வேலை வாய்ப்பகங்கள் எடுக்கப்பட்டு விட்டன. நாகர்கோவில் போன்ற பகுதிகளிலே மாவட்டம் முழுவதற்கும் ஒரேயொரு வேலை வாய்ப்பகம் இருப்பதற்குக் காரணம், துணை வேலை வாய்ப்பகம் அமைக்கப்படுவதற்கு என்று சில norms இருக்கின்றன. அவை இருந்தால்தான் துணை வேலைவாய்ப்பகம் இருக்க முடியும். மார்த்தாண்டம் நாகர்கோவிலிலிருந்து 28 கிலோ மீட்டர் தொலைவில்தான் இருக்கிறது. மாவட்டம் முழுவதும் பரந்து விரிந்து செயல்படுகையில் கிராமப்புற, எல்லைப்புற மக்களுக்கு அந்த வேலை



1998 நவம்பர் 25]

வாய்ப்பகத்தின் மூலமாகச் செய்யப்படவேண்டிய பணிகள், நிறைவேற்றப்பட முடியாத சிரமங்கள் இருக்குமேயானால், அவற்றைக் கணக்கில் எடுத்துக்கொண்டு செயல்படுகிறோம். மார்த்தாண்டத்தில் அந்தப் பிரச்சினை இல்லை. குறிப்பிட்ட இடத்திலே, தொழில் வளர்ச்சி அதிகமாக இருந்தால்தான், வேலை வாய்ப்புக்கான காலியிடங்கள் இருக்கும். மார்த்தாண்டத்திற்கு அதுபோன்ற நிலைமைகள் இல்லை. உதாரணத்திற்கு ஓசூரைச் சொன்னேன். அதைப்போலவே, ஆதிதிராவிட மற்றும் பழங்குடி இன மக்கள், மாவட்டத்தின் ஒரு குறிப்பிட்ட பகுதியிலிருந்து- (மணியடிக்கப்பெற்றது) விரிவான பதிலைச் சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தேவையில்லை. கேட்ட கேள்விக்கு மட்டும் நீங்கள் பதில் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மார்த்தாண்டத்தில் துணை வேலை வாய்ப்பகம் தேவையென்று உறுப்பினர் கேட்டார். அதற்கு என்று சில வழிமுறைகள் இருக்கின்றன. அவற்றின் அடிப்படையில்தான் பரிசீலித்துத் தரமுடியும். அந்த வழிமுறைகளைப் பற்றி உறுப்பினர் அவர்கள் விளக்கமாகக் கேட்டால், அதை விளக்கமாகச் சொல்வதற்கு நான் தயாராக இருக்கிறேன். ஆதிதிராவிட மற்றும் பழங்குடி இன மக்கள், தூரத்தில் இருந்து, அவர்கள் வேலை வாய்ப்பகம் மூலம் பயன்பெறவில்லையென்றால், பாதிப்பு ஏற்படும். ஆனால் அதுவும் அங்கு இல்லை. ஆகவே, துணை வேலை வாய்ப்பகம் மார்த்தாண்டத்திற்கு அவசியமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 56, திரு. கே. தங்கமணி, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**56—**

## குற்றவியல் நீதிமன்றம் அமைத்தல்

***15113—திரு. கே. தங்கமணி:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரையில் குற்றவியல் நீதிமன்றம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரையில் கூடுதல் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம் அமைப்பதற்கு, அரசாணை (நிலை) எண் 731, உள் துறை, நாள் 8-6-1998—இல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**திரு. கே. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த பட்ஜெட் கூட்டத்தின்போது மானியக் கோரிக்கை விவாதத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மானாமதுரையில் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அமைக்கப்படும் என்று அறிவித்தார்கள். 6 மாதமாகியும் கூட அந்தப் பணி இன்னும் தொடங்கப்படவில்லை. எப்போது நீதிமன்றம் செயல்படத் தொடங்கும்?

முற்பகல் 10-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உத்தரவு போடப்பட்டு விட்டது என்று சொன்னார்கள். அதைக் கேட்டீர்களா, இல்லையா? உத்தரவு போட்ட தேதியைச் சொன்னார்கள். அதைக் கேட்டுவிட்டு, நீங்கள் அடுத்த கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. கே. தங்கமணி:** எப்போது அந்தப் பணி தொடங்கப்படும்? அது பகுதிநேர நீதிமன்றமாக இயங்குமா, அல்லது முழுநேர நீதிமன்றமாக இயங்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நீதிமன்றத்திற்கான ஆணை 8-6-1998—இல் அரசால் பிறப்பிக்கப்பட்டது. இது முழு நேர நீதிமன்றமாகும். இதற்காக அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.16.08 இலட்சம் தொடர் செலவினமும், ரூ.1.85 இலட்சம் தொடராச் செலவினமும் ஏற்படும் என்று துறை குறிப்பிட்டிருக்கிறது. நீதிமன்றத்தைத் திறக்கின்ற பொறுப்பு உயர்நீதிமன்றத்தைச் சார்ந்ததாகும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 57, திரு. ஜி.கே. மணி மாண்புமிகு வனத் துறை அமைச்சர்.

**57—**

## வனத் துறைச் சாலையைச் செப்பனிடுதல்

***13444—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தர்மபுரி மாவட்டம், தளி ஒன்றியத்திற்குட்பட்ட கிராமங்களிலிருந்து, தலைநகரான தர்மபுரிக்கு எளிதாகச் செல்ல ஒகேனக்கல்—பிலிகுண்டு—



நாட்ராம்பாளையம் வனத் துறைச் சாலையைச் செப்பனிட்டு, போக்குவரத்து வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஒகேனக்கல் கிராமத்திலிருந்து பிலிகுண்டு வரையிலான வனச் சாலைப் மேம்பாட்டுப் பணிகளுக்கு வனத் துறை வசம் போதிய நிதி வசதி இல்லாத காரணத்தால் தர்மபுரி மாவட்ட ஆட்சியர் வழியாக ரூ.3.50 இலட்சம் நிதி பெறப்பட்டு மேம்பாட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. பிலிகுண்டு—நாட்ராம்பாளையம் சாலையைச் செப்பனிடும் பணி குறித்த செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்திலுள்ள, தளி வட்டத்திலுள்ள நாட்ராம்பாளையத்தைச் சுற்றி ஏராளமான கிராமங்கள் இருக்கின்றன. அங்கே இருக்கின்றவர்கள் விவசாயிகள் ஆவர். அங்கே மலைவாழ் மக்களும், தாழ்த்தப்பட்ட ஏழை, கூலித் தொழிலாளர்களும் வாழ்ந்து வருகிறார்கள். அவர்கள் மாவட்டத்தின் தலைநகரான தர்மபுரிக்கு வருவதற்கு ஏறத்தாழ 150 முதல் 200 கிலோமீட்டர் வரை சென்றுவர வேண்டியிருக்கிறது. மேலும், போக்குவரத்து வசதியும் குறைவாக இருக்கின்ற காரணத்தாலே அவர்கள் ஒரே நாளில் தலைநகருக்கு வந்து செல்ல இயலாத நிலை இருக்கிறது. அவர்கள் மாவட்டத் தலைநகருக்கு, பல்வேறு வேலைகளைக் கவனிப்பதற்காக ஒகேனக்கல் வரையில் இருக்கக்கூடிய ஏறத்தாழ 12 கிலோமீட்டர் வனச் சாலையிலே நடந்து வந்து ஒகேனக்கலிலிருந்து தர்மபுரிக்குச் சென்று வருகின்ற நிலை இருந்து கொண்டிருக்கிறது. ஒகேனக்கலிலிருந்து-பிலிகுண்டு வரையிலே சாலை போடத் திட்டமிட்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அதற்காக எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்தில், பிலிகுண்டிலிருந்து நாட்ராம்பாளையம் வரை இருக்கக்கூடிய அந்தச் சாலையையும் உடனடியாகச் செப்பனிடுவதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன். அந்தச் சாலையை—4 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் தாங்களாகவே முன்வந்து, வீட்டுக்கு ஒருவர் என்ற அளவில் ஒரு வார காலம் வேலை செய்து அந்தப் பணியை முடித்திருக்கிறார்கள். எனவே, அதை மீண்டும் செப்பனிட்டு போக்குவரத்துக்கு ஆவன செய்வார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

[1998 நவம்பர் 25

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒகேனக்கல் முதல் நாட்ராம்பாளையம் வரை செல்லும் சாலையின் மொத்த நீளம் 22 கிலோமீட்டர் ஆகும். இச்சாலை தர்மபுரி வனக் கோட்டத்தைச் சார்ந்த காப்புக்காட்டின் ஊடே செல்கிறது. நாட்ராம்பாளையம், நான்கு திசைகளிலும் காப்புக் காடுகளால் சூழப்பட்ட கிராமம் ஆகும். அந்த 22 கிலோ மீட்டர் சாலையை அமைப்பதற்கு மொத்த செலவாக ரூ. 888 இலட்சம் தேவைப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உள்ளாட்சி அமைப்புகள் மூலமாகவோ அல்லது நெடுஞ்சாலைத் துறை மூலமாகவோ நிதியைப் பெற்றால், மத்திய அரசின் அனுமதியைப் பெற்று வனத் துறை மூலமாகப் பணிகள் விரைவில் மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ச. இராஜ ரெட்டி.

**THIRU S. RAJA REDDY:** Hon. Speaker, Sir, in 1994 an assurance was given on the Floor of the House that State Transport Corporation buses would be run to Dharmapuri-Natrampalayam-Hogenekkal. When the Committee on Government Assurances visited Dharmapuri, it was assured by the officials that permission would be given by the Forest Department for the same within few weeks. Private people are running their buses now. A large number of tourists are coming from Karnataka to Hogenekkal via this route. The distance would be reduced by 60 kms., if this road is laid. I would like to know from the Hon. Minister whether immediate action would be taken to lay the road and ply State Transport Corporation buses?

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத் துறையின் மூலமாக, வனச் சாலை மேம்பாட்டிற்கு ஆண்டுக்கு ரூ.30 இலட்சம் நிதி ஒதுக்கப்படுகிறது. உறுப்பினர் அவர்கள் விரும்பியபடி அந்தச் சாலையை மேம்படுத்த வேண்டுமென்றால் உள்ளாட்சி அமைப்புகள் மூலமாகவோ அல்லது நெடுஞ்சாலைத் துறை மூலமாகவோ நிதியைப் பெற்றால் அந்தச் சாலையைப் போட வனத் துறை தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 58, திரு. அ. சுடலைமுத்து, மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்.



1998 நவம்பர் 25]

**58—**

**கால்நடை மருத்துவமனை அமைத்தல்**

***14791—திரு. அ. சுடலைமுத்து :**

மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

போடிநாயக்கனூர் தொகுதி, குரங்கனியில் ஒரு கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

போடிநாயக்கனூர் தொகுதி, குரங்கணியில் ஒரு கால்நடை மருத்துவமனை அமைக்க தற்போது செயற்குறிப்பு ஏதும் இல்லை.

முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. அ. சுடலைமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குரங்கணி கிராமத்தைச் சுற்றி அகமலை, கொட்டகுடி, கொழுக்குமலை, முதுவாக்குடி, டாப்ஸ்டேஷன், சென்ட்ரல் போன்ற கிராமங்களில் மாடுகளையும், ஆடுகளையும் வளர்க்கின்றார்கள். வாகன வசதி இல்லாத காரணத்தினால் அங்கே விளைகின்ற தானியங்களைக் கழுதைகள் மூலமாகவும், குதிரைகள் மூலமாகவும் கொண்டு வருகின்ற நிலை இருக்கிறது. அங்கே கால்நடைகளுக்கு ஏதாவது நோய் ஏற்பட்டால் 16 கிலோமீட்டர் தூரம் தாண்டி, போடி நகருக்குத் கொண்டுவந்து மருத்துவ வசதி பெற வேண்டியிருக்கின்ற காரணத்தால், அங்கே ஒரு மருத்துவமனை அமைத்துத் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் தொகுதி, குரங்கணி கிராமத்தில் கால்நடை பார்வைக் கிளை நிலையம் ஒன்று தற்போது செயல்பட்டு வருகிறது. இந்நிலையத்திற்கு அருகில் போடிநாயக்கனூர் கால்நடை மருத்துவமனை இயங்கி வருகிறது. போடிநாயக்கனூர் ஊராட்சி ஒன்றிய எல்லைக்குட்பட்ட பூதிபுரம்,

கட்டும் பணியும், தளம் அமைக்கும் பணியும் செய்து தரப்படுமா என்று அறிய விரும்புவதோடு, சுற்றுலாத் துறையில் மிக முக்கியத்துவம் பெற்றிருக்கின்ற வைகை அணையில் பொதுப்பணித் துறையின் சார்பாக, தேவையான நிதி ஒதுக்கீடு செய்து தருவதுடன்--புதிய மாவட்டமான தேனி மாவட்டம், சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்து வருகிறது—கடந்த இரண்டு ஆண்டுகளில் இந்தத் துறையின் சார்பாக எவ்வளவு நிதி ஒதுக்கித் தரப்பட்டிருக்கிறது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வைகை அணையில் தொடங்கப்பட்டுள்ள சுற்றுலா விடுதியில் சுற்றுச்சுவர், தளம் அமைக்கின்ற பணி அடுத்த நிதியாண்டில் தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்- விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு

### (அ) தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலையில் ஏற்பட்ட விபத்து மற்றும் உயர்நீதிமன்ற உத்தரவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, சிறப்புக் கவன ஈர்ப்பு. தூத்துக்குடி, ஸ்டெர்லைட் ஆலையில் அண்மையில் ஏற்பட்ட விபத்தும், அது தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவும் குறித்து, மாண்புமிகு உறுப்பினர்கள் டாக்டர் க. கிருஷ்ணசாமி, திரு. லா. சந்தானம், திரு. கே. சுப்பராயன், டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், திரு. எஸ். திருநாவுக்கரசு ஆகியோர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். முதலில் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களைப் பேச அழைக்கிறேன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி அருகே இருக்கின்ற ஸ்டெர்லைட் தாமிர உருக்கு ஆலை உயர்நீதிமன்ற நடவடிக்கைகளின் பெயரால் மூடப்பட்டிருக்கிறது. இதிலே, எங்கு கோளாறு, எதில் கோளாறு என்று ஆராய முற்பட்டால், பல்வேறு நிலைகளை நாம் காணத் தோன்றும்.





சுற்றுச்சூழல் பாதிக்கப்படுகிறபோது, பொது மக்கள் அநேகமாக பாதிக்கப்படுகிறார்கள் என்ற நிலையும் கவலைக்குரிய ஒன்றாகும். அதே நேரத்தில், ஆலை மூடப்படும்போது, ஆலையில் பணிபுரிகின்ற தொழிலாளர்கள் பாதிக்கப்படுவதும் பின்வரும் நிலையாகும். இருமுனை கத்திபோல இந்த விஷயம் இருக்கிறது. ஆகவே, ஒரு ஆலையை அனுமதிப்பதற்கு முன்பாக தீர ஆராய்ந்து பொது மக்களுக்கு பாதிப்பு இல்லாத வண்ணம், அதே நேரத்தில் அதிலே பணிபுரிகின்ற, பணியைப் பெறுகின்ற தொழிலாளர்கள் பாதிக்காத வண்ணம் அரசு செயல்பட வேண்டியது மிக முக்கியமான ஒரு கருத்தாகும். ஆகவே, இந்த ஸ்டெர்லைட் ஆலையை முன்னுதாரணமாகக் கொண்டு எதிர்காலத்திலே இத்தகைய நிலை எப்போதும் இல்லாத வண்ணம் அரசு கவனத்தில் கொள்ள வேண்டும் என்று தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியின் சார்பாக கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த உருக்காலையைக் குறித்து, இருக்கின்ற உண்மை நிலையை அரசு விளக்க வேண்டுமென்று கேட்டு அமைகிறேன். நன்றி, வணக்கம்.

*முற்பகல் 10-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:.** திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நீதிமன்றம் ஸ்டெர்லைட் ஆலை மூடப்பட வேண்டுமென்று சொன்ன தீர்ப்பில் சில விஷயங்களை குறிப்பிட்டிருக்கிறது. உயர்நீதிமன்றம் தன் தீர்ப்புக்கு வருவதற்கு முன்னால், சுற்றுச்சூழல் தேசிய ஆராய்ச்சி நிலை ஆய்வுத் தகவலின் அடிப்படையில்தான் அந்தத் தீர்ப்பை அளித்து இருப்பதாகத் தெரிவித்திருக்கிறது. தேசிய சுற்றுச்சூழல் ஆய்வு நடத்தியபோது அநேகமாக அந்த ஆலையைப் பற்றி கடுமையான குற்றச்சாட்டுகளைத்தான் தெரிவித்திருக்கிறது. அந்த ஆய்வு ஆதாரங்களின் அடிப்படையில்தான், சென்னை உயர்நீதிமன்றம் அத்தகைய ஆணையை பிறப்பித்திருக்கிறது. ஆகவே, மற்ற தொழிற்சாலைகளைக் காட்டிலும் ஸ்டெர்லைட் ஆலையைப் பொறுத்தவரையில், அது இயங்குவது நடைமுறையில் கடுமையான பின்விளைவுகளை ஏற்படுத்துகிறது என்பதை அங்கே பணிபுரிகிற பொறியாளர்களே தெரிவித்திருக்கிறார்கள். எனவே, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக, நாங்கள் தெரிவிக்க விரும்புகிற கருத்து—இப்போது நீதிமன்றம் தற்காலிகமாக அந்த ஆலையை நிறுத்தி வைக்க உத்தரவிட்டிருக்கிறது; சென்னை உயர்நீதிமன்ற உத்தரவின் அடிப்படையிலேகூட பார்த்தோமேயானால், அதேபோல தேசிய

பிம்புசேரி ஆகிய இடங்களில் கால்நடை மருந்தகங்களும், நான்கு கிலோமீட்டர் தொலைவில் முந்தல் கால்நடை நிலையமும் மற்றும் தி. மீனாட்சிபுரம், வி. தர்மத்துப்பட்டி, கோடாங்கிப்பட்டி, வளையபட்டி, உப்புக்கோட்டை, காமராஜர்புரம், சிலமலை, சிலமரத்துப்பட்டி, ராசிங்கபுரம் ஆகிய இடங்களில் கால்நடைக் கிளை நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. எதிர்வரும் ஆண்டில் குரங்கனியில் செயல்படும் கால்நடை பார்வைக் கிளை நிலையத்திற்கு சிகிச்சைக்கு வரும் கால்நடைகளின் எண்ணிக்கையைக் கருத்தில்கொண்டு, மருந்தகமாக மாற்றவும், பிற்காலத்தில் அதை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தவும் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 59, திரு. பொ. முருகேசன், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.

**59—**

**ஆதிதிராவிடர் ஆரம்பப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக மாற்றுதல்**

***9598—திரு. பொ. முருகேசன்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம், மேல் ஓட்டிவாககம் கிராமத்தில் உள்ள ஆதிதிராவிடர் ஆரம்பப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக உயர்த்தும் எண்ணம் அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். 1998-99 ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தின்கீழ் மேல் ஓட்டிவாக்கம் தொடக்கப் பள்ளி, நடுநிலைப் பள்ளியாக நிலை உயர்த்தப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 60, திரு. பெ. ஆசையன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.



**60—**

**சுற்றுலாத் துறையின் தங்கும் விடுதி மற்றும் உணவு விடுதியின் கட்டுமானப் பணி**

***9229—திரு. பெ. ஆசையன்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி தொகுதி, வைகை அணையில் தொடங்கப்பட்டுள்ள சுற்றுலாத் துறையின் சார்பான தங்கும் விடுதி மற்றும் உணவு விடுதிகளின் கட்டுமானப் பணி முழுமை பெறாத நிலையிலுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இந்த விடுதிகளுடைய முழுக் கட்டுமானப் பணிக்குக் கூடுதல் நிதி ஒதுக்கி, பணியை விரைந்து முடிக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி தொகுதி, வைகை அணையில் தொடங்கப்பட்டுள்ள சுற்றுலாத் துறையின் சார்பான தங்கும் விடுதிககு அரசால் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்ட ரூ.15.00 இலட்சம் தொகை முழுவதும் செலவழிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு விடுதி 13-4-1996 முதல் செயல்பட்டு வருகிறது. 5 இரண்டு படுக்கை அறைகளைக் கொண்டு இயங்கி வரும் உணவகத்துடன் சுற்றுலாப் பயணிகளுக்குப் பயன்படும் வகையில் செயல்பட்டு வருகின்றது.

**திரு. பெ. ஆசையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வைகை அணையில் இப்போது செயல்பட்டு வருவதாகச் சொல்லப்படுகிற சுற்றுலாத் துறையின் சார்பான விடுதியின் கட்டுமானப் பணிகளில் சுற்றுச்சுவர் முழுமை பெறாமலும், அதனுடைய தளம் அமைக்கும் பணி முழுமை பெறாமலும் விடுதி தொடங்கி வைக்கப்பட்டிருக்கிறது. அதுமாத்திரமல்ல, கடந்த ஆட்சியின்போது, அவசர, அவசரமாகத் தொடங்கப்பட்டு, உதவாது என்று கருதப்பட்ட கட்டில்கள், மெத்தைகள் இவற்றையெல்லாம் தூக்கிப்போட்டு, அந்த விடுதியைத் தொடங்கி வைத்திருக்கிறார்கள். அதற்கும் மேலாக, பராமரிப்புப் பணிகளுக்கும் வசதி இல்லாத நிலையில், போதிய வாய்ப்பு இல்லாமல், களையிழந்து போயிருக்கிறது. ஆகவே, சுற்றுச்சுவர்

உறுப்பினர்கள் டாக்டர் இராமன் அவர்களும், திரு. சுப்பராயன் அவர்களும், திரு. திருநாவுக்கரசு அவர்களும், டாக்டர் கிருஷ்ணசாமி அவர்களும், திரு. சந்தானம் அவர்களும் கருத்துரைகளை வழங்கியிருக்கிறார்கள். அவர்களுடைய கருத்துக்களுக்கு முரண்பட்ட கருத்து இந்த அரசுக்கு இல்லை என்பதை முதற்கண் நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இதிலே நம்முடைய டாக்டர் இராமன் அவர்கள் பேசும்போது, இனிமேலாவது இதுபோன்ற ஆலைகளுக்கு அனுமதி வழங்குவதைத் தீர ஆராய்ந்த பிறகு வழங்க வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். பேசிய உறுப்பினர்கள் அனைவரும் மத்திய அரசும், மாநில அரசும், இந்த அனுமதியை வழங்கியது தவறு என்ற பொருள்பட கருத்தைக் கூறியிருக்கிறார்கள். மாநில அரசு என்றால், இப்போது நடைபெறுகின்ற மாநில அரசு என்று பத்திரிகைகளிலே செய்தி வந்துவிடும் என்பதால், அதற்கு நான் ஒரு விளக்கம் தர விரும்புகிறேன். இப்போது வழங்கப்பட்டுள்ள உயர் நீதிமன்றத்தினுடைய தீர்ப்பிலேகூட அவர்கள் திட்டவட்டமாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

"......According to the petitioners, the Union Ministry of Environment and Forests granted environmental clearnance to M/s. Sterlite Industries (India) Limited, to set up a large scale Copper Smelter Plant at Tuticorin on January 16, 1995. The Tamil Nadu Government granted the clearance on May 17, 1995. The clearance for the project was given ignoring the fact that three States had already rejected the proposal. The State Pollution Control Board gave its consent on May 22, 1995 to the industry to establish the plant in the SIPCOT Complex."

இதுதான் உயர் நீதிமன்றத்தினுடைய தீர்ப்பில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள ஒரு வரலாற்றுக் குறிப்பாகும். இந்த ஸ்டெர்லைட் நிறுவனம் நடத்தும் தாமிர உருக்காலை, தூத்துக்குடியிலே உள்ள சிப்காட் தொழிற்சாலை வளாகத்திலே உள்ளது, தீர்ப்பிலே குறிப்பிடப்பட்டு இருப்பதைப்போல.

முற்பகல் 10-45

இந்த நிறுவனம் ஃபிளிஸ்ட்டர் காப்பர் ஆண்டொன்றுக்கு ஒரு டன்னும், கந்தக அமிலம் நாள் ஒன்றுக்கு 1,060 டன்னும், பாஸ்பரிக் அமிலம் நாள் ஒன்றுக்கு 350 டன்னும் தயாரிக்க 1991 ஆம் ஆண்டு மார்ச் திங்களில் விண்ணப்பித்தது. அன்றிருந்த தமிழக அரசு சுற்றுச்



சூழல் வாரியம் இந்தத் தொழிற்சாலையிலிருந்து பெறப்பட்ட கழிவு நீர் சுத்திகரிப்பு மற்றும் காற்று, மாசுத் தடுப்பு முறைகளடங்கிய கருத்துரையைப் பரிசீலித்து தடையில்லாச் சான்றிதழ் No Objection Certificate 1-8-1994 அன்று வழங்கியது. இத்தொழிற்சாலைக்கு அடிக்கல் 31-10-1994 அன்று நாட்டப்பட்டது. இத்தொழிற்சாலைக்கு மத்திய அரசு சுற்றுப்புறச் சூழல் ஒப்புதல் 18-1-1995 அன்று பெறப்பட்டது. தமிழக அரசின் சுற்றுப்புறச் சூழல் நலக் குழு இத்தொழிற்சாலைக்கு 17-5-1995-ல் ஒப்புதல் அளித்தது. தொழிற்சாலை அதன் உற்பத்திச் சோதனையை 1996 ஆம் ஆண்டு மார்ச் திங்களில் தொடங்கியது. மே மாதத்திற்குப் பிறகுதான் இந்த ஆட்சி வந்தது. 1996 மார்ச் திங்களில் உற்பத்திச் சோதனை தொடங்கப்பட்டுவிட்டது. முதலில் இத்தொழிற்சாலை சுத்திகரிப்பு செய்யப்பட்ட கழிவு நீரை கோவாவிலே உள்ள தேசிய கடல் வள ஆராய்ச்சி நிறுவனத்தின் பரிந்துரையின்பேரில் வங்காள விரிகுடா கடலில் வெளியேற்ற வாரியத்தினால் அனுமதியும் வழங்கப்பட்டது. ஆனால், கழிவு நீரைக் கடலில் வெளியேற்ற எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்ட காரணத்தால் சுத்திகரிப்பு செய்யப்பட்ட கழிவு நீரை மீண்டும் தொழிற்சாலையில் செயல்முறையில் பயன்படுத்திட அனுமதியைக் கோரியது. இந்தக் கோரிக்கையை வாரியம் பரிசீலித்து தொழிற்சாலை உற்பத்தியைத் தொடங்க 14-10-1996 அன்று அனுமதியளித்தது. இந்தத் தொழிற்சாலை குறித்து பலவித எதிர்ப்புக் கருத்துக்கள் கூறப்பட்டதால், தமிழக அரசு மக்களின் மத்தியில் இருந்த அச்சத்தை மனதிலே கொண்டு மூன்று உறுப்பினர்கள் அடங்கிய ஒரு வல்லுநர் குழுவை நியமித்து இத்தொழிற்சாலை குறித்து அறிக்கை கோரியது. இந்தக் குழுவில் ஐதராபாத் Indian Institute of Chemical Technology-யைச் சேர்ந்த டாக்டர் ஏ. ஏ. கான். புது டெல்லி I.I.T.-யைச் சேர்ந்த டாக்டர் பிச்சுமணி, Pune National Chemical Laboratory-யைச் சேர்ந்த எச்.ஜி. ஜோக்லேக்கர் ஆகியோர் இடம்பெற்று, தங்கள் அறிக்கையை 1997 ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் கொடுத்தார்கள்.

இந்த அறிக்கையில் இத்தொழிற்சாலை இயங்குவதால் சுற்றுப்புறச் சூழலுக்கு எந்தவிதமான பாதிப்பும் ஏற்பட வாய்ப்பில்லை எனக் கூறப்பட்டிருந்தது. இதன்பேரில் 7-4-1997 அன்று இத்தொழிற்சாலைக்கு நீர் மற்றும் காற்று குறித்த சட்டங்களின்கீழ் இசைவாணை புதுப்பிக்கப்பட்டது. 3-5-1997 அன்று இராகவன் என்ற ஒப்பந்தத் தொழிலாளி gas cutting வேலை செய்து கொண்டிருக்கும்போது தீ விபத்துக்குள்ளாகி 7 ஆம் தேதி அன்று இறந்துவிட்டார். இதுகுறித்து

சுற்றுச்சூழல் ஆய்வு மையத்தினுடைய ஆய்வுத் தகவலின் அடிப்படையிலே பார்த்தோமேயானால், அந்த ஆலை இயங்குவது பொருத்தம் அல்ல. எனவே, மாநில அரசும், மத்திய அரசும் அந்த ஆலை இயங்குவதற்குரிய அனுமதியை இரத்து செய்ய முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

***திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடியிலே இயங்கி வருகின்ற ஸ்டெர்லைட் ஆலையில் கடந்த 2, 3 நாட்களுக்கு முன்பாகக்கூட, கந்தக அமிலக் கசிவின் மூலமாக நான்கு பொறியாளர்கள் பாதிக்கப்பட்டார்கள் என்கிற செய்தி வந்தது. அந்த ஆலையைப் பொறுத்தளவிலே, அங்கிருக்கின்ற இயந்திரங்கள் எல்லாம் பழமையான இயந்திரங்கள்; மேலும் சரியாக செயல்படக்கூடிய நிலையில் இல்லாத காரணத்தாலும், அங்கிருக்கின்ற சுற்றுச்சூழல் மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கிறது என்று அங்குள்ள பொறியாளர்களே தெரிவித்திருக்கின்ற காரணத்தாலும், அதோடு நீர் நிலைகள் 25 கிலோ மீட்டருக்குள்ளாக இருக்கின்ற இடத்திலே இப்படிப்பட்ட ஒரு ஆலை இருப்பது உசிதம் இல்லை என்று மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அது கடலுக்கு மிக அருகில் இருக்கின்ற காரணத்தால் சுற்றுச்சூழல் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிற நிலையில் இருக்கிறது என்ற காரணத்தால், அந்த ஆலை இயங்குவது எப்படி சாத்தியம் என்பதை மத்திய அரசும், மாநில அரசும் அதிலே அதிக கவனம் செலுத்தி, அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். திருநாவுக்கரசு.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற ஆலைகளை உயிரினங்கள் வாழக்கூடிய 25 கிலோமீட்டர் எல்லைக்குள் அமைக்கக்கூடாது என்ற விதி இருந்தும், அது மீறப்பட்டு, மத்திய அரசால் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. இதனால் பலமுறை அங்கே உயிர்ச் சேதம் ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டு, அதன்பிறகு, இப்போது உயர்நீதிமன்றத்தின் வாயிலாக அந்த ஆலையை மூட வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது. மாநில அரசு நீதிமன்றத்தின் உத்தரவை ஏற்று அந்த ஆலையை மூடிவிட்டதா என்பதையும் அந்த உரிமத்தை இரத்து செய்வதற்கு மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்து, அந்த ஆலையின் உரிமத்தை இரத்து செய்யக்கூடிய



சூழ்நிலையை உருவாக்க அரசு முயற்சிகளை மேற்கொண்டுள்ளதா என்பதையும் அறிய விரும்பி அமைகிறேன்.

முற்பகல் 10-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி.

***டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடிக்கு அருகிலே இயங்கக்கூடிய ஸ்டெர்லைட் ஆலை, சுற்றுப்புறச் சூழலைக் கெடுக்கக்கூடியது. அந்த ஆலையை அந்தப் பகுதியிலே தொடங்கக் கூடாது என்று ஆரம்ப கட்டத்திலே இருந்து, தூத்துக்குடி மாவட்டத்தில், மீனவர்களும், பொதுமக்களும் பல்வேறு எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள். ஆனால், இந்த எதிர்ப்புகளையெல்லாம் மீறி, மத்திய அரசும், மாநில அரசும், அந்தத் தொழிற்சாலையைத் தொடங்குவதற்கு அனுமதியளித்தன. அந்த தொழிற்சாலை தொடங்கப்பட்ட நாளிலேயிருந்து இதுவரை எத்தனையோ விபத்துக்கள் நடந்திருக்கின்றன. கடந்த ஆண்டுகூட திடீரென்று ஏற்பட்ட புகையின் காரணமாக நூற்றுக்கும் மேற்பட்ட பெண்கள் மயக்கமடைந்த செய்திகள் எல்லாம் வந்தது தெரியும். கடந்த சில தினங்களுக்கு முன்பு 4 பொறியாளர்களே ஒரு விபத்தில் கருகியிருக்கிறார்கள். இன்று அந்தத் தொழிற்சாலையிலேயிருந்து வெளியேறக்கூடிய புகையின் காரணமாக சுற்றுப்புறச் சூழல் கெடுவது; சுவாசிக்கின்ற காற்றிலே நச்சுப் புகை கலப்பது; அந்தத் தொழிற்சாலையிலேயிருந்து வெளியேறக்கூடிய கழிவுநீரின் காரணமாக, கிணற்று நீர் பாழ்படுவது; அடுத்ததாக, அந்தத் தொழிற்சாலையிலுள்ள தரமற்ற இயந்திரங்களின் காரணமாக அடிக்கடி விபத்து ஏற்பட்டு உயிர்பலி ஏற்படுவது என இப்படிப்பட்ட திடீர் விபத்துக்களின் காரணமாக, சுற்றுப்புறச் சூழல் கெடுவதன் காரணமாக, மக்கள் எழுப்பிவரக்கூடிய போராட்டங்களுக்கு வெற்றி கிடைக்கக்கூடிய வகையிலே இப்போது உயர் நீதிமன்றம், அந்த ஆலைக்குக் கொடுத்திருக்கக்கூடிய அனுமதியை இரத்துச் செய்யச் சொல்லியிருக்கிறது. அதை தமிழ்நாடு அரசும், மத்திய அரசும் அப்படியே நிறைவேற்றி, அவர்கள் மீண்டும் உச்சநீதி மன்றத்திற்குச் சென்று தடை பெற்று, மீண்டும் ஆலையை நடத்துவதற்கு வாய்ப்பு இல்லாமல் நிரந்தரமாக மூடுவதற்கு முன்வர வேண்டுமென்று இந்த மாமன்றத்தின் வாயிலாக, புதிய தமிழகத்தின் கருத்தாக இந்த அரசுக்கு எடுத்துவைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்டெர்லைட் தொழிற்சாலை குறித்து மாண்புமிகு

தொழிற்சாலைகள் ஆய்வாளர்களால் புலனாய்வு செய்யப்பட்டு, நிர்வாகத்தினர்மீது நீதிமன்றத்தில் தொழிற்சாலைகள் சட்டவிதிகளின்கீழ் வழக்கு தொடரப்பட்டு, நீதிமன்றம் 65 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்தது. இத்தொழிலாளிக்கு அறுபதாயிரம் ரூபாய் ஒப்பந்தக்காரராலும், ஒரு இலட்சத்து எண்பத்தாறாயிரம் ரூபாய் இன்சூரன்ஸ் கம்பெனி மூலமும், நிர்வாகத்தால் ஒரு இலட்சம் ரூபாயும் வழங்கப்பட்டது. 5-7-1997 அன்று ஸ்டெர்லைட் தொழிற்சாலைக்கு அருகேயுள்ள திருவாளர் ரமேஷ் ஃப்ளவர்ஸ் தொழிற்சாலையில் பணிபுரிந்து கொண்டிருந்த மகளிர், ஸ்டெர்லைட் ஆலையிலிருந்து வெளிவந்த வாயுக் கசிவினால் பாதிக்கப்பட்டு, தூத்துக்குடி அரசு மருத்துவமனையிலே அனுமதிக்கப்பட்டார்கள் என்ற செய்தி வந்தது. உடனே தமிழக அரசும், மாசுக் கட்டுப்பாடு வாரியமும் சேர்ந்து இந்தத் தொழிற்சாலையை உடனடியாக மூட உத்தரவிட்டன. மேலும் இந்த விபத்தின் காரணத்தை அறிய அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த காற்று மாசுத் தடுப்பு நிபுணர், டாக்டர் சொக்கலிங்கம், டாக்டர் எம். கிருஷ்ணமூர்த்தி, டாக்டர் பி.என். சாஸ்திரி மற்றும் டாக்டர் காந்தபாபா ஆகியோர் அடங்கிய குழுவை அமைத்தது.

இந்தக் குழு, அரசு மருத்துவமனையிலே அனுமதிக்கப்பட்ட பாதிக்கப்பட்ட தொழிலாளர்களையும் மற்றும் மருத்துவர்களையும் 10 மற்றும் 11-7-1997 ஆகிய நாட்களில் நேரடி விசாரணை செய்து மேற்படி விபத்தானது ஸ்டெர்லைட் தொழிற்சாலையிலிருந்து வெளிவரும் **Sulphur-Di-Oxide** வாயுவின் அடர்த்தியானது தொழிலாளர்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய வாய்ப்பில்லை என்று கூறியது. மேற்படி விபத்து, ரமேஷ் ஃப்ளவர்ஸ் தொழிற்சாலையில் கையாளப்படும் இரசாயனப் பொருட்களின் கலவையிலிருந்து வெளிவரும் வாயுக் கசிவு மற்றும் **Sulphur-Di-Oxide**-உடன் சேர்ந்து மகளிர் வேலைபார்க்கும் பகுதியில் பாதிப்பு ஏற்படுத்தியிருக்கக்கூடும் என்று பாதிக்கப்பட்டவர்களிடம் விசாரித்ததன் மூலம் தெரிய வந்தது.

இதன் பிறகு ஸ்டெர்லைட் தொழிற்சாலையை மீண்டும் இயக்க தமிழக அரசு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் மூலம் 13-8-1997 அன்று அனுமதி வழங்கப்பட்டது. 30-8-1997 அன்று சுழலும் தாமிர உருக்கு சேமிப்பு உலையில் ஏற்பட்ட வெடிவிபத்தில், வெப்ப நிலையிலே உருக்கிய தாமிரம் தெறித்து, சங்கர் மற்றும் பெருமாள் என்ற இரண்டு தொழிலாளிகள் இறந்துவிட்டார்கள். இந்த விபத்திற்குப் பிறகு, தாமிர உருக்கு சேமிப்பு உலை சரி செய்யப்படும்வரை அதன் உபயோகத்திற்குத்



தடை செய்யப்பட்டு, 3-9-1997 அன்று உடனடியாக ஆணை பிறப்பிக்கப்பட்டது.

முற்பகல் 10-50

மும்பையிலே உள்ள தொழிற்சாலைகள் ஆலோசனை இயக்ககத்தைச் சேர்ந்த திரு. ஜி. வைத்தியநாதன் தலைமையில் இந்த விபத்தை புலனாய்வு செய்து, விபத்துத் தடுப்பு முறைகளைத் தெரிவிப்பதற்கு நான்கு பேர் அடங்கிய வல்லுநர் குழு தமிழக அரசால் 11-9-1997 அன்று நியமிக்கப்பட்டது. இந்தக் குழு பரிந்துரைத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் பின்பற்றப்பட்டதைச் சரிபார்த்து, சென்னை உயர் நீதிமன்றம் அளித்த தீர்ப்பின் அடிப்படையிலே சுழலும் தாமிர உருக்கு சேமிப்பு உலை உற்பத்தி தொடங்குவதற்கான அனுமதி 5-11-1997 அன்று அளிக்கப்பட்டது. தொழிற்சாலைகள் ஆய்வாளர்களால் விபத்து புலனாய்வு செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டு, நீதிமன்றம் 3,60,000 ரூபாய் அபராதம் விதித்தது. இறந்த ஒவ்வொரு தொழிலாளிக்கும் இலட்சம் ரூபாய் வீதம் நிர்வாகத்தால் நிதி வழங்கப்பட்டது. 16-4-1998 அன்று தாமிர உருக்கு சேமிப்பு உலையில் தூசி சேகரிக்கும் அறையில் தூசி அடைத்துக்கொண்டது. அதனை, ஒரு திறவையினுள்ளே கடப்பாறையினால் குத்தும்போது வெப்பமான தூசி பறந்து, தட்சிணாமூர்த்தி ராஜா, நடராஜன் என்ற தொழிலாளிகள் இறந்துவிட்டார்கள். நீதிமன்றத்திலே வழக்குத் தொடரப்பட்டு, 90 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது. மறைந்த தொழிலாளி தட்சிணாமூர்த்தி ராஜாவுக்கு 1½ இலட்சம் ரூபாயும், நடராஜனுக்கு 1 இலட்சம் ரூபாயும் நிர்வாகத்தால் வழங்கப்பட்டது.

தமிழக அரசு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் மூலம் ஒரு வல்லுநர் குழுவை அமைத்து திடீர் சோதனை நடத்தி அறிக்கை தரும்படி கேட்டுக்கொண்டது. அதன்படி வாரியத்தின் அறிவியல் ஆலோசகரும், உலக அளவில் புகழ்பெற்ற விஞ்ஞானியுமான டாக்டர் எம். சாந்தப்பா, டாக்டர் கே.ஆர். ரங்கநாதன், டாக்டர் சி.ஏ. சாஸ்திரி ஆகியோரைக் கொண்ட குழு, இந்தத் தொழிற்சாலையை 16-6-1998 அன்று ஆய்வு செய்தது. இக்குழு, ஸ்டெர்லைட் தொழிற்சாலைபற்றி திருப்தி தெரிவித்தது. சென்னை உயர் நீதிமன்றம் தனது 20-8-1998 ஆம் நாளைய உத்தரவில், மத்திய அரசு NEERI நிறுவனத்தின் மூலம் 3 மாதத்திற்குள் ஸ்டெர்லைட் தொழிற்சாலையை ஆய்வு செய்து

அறிக்கை தர உத்தரவிட்டது. 23-11-1998 அன்று வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. நீதிமன்றத்தில் NEERI இயக்குநர் நேரில் வந்து தனது அறிக்கையைத் தந்து, விளக்கத்தையும் எடுத்துக் கூறினார். இதற்கிடையில், 19-11-1998 அன்று கந்தக அமிலம் வெளியேற்றும் வேலையில் ஈடுபட்டிருந்த இரஞ்சன் குமார் உள்ளிட்ட 5 பேருக்குக் காயம் ஏற்பட்டு, மருத்துவமனையிலே சிகிச்சை பெற்று வருகிறார்கள். சென்னை உயர் நீதிமன்றம் NEERI இயக்குநர் எடுத்துரைத்த தொழிற்சாலையின் குறைகளையும், 19-11-1998 அன்று நடைபெற்ற தொழிற்சாலை விபத்தையும் காரணமாகக்கொண்டு, தொழிற்சாலையை மூடும்படியாக உத்தரவிட்டுள்ளது. மீண்டும் வழக்கு 1-12-1998 அன்று எடுத்துக்கொள்ளப்படும் என்று கூறப்பட்டிருக்கிறது. இதுதான் இன்றுள்ள நிலவரம். மாநில அரசு உடனடியாக இந்த அனுமதியை இரத்து செய்ய வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இங்கே எடுத்துக்கூறியிருக்கிறார்கள். அதில், எந்தவிதமான கருத்து வேறுபாடும் இந்த அரசுக்கு இல்லை என்பதையும், எந்த நடவடிக்கை எடுத்தாலும், நீதிமன்றங்கள் அதற்கிடையிலே தங்களுடைய தீர்ப்புகளை வழங்குவதையும் நாம் மனதிலே கொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றோம். அந்த வகையிலே, அதையும் கருதிப்பார்த்து, அரசு நிச்சயமாக நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதையும், இந்த அரசு இந்த ஆலை வருவதற்குப் பொறுப்பல்ல என்றாலும்கூட, அதனால் ஏற்படுகின்ற கஷ்டநஷ்டங்களுக்குப் பொறுப்பேற்று, ஆவன செய்யும் என்ற உறுதியையும் இந்த அளவுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 3. தகவல் கோரல்

### (அ) குளிர்காலக் கூட்டத்தொடரில் உறுப்பினர்களுக்கு கம்பளி ஆடை அளிக்கக் கோருதல்

**திரு. க. மணிவர்மா**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இது குளிர்காலக் கூட்டத்தொடர். இப்போது கடுமையான குளிர் நிலவுகிறது. மாண்புமிகு பேரவை உறுப்பினர்களின் நலனைக் காக்கின்ற நீங்கள். காஷ்மீர் உல்லன் ஸ்வெட்டர் அனைத்து உறுப்பினர்களுக்கும் வாங்கித் தர ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.



## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு-தொடர்ச்சி

### (ஆ) மாஞ்சோலை எஸ்டேட் தொழிலாளி கொலை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த சிறப்புக் கவனஈர்ப்பு, நெல்லை மாவட்டம், மாஞ்சோலை எஸ்டேட் தொழிலாளி கொலை குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. தாமரைக்கனி, திரு. சந்தானம், டாக்டர் கிருஷ்ணசாமி ஆகியோர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். முதலில் திரு. தாமரைக்கனி அவர்களைப் பேச அழைக்கின்றேன்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாஞ்சோலை எஸ்டேட்டில் சுமார் 10 ஆயிரம் தொழிலாளர்கள் வேலை பார்க்கின்றார்கள். அந்தத் தொழிலாளர்களை நம்பி அவர்களுடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் சுமார் ஒரு இலட்சம் பேர் இருக்கிறார்கள். அந்தத் தொழிலாளர்கள் பல முறை கோரிக்கைகளைச் சொல்கிறார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள், அவர்களுடைய கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டு அவற்றை முடிப்பதற்கு என்னென்ன நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமோ, அவற்றை எடுக்க வேண்டும். இதற்கு முன்னாலே புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். 'தொழிலாளர்கள் தங்களுடைய பிரச்சினைகளைத் தாங்களே தீர்த்துக்கொள்ளவேண்டும், வெளியிலே உள்ளவர்கள் தலையிடக்கூடாது, என்று. ஆனால் இந்த மாஞ்சோலை எஸ்டேட் சம்பந்தப்பட்ட பிரச்சினையிலே வெளியிலே உள்ளவர்களின் தலையீடு இருக்கிற காரணத்தாலே, எஸ்டேட்டில் வேலை செய்கிறவர்கள் சில பேர் தடுக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த எஸ்டேட்டில் உள்ள சூப்பர்வைசர் அந்தோணிமுத்து, வேலைக்கு ஆட்களை அழைத்துச் சென்ற காரணத்தால் அந்த சூப்பர்வைசர் கொலை செய்யப்பட்டிருக்கிறார்.

முற்பகல் 10-55

என்னுடைய சக சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி. அவர்கள்மீது எனக்கு பாசம் அதிகம். நான் அவரைச் சொல்லவில்லை. அந்தப் பகுதியில் உள்ள பொதுமக்கள். அந்த எஸ்டேட் தொழிலாளர்கள். இறந்துபோன அந்தோணிமுத்துவினுடைய மனைவி ஆகியோர் புகார் கொடுத்திருக்கிறார்கள். அதனால் அருமை அண்ணன் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள்மீது F.I.R. போட்டிருக்கிறார்கள். 13-ஆவது எதிரியாகச் சேர்த்திருக்கிறார்கள். சாதாரண பொதுமக்கள்மீது

F.I.R. போட்டால், உடனே தவறு செய்தவனைப் பிடிப்பதற்கு முன்னாலேயே அவரது பெண்டாட்டியை உள்ளே பிடித்து வைத்து, அவரும் இறந்துவிடுகிற நிலைமை இருக்கிறது. சாதாரணமான பாவி தாமரைக்கனி, நானும் இந்த நாட்டினுடைய பிரஜை. சாதாரண மக்களுக்கு ஒரு நீதி. எம்.எல்.ஏ., மந்திரி, எம்.பி.க்கு ஒரு நீதி என்றால், இதுதான் டாக்டர் அம்பேத்கர் அவர்கள் நமக்குக் கொடுத்த சட்டமா? என்மீது 3 கேஸ்கள் போட்டிருக்கிறார்கள். நானும் சட்டத்திற்குப் பயந்து கோர்ட்டுக்கு வந்து நின்று ஜாமீன் பெற்று வருகிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள் குமாரசாமி ராஜா நூற்றாண்டு விழாவிற்கு வருகிறார்கள். யாரோ ஒரு சமூக விரோதி வந்து தீ வைத்துக் கொளுத்திவிட்டார். F.I.R.-இல் என் பெயர் இல்லை. இருப்பினும் ஏதாவது ஒரு கேஸ் போட்டு அலைக்கழிக்க வேண்டும், தொந்தரவு கொடுக்க வேண்டும், அப்போதுதான்.........

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாஞ்சோலை பிரச்சினை சம்பந்தமாகப் பேசுங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** அந்தமாதிரி, எம்.எல்.ஏ. என்ற முறையில் பாகுபாடு இல்லாமல் மாண்புமிகு முதல்வர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். மாண்புமிகு முதல்வர் மக்களுக்குப் பொதுவானவர். ஆளுங்கட்சியாக இருந்தாலும் சரி, எதிர்க் கட்சியாக இருந்தாலும் சரி, அனைவருக்கும் பொதுவானவர். தப்பு பண்ணும்போது கேஸ் போடுகிறார்கள். தப்பு செய்யாதிருந்தால் கோர்ட்டில் நிரூபிப்போம். தவறு செய்திருந்தால் திருந்துவதற்கு ஒரு வாய்ப்பு என்று நினைத்து சந்தோஷப்படுவோம். அந்தமாதிரி இருக்க வேண்டும். இது சம்பந்தமாக சபாநாயகர் அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதி அனுப்பினேன், 13-ஆவது எதிரியாக F.I.R.-ல் சேர்த்திருக்கிறார்கள் என்றும், அன்பு அண்ணன் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்களைக் கைது பண்ண வேண்டுமென்றும் கடிதம் எழுதினேன். சட்டத்திற்கு முன்னால் எல்லோரும் சமம். எம்.எல்.ஏ.க்கு ஒரு சட்டம், எம்.பி.க்கு ஒரு சட்டம் அல்ல. உதாரணத்திற்கு என்னுடைய சக எம்.எல்.ஏ. வாக இருந்தார் தற்போதைய பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. துரைமுருகன். எம்.ஜி.ஆர். அவர்கள் இருக்கும்போது. அவர்மீது ஒரு பிடி வாரண்ட் இருந்தது. சட்டசபை கூடும்போது. அந்த வாரண்டை recall பண்ணிவிட்டு, ஸ்டே வாங்கிவிட்டுதான் சட்டசபைக்கு வருவேன் என்று சொல்லி சட்டசபைக்கு வந்தார்கள். சட்டத்தை மதித்தார் பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள். அந்த மாதிரி எம்.எல்.ஏ.





வாகிய நானும், என்மீது உள்ள வாரண்டை recall பண்ணிவிட்டு வந்திருக்கிறேன், ஜாமீனில் வந்திருக்கிறேன். என்மீது கேஸ் இருந்தது. அதனால், ஜாமீனில் வந்திருக்கிறேன். மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களும் மனிதன், நானும் மனிதன். எல்லோரும் மனிதனாக இருக்க வேண்டும். ஆகவே, இந்த நேரத்திலே 23ஆம் தேதி சட்டசபை கூடுகிறது. ஆனால் 22ஆம் தேதி வந்து என்னைக் கைது செய்தால் எஸ்.பி.** அவர்களை டிரான்ஸ்பர் பண்ண வேண்டுமென்று சொல்கிறார். அவர் என்மீது வீம்புக்கு F.I.R. போட்டிருக்கிறார் என்று சொல்லி எஸ்.பி.-யை மிரட்டுவது, கலெக்டரை மிரட்டுவது, என்னைக் கைது செய்தால் 22 ஆம் தேதி தமிழ்நாடு முழுவதும் மாவட்ட அலுவலகங்களிலும், தாலுகா அலுவலகங்களிலும், எல்லா இடங்களிலும் நான் போராட்டம் பண்ணுவேன், சாலை மறியல் பண்ணுவேன், பஸ்களைத் தீ வைத்து எரிப்பேன் என்று அவர் கட்சியிலே உள்ள சிலர் அறிக்கை விடுகிறார்கள். நான் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்களைச் சொல்ல மாட்டேன். அவர் என்னுடைய சக எம்.எல்.ஏ.; அவருக்கு பாதிப்பு என்றாலும், எனக்கு பாதிப்பு என்றாலும் ஒன்றுதான். அவர் என்னுடைய கண். ஆகவே, நாட்டில் வன்முறைகளை எல்லாம் தூண்டுவதற்குக் காரணமாக இருக்கக்கூடியவர் அருமை அண்ணன் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள்—நான் சொல்லவில்லை, பொது மக்கள் சொல்கிறார்கள், அவரால்தான் ஜாதிக் கலவரம் வருகிறது என்று—நீதிமான் சபையிலிருந்து பேசுகிறேன். நீதி தேவனாக கரிகாலன் வழிவந்த டாக்டர் கலைஞர் அவர்களே, எனக்கு ஒரு நீதி, நாட்டிலே உள்ள மற்ற பிரஜைகளுக்கு ஒரு நீதியா? ஆகவே யார் என்று பார்க்காமல்—

முற்பகல் 11-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொஞ்சம் அமைதியாகப் பேசுங்கள். ஒலிபெருக்கியே வேண்டாம் நீங்கள் இப்படிப் பேசுவதற்கு. கொஞ்சம் அமைதியாகப் பேசுங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** ஆகவே, யாராக இருந்தாலும், தவறு செய்தவர்களைக் கைது செய்யுங்கள். கோர்ட்டில் நிரூபணமாகி ஜாமீனில் வரட்டும். இல்லையென்றால் anticipatory bail-லில் வரட்டும். இந்தமாதிரி செய்யுங்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. இரா. தாமரைக்கனி] [1998 நவம்பர் 25

இன்னொன்று, தமிழ்நாட்டில் உங்கள் ஆட்சிக்கு ஜாதித் தலைவர்களால் கேடு வருகிறது. மதத் தலைவர்களால் கேடு வருகிறது. ஏற்கெனவே ஒரு ஜாதித் தலைவரை உள்ளே பிடித்துப் போட்டிருக்கிறீர்கள். இன்னொரு ஜாதித் தலைவரை நீங்கள் உள்ளே போடவில்லை. என்ன அது தலைவரே, உங்களுக்கும் அவருக்கும் கண்ணாமூச்சி விளையாட்டு. ஒன்றுமே புரியவில்லை. மக்கள் பேசிக்கொள்கிறார்கள். ஒன்று, அவர் அந்தக் கொலைக் குற்றம் செய்யும்போது அங்கே இருந்தாரா? F.I.R. போட்டிருப்பது உண்மையா, இல்லையா? குற்றவாளியா, இல்லையா என்பதை கோர்ட்டில் நிரூபிக்கட்டும். S.P. உங்கள் கன்ட்ரோலில் உள்ளவர். அவர் எப்.ஐ.ஆர். போட்டது சரியா, சரியில்லையா என்பதை நீங்கள் தெள்ளத் தெளிவாக சபையில் தெரிவிக்க வேண்டும். "பாம்புக்குப் பால் ஊற்றி வளர்த்த மாதிரி" வளர்க்காதீர்கள். அது இந்த நாட்டுக்கும் சமுதாயத்திற்கும், உங்களுக்கும் கெட்டது. ஆகவே, அருள்கூர்ந்து தவறு செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுங்கள். கைது பண்ணுங்கள். அங்கே கொலையில் சதித்திட்டம் தீட்டிவிட்டு இங்கே ஜாதித் தலைவர்கள் கூட்டத்தில், சர்வ கட்சிக் கூட்டத்தில் கலந்துகொள்வது, முதலமைச்சரைப் பார்ப்பது, சபாநாயகரைப் பார்ப்பது, பேசுவது, சட்டசபைக்கு வருவது, சபை மரபுக்கே உகந்ததல்ல. 'ஒரு தவறு செய்தால், அதைத் தெரிந்து செய்தால், அவன் தேவன் என்றாலும் விடமாட்டேன்,' என்று 40 ஆண்டு கால நண்பர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களே சொல்லியிருக்கிறார்கள். அவர் யார்? தி.மு.க.வினுடைய பொருளாளராக இருந்தார். M.L.C.-யாக இருந்தார். M.L.A.-வாக இருந்தார். அவர் சொல்வதைக் கேட்டு அவருடைய அண்ணன் நீங்கள் உடனே கைது செய்யுங்கள், கைது செய்யுங்கள் என்று கூறி விடைபெறுகிறேன்.

***டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் உங்களுக்கு வாய்ப்புக் கொடுக்கிறேன். திரு. லா. சந்தானம்.(குறுக்கீடு)

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** "பாம்புக்குப் பால் ஊற்றி வளர்த்தமாதிரி என்ற வார்த்தைகளைப் போடுகிறார். அதையெல்லாம் நீக்கவேண்டும். இல்லையென்றால் பிரச்சினை வரும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் உங்கள் பெயரைச் சொன்னால் அதை நீக்கலாம்.



1998 நவம்பர் 25]

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** தொடர்ச்சியாக என்னுடைய பெயரைப் பயன்படுத்திவிட்டு, அதனுடைய கோர்வையாக வருகிறது. வன்முறையைத் தூண்டுகிறமாதிரி இருக்கிறது. அதையெல்லாம் நீக்க வேண்டும். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தாமரைக்கனி, "பாம்புக்கு பால் ஊற்றி வளர்த்த மாதிரி" என்று நீங்கள், டாக்டர் கிருஷ்ணசாமியை குறிப்பிடவில்லையென்று சொல்கிறீர்களா?

**திரு. இரா. தாமரைக்கனி:** அது உண்மைதான். நான் அவருடைய பெயரைச் சொல்லவில்லை. அவர் என்னுடைய நண்பர்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களைக் குறிப்பிடவில்லையென்று சொல்லிவிட்டார். (குறுக்கீடு) உங்களைக் குறிப்பிடவில்லையென்று அவரே சொல்லிவிட்டார். அது பதிவேட்டில் பதிவாகியிருக்கிறது. திரு. லா. சந்தானம்.

***திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தோட்டத் தொழிலாளர்கள் பிரச்சினையின் காரணமாக அந்த நிருவாகம் கதவடைப்பு செய்த பின்பு அந்தத் தொழிலாளர்களை அழைத்து வேலையைத் தொடங்க வேண்டுமென்று சொல்கிற நேரத்தில், அதற்கு உறுதுணையாக, அந்தத் தோட்டத் தொழிலாளர்கள் வேலைக்குச் செல்வதற்கு உறுதுணையாக இருந்த அந்தோணிமுத்து என்பவர், அவரது வீட்டுக்கு அருகிலேயே, புதிய தமிழகம் கட்சியைச் சார்ந்த நான்கு நபர்களால் வெட்டிக் கொலை செய்யப்பட்டார் என்பது போலீசாருடைய முதல் தகவல் அறிக்கை. தோட்டத் தொழிலாளர்கள் பிரச்சினையிலே, அரசு அந்தத் தொழிலாளர்களுக்கு எந்த உதவிகள் செய்ய முன்வந்தாலும் அதை யாரும் மறுக்கப்போவதில்லை. தொழிலாளர்கள் பிரச்சினை என்கிற நிலையிலே அது பேசித் தீர்க்கப்பெற வேண்டிய ஒன்றாக இருக்க வேண்டுமே தவிர, அந்தப் பிரச்சினைக்காக வன்முறை என்கிற ஆயுதத்தைக் கையிலே எடுத்துக்கொண்டு, அந்த நிருவாகத்திற்கு உதவியாக இருக்கின்ற ஒருவரைக் கொலை செய்வது என்பது எக்காரணத்தைக் கொண்டும் நம்மால் ஒப்புக்கொள்ள முடியாத ஒன்று. அப்படிப்பட்ட நிலையிலே அந்தக் கொலையைச் செய்தவர்களுக்கு உறுதுணையாக, அவர்களைத் தூண்டிவிட்டதாக நமது சட்டமன்ற உறுப்பினர் ஒருவர்மீது முதல் தகவல் அறிக்கையில் போலீசார் குற்றம் சுமத்தியிருக்கிறார்கள். அவர் பெயரும் அதைத் தொடர்ந்து இணைக்கப்பட்டிருக்கிறது. அதைத்தொடர்ந்து உரிய நடவடிக்கையை அரசு எடுக்க வேண்டும்.

[திரு. லா. சந்தானம்] [1998 நவம்பர் 25

*முற்பகல் 11-05*

நண்பர் தாமரைக்கனி சொன்னதைப்போல,

"எள்ளறு சிறப்பின் இமையவர் வியப்ப
புள்ளுறு புன்கண் தீர்த்தோன் அன்றியும்
வாயிற் கடைமணி நடுநா நடுங்க
ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சு சுட
தான்தன் அரும்பெறல் புதல்வனை ஆழியில் மடித்தோன்"

அந்தப் புகார் மண்ணில் இருந்து வந்திருக்கின்ற நீங்கள் தன்னுடைய பிள்ளையே தவறு செய்தாலும் கூட பாரபட்சமற்ற நடவடிக்கை எடுக்கக்கூடிய முதல்வர் என்கின்ற சிறப்பைப் பெற்றிருக்கின்ற நீங்கள் அப்படிப்பட்ட ஒரு நடவடிக்கையை நிச்சயமாக மேற்கொள்ள வேண்டும். இந்த அரசினுடைய தோழமைக் கட்சிக்காரன் என்ற முறையில் இந்த அரசுக்கு எள் அளவு கூட மக்கள் மத்தியிலே அவப்பெயர் வந்துவிடக் கூடாது என்கின்ற நிலையிலே இதை எடுத்துச் சொல்வதற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன். சிதம்பரத்திலே பழனிவேல் என்பவர் கொலை செய்யப்படுகிறார். அந்தக் கொலையிலே வாண்டையார்களின் தூண்டுதலின் பேரிலேதான் அவருடைய ஆட்கள் கொலையை செய்கிறார்கள் என்றுதான் வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது. அந்த வழக்கிலே அவர்களைக் கைது செய்வதற்கு போலீஸ்காரர்கள் மிகச்சிறந்த முயற்சிகளை எடுத்துக்கொண்டார்கள். அவர்களைக் காட்டிக் கொடுப்பவர்களுக்கு இலட்சக்கணக்கான சன்மானங்கள் தருவதாக தொலைக்காட்சியிலும் பத்திரிகைகளிலும் செய்தி வெளியிட்டார்கள். அவர்கள் இன்னமும் தலைமறைவாக இருக்கின்றார்கள். அப்படியெல்லாம் இருக்கின்ற நேரத்தில் மாஞ்சோலையிலே ஏற்பட்ட அந்தோணிமுத்து கொலை வழக்கிலே குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவர், ஏன் இன்னும் நடவடிக்கைக்கு உள்ளாகாமல் இருக்கிறார் என்கின்ற கேள்வியை மக்கள் எழுப்பிக் கொண்டு இருக்கிறார்கள். தேசத்திற்காக 10 ஆண்டுகள் சிறைத் தண்டனையை அனுபவித்த என்னுடைய தலைவன் பசும்பொன் தேவர் அவர்கள்கூட, இப்படிப்பட்ட ஒரு வழக்கிலே குற்றஞ்சாட்டப்பட்டு. கைது செய்யப்பட்டு நிரபராதி என்கின்ற நிலையை அன்றைக்கு நீதிமன்றம்தான் அவருக்கு அளித்து வெளியே அனுப்பியது. அந்த வரலாறு தெரியாத நண்பர் பல இடங்களிலே அவரைக் குற்றவாளி என்றுகூட சொல்லிக்கொண்டு இருக்கிறார். இராமநாதபுரத்திலே நடந்த மாநாட்டிலே அவரை ஒரு Criminal குற்றவாளி என்று சொல்லி குற்றஞ்சாட்டியிருக்கிறார் . . . .



1998 நவம்பர் 25]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாஞ்சோலை பிரச்சினையைப் பற்றிதான் நீங்கள் பேச வேண்டும். மற்றவற்றைப்பற்றி பேச நான் அனுமதிக்க மாட்டேன்.

**திரு. லா. சந்தானம்:** சரி. அது போல, தவறு செய்தவர்கள் எவ்வளவு பெரியவர்களாக இருந்தாலும் சரி, சட்டத்தின் முன்னே குற்றவாளி குற்றவாளிதான். சட்டம் என்பது ஆயிரக்கணக்கான குற்றவாளிகளைத் தண்டித்தாலும்கூட, நிரபராதிகள் தண்டிக்கப்படக்கூடாது. என்று கூறுகிறது. எவ்வளவு பெரியவராக இருந்தாலும் குற்றவாளிகளுக்கு இடம் அளிக்கக் கூடாது என்பது சட்டத்தினுடைய விதி. நியாயம் நிலைநிறுத்தப்பட வேண்டுமென்பது எங்கள் எண்ணம். அங்கு தோட்டத் தொழிலாளி அந்தோணிமுத்து கொலை செய்யப்பட்டிருக்கிறார். அங்கு இருக்கின்ற காவல் துறையினருக்கு என்ன காழ்ப்புணர்ச்சி இருக்க முடியும்? எனவே, அவர்கள் நேர்மையாக இந்த வழக்கைப் பதிவு செய்திருக்க முடியும் என்கின்ற எண்ணத்தோடு, இந்த அரசை வழிநடத்துகின்ற, காவல் துறையினருக்குத் தலைமைப் பொறுப்பை ஏற்றிருக்கின்ற, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த வழக்கிலே உரிய நடவடிக்கையினை எடுத்து குற்றம் சாட்டப்பட்டவரைக் கைது செய்து, அவர் நிரபராதி என்றால் வழக்குமன்றத்தின் மூலமாக வெளியே வரவேண்டுமென்று என்னுடைய இயக்கத்தின் சார்பிலே, என்னுடைய கருத்தினை வலியுறுத்தி விடைபெறுகிறேன், நன்றி. வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் தாலுகா, மாஞ்சோலை, காக்காச்சி, நாலுமுக்கு, குதிரைவெட்டி, ஊத்து உட்பட ஐந்து எஸ்டேட்களில் பணிபுரியும் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட நிரந்தர தொழிலாளர்கள், ஐந்தாயிரம், ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட பகுதி நேரத் தொழிலாளர்கள், தற்காலிகத் தொழிலாளர்கள் உட்பட தமிழகத்திலே இதுபோல பல்வேறு எஸ்டேட்களில் வால்பாறை, ஆனமுடி, கோத்தகிரி, குன்னூர், கூடலூர் போன்ற பகுதிகளிலே பணிபுரியும் 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் கொத்தடிமைகளாக பல்லாண்டுகாலமாக நடத்தப்படுகிறார்கள். அந்தத் தொழிலாளர்களுடைய துயர் நீக்க, தந்தை பெரியார் வழியிலே ஆட்சி செய்து கொண்டிருக்கக்கூடிய, பொதுவுடைமைத் தத்துவத்தை ஏற்றுக்கொண்டிருக்கக்கூடிய. இந்த ஆட்சியிலாவது அதற்கு ஒரு தீர்வு வரவேண்டுமென்ற நோக்கத்தோடு நான் இந்த மாமன்றத்திற்கு பல உண்மைகளை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*முற்பகல் 11-10*

நான் எழுப்பியிருக்கக்கூடிய பிரச்சினை ஒன்று. மாஞ்சோலையிலே கொத்தடிமைகளாக நடத்தப்படக்கூடிய 10,000 தொழிலாளர்கள் மட்டுமல்ல. கோவை மாவட்டம், நீலகிரி மாவட்டத்தில் இருக்கக்கூடிய 10 இலட்சம் தொழிலாளர்கள், அதேபோல் ஏற்காட்டிலே இருக்கக் கூடிய 10 இலட்சம் தொழிலாளர்களுடைய பிரச்சினை.

இன்னொன்று, திருநெல்வேலி மாவட்டம். அம்பாசமுத்திரம். மாஞ்சோலை சிங்கம்பட்டி குரூப் என்று அழைக்கப்படக்கூடிய அந்த தேயிலை, காப்பித் தோட்டங்கள், 8,373 ஏக்கர் தமிழ்நாடு வன இலாகாவிற்குச் சொந்தமான நிலங்கள், 1929 ஆம் ஆண்டு ஆங்கிலேயருடைய ஆட்சிக் காலத்திலே B.B.T.C. நிர்வாகத்திற்கு 99 ஆண்டுகால குத்தகைக்கு விடப்பட்டது. இந்த நாட்டில் மன்னர் ஆட்சி ஒழிக்கப்பட்டது. ஜமீன் முறைகள் ஒழிக்கப்பட்டுவிட்டன. அந்த மன்னர் ஆட்சிக் காலத்திலே, ஜமீன் ஆட்சிக் காலத்திலே ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலே போடப்பட்ட ஒப்பந்தம் மட்டும் இன்னும் தொடரக்கூடிய காரணம் என்ன என்பதைத்தான் இந்த மாமன்றத்தின் வாயிலாக நான் தெரிந்துகொள்ள விரும்புவது. அந்த 8,373 ஏக்கர் நிலங்களும், ஒரு வருடத்திற்கு கோடிக்கணக்கான, சில கோடிகள் அல்ல, 100 கோடி. 200 கோடிக்கு மேல் இலாபம் ஈட்டக்கூடிய இந்த அரசுக்குச் சொந்தமான நிலங்கள், தமிழ்நாட்டு முதலாளிகளிடத்திலே இல்லை, அதுகூட வேறு மாநிலம், வேறு நாட்டைச் சேர்ந்த முதலாளிகளிடத்திலே அந்த நிலங்கள் எல்லாம் இருந்துகொண்டிருக்கின்றன. உங்களுக்கெல்லாம் அதிர்ச்சி தரக்கூடிய ஒரு செய்தியைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் மாஞ்சோலை எஸ்டேட் பிரச்சினை பற்றிப் பேசுங்கள். இந்த பேக்கிரவுண்டு கொடுத்தால் அரை மணி நேரமாகும். இது ஒத்திவைப்புத் தீர்மானம் இல்லை. இந்த மாஞ்சோலை எஸ்டேட்டிலே தொழிலாளர் பிரச்சினை, நீங்கள் அதிலே எடுத்த பங்கு. அதைப் பற்றி தாராளமாகப் பேசுங்கள். இந்த வரலாறு பேச ஆரம்பித்தீர்கள் என்றால், எப்போது முடிப்பது?

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** அந்த 8,373 ஏக்கருக்கும், ஒரு ஏக்கர் நிலத்திற்கு B.B.T.C. நிர்வாகம் தமிழ்நாடு அரசிற்கு ஒரு வருடத்திற்கு செலுத்தக்கூடிய குத்தகைத் தொகை வெறும் ரூ. 10 மட்டும்தான். இப்படியாக 8,373 ஏக்கருக்கும் 83,000 ரூபாய் மட்டுமே செலுத்திக்கொண்டு. கோடிக்கணக்கான ரூபாய் சம்பாதிப்பதற்கு



10,000-க்கும் மேற்பட்ட தொழிலாளர்களைப் பட்டினி போட்டு சுரண்டுவதற்கு இந்த அரசு உடந்தையாக இருக்கப் போகிறதா என்பதுதான் கேள்வி. அந்த B.B.T.C. எஸ்டேட்டிலே என்ன நடந்துகொண்டிருக்கிறது? 1951 ஆம் ஆண்டு பிளாண்டேஷன் தொழிலாளர்களுக்கு விதிக்கப்பட்ட எந்தச் சட்டமும் அமல்படுத்தப்படவில்லை. வெளியிலேயிருந்து போய் அந்தப் பிரச்சினையைத் தொடரக் கூடாது என்று சொல்கிறார்கள். அந்தத் தொழிலாளர்கள் தாங்களாகவே போராடி நிச்சயமாக விடுதலை வாங்கவே முடியாது. அங்கே பணிபுரியக்கூடிய தொழிலாளர்கள் நூற்றுக்கு 90 சதவீதம் பேர் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள். அந்தத் தொழிலாளர்களுக்கு என்று உருவாக்கப்பட்ட சங்கங்களும் அந்த மக்களுடைய பிரச்சினையை எடுத்ததாகத் தெரியவில்லை. அங்கே விதிமுறைகளும், 1951-லே தொழிலாளர்களுடைய பாதுகாப்பிற்காக போடப்பட்ட எந்தச் சட்டங்களும் அமல்படுத்தப்படவில்லை. 15 ஆண்டுகாலம், 20 ஆண்டுகாலம் தற்காலிகத் தொழிலாளர்களாக வைக்கப்பட்டிருக்கிறார்கள். 30 ஆண்டுகாலத்திற்கு முன்பு சேர்ந்த தொழிலாளிக்கும் இன்று சேரக் கூடிய தொழிலாளிக்கும் ஓரே சம்பளம் வைத்திருக்கிறார்கள். ரூ. 55 தான் கூலி கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அங்கே அவர்கள் குடியிருக்கக்கூடிய வீடுகள் எல்லாம் ஒழுகிக்கொண்டிருக்கின்றன. அவர்கள் குடியிருக்கக்கூடிய வீடுகளுக்குச் செல்ல வழி கிடையாது. அவர்களது பிள்ளைகள் படிக்க முறையான வசதிகள் கிடையாது. முறையான மருத்துவ வசதிகள் கிடையாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் திரும்பத் திரும்பச் சொல்கிறேன். பிறகு நான் உங்களுக்கு அளித்த அனுமதியை மறுக்க வேண்டிய அவசியம் ஏற்படும். இந்தக் கொலையைப் பற்றிப் பேசுங்கள். தொழிலாளர்கள் போராட்டத்திற்காக நீங்கள் போனீர்களா. இல்லையா? அங்கே என்ன நடந்தது. அதைப் பற்றிப் பேசுங்கள். அதை விட்டுவிட்டு நீங்கள் தொழிலாளர் நலன் மானியக் கோரிக்கையில் பங்கேற்பது மாதிரி பேசினால் எப்படி?

***மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மக்கள் சபைக்கு உண்மைக்குப் புறம்பான தகவலைக் கொடுத்தால் இங்கேயே உரிமைப் பிரச்சினை எழுப்பக்கூடும். அவர் எந்தக் கோரிக்கை வைத்திருக்கிறாரோ. அந்தக் கோரிக்கை குறித்து there is no dispute. சட்டத்திற்கு உட்பட்டு. விதிகளுக்கு உட்பட்டு கோரிக்கைகளை அவர் வைக்கவில்லை. அடுத்து ஒரு பிரச்சினை.

[திரு. அ. இரகுமான்கான்] [1998 நவம்பர் 25

தொழிலாளர்களுடைய நலச் சட்டம் இருக்கிறது. சட்டத்தின் அடிப்படையில் எல்லாம் கறாராக அமல் நடத்தப்படுகிறது. கொத்தடிமைகள் இருக்கிறார்கள் என்று சொன்னால், அவர் ஆதாரத்தோடு சொன்னால் நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறோம். எனவே, தொழிலாளர்களின் நலத்திற்காக இப்படி ஒரு சட்டம் கறாராக அமல் நடத்தப்படுகிறது. ஆதாரம் இருந்தால், இந்தச் சபையில் சவால் விட்டுக் கேட்கிறேன். சொல்லட்டும்:

முற்பகல் 11-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் சொல்கிற பிரச்சினை அதுதான். சட்டம் ஒழுங்குப் பிரச்சினை என்பதால் மாண்புமிகு முதலமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவர இந்தச் சிறப்புக் கவன ஈர்ப்புக்கு அனுமதி அளித்துள்ளேன். நீங்கள் இதுவரை தொழிலாளர் நலத் துறை அமைச்சர் பதில் சொல்கிறமாதிரிப் பேசிக் கொண்டிருக்கிறீர்கள். நான் அதை அனுமதிக்க முடியாது. சம்பந்தப்பட்ட பிரச்சினையை மட்டும்தான் நீங்கள் பேச வேண்டும். நீங்கள் என்ன பேச வேண்டுமென்றால், நீங்கள் எழுதிக் கொடுத்திருக்கிறீர்கள், இந்தக் கொலையிலே தவறாக உங்கள் பெயரைச் சேர்த்திருக்கிறார்கள் என்று. அதை விவாதிக்க வேண்டுமென்று நீங்கள் எழுதிக் கொடுத்திருக்கிறீர்கள். அதை நீங்கள் பேசுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மூன்று முக்கியமானப் பிரச்சினைகளைப்பற்றி அறிவிப்புக் கொடுத்திருக்கிறேன். தொழிலாளர் பிரச்சினை, இந்த எஸ்டேட் பிரச்சினையை அரசாங்கத்திடம் வைத்திருக்கிறேன். அதுபோன்ற மூன்று பிரச்சினைகளைச் சுட்டிக்காட்டியிருக்கிறேன். எனக்குச் சம்பந்தமில்லாத கொலையைப் பற்றி பேசச் சொல்கிறீர்கள். என்னை கொலை வழக்கிலே சேர்த்ததுபற்றி நான் least bothered.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் bothered. அல்லது bothered இல்லையா என்பதில்லை. நான் சொல்வதைக் கொஞ்சம் கேளுங்கள். கொலை வழக்கிலே உங்கள் பெயரைச் சேர்த்ததுபற்றி நீங்கள் எழுதிக் கொடுத்திருக்கிறீர்கள். நாட்டிலே நடக்கிற முக்கியமான பிரச்சினைகளுக்குத்தான் சிறப்புக் கவன ஈர்ப்பு. நீங்கள் சொல்கிற தொழிலாளர் பிரச்சினை இன்றைய பிரச்சினை அல்ல. நீங்கள் சொல்வதைப் பார்த்தால் 100 ஆண்டுகளாக இருக்கிற பிரச்சினை. அதற்குச் சிறப்புக் கவன ஈர்ப்பு தேவையில்லை.



1998 நவம்பர் 25]

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, டாக்டர் கிருஷ்ணசாமி கொடுத்துள்ள சிறப்புக் கவன ஈர்ப்பினுடைய வாசகம் "மாஞ்சோலை எஸ்டேட் தொழிலாளி கொலை வழக்கில் உண்மைக்கு மாறாக எனது பெயரை முதல் தகவல் அறிக்கையில் சேர்த்திருப்பதால் நிலவுகின்ற பதற்றம் குறித்து விவாதிக்க" என்பதுதான்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** நான் மூன்று அறிவிப்புகளைக் கொடுத்திருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் மூன்று அறிவிப்புகளைக் கொடுத்திருக்கலாம். நான் இதைத்தான் அனுமதிக்கிறேன். இது கொலை விஷயம் என்பதால்தான் நான் சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்ள அனுமதிக்கிறேன்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** எனக்கு முக்கியமானப் பிரச்சினை தொழிலாளர் பிரச்சினைதான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்படியானால் இதிலே ஒன்றும் பேசுவதற்கில்லை என்று சொல்லிவிட்டு உட்கார்ந்துவிடுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** தாமரைக்கனிகூட தொழிலாளர் பிரச்சினையைப் பற்றி பேசினார். தொழிலாளர் பிரச்சினையைப் பற்றி பேசாமல் . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தொழிலாளர் பிரச்சினை என்பதற்காக நான் சிறப்புக் கவன ஈர்ப்பு அனுமதிக்கவில்லை. உங்களைத் தவறாக கொலை வழக்கில் சேர்த்ததாக நீங்கள் எழுதிக் கொடுத்திருப்பதால், நீங்கள் சொன்ன வார்த்தைக்கு மரியாதை கொடுத்து நான் அனுமதி கொடுத்திருக்கிறேன். ஆகையால், தவறாக உங்கள் பெயரைச் சேர்த்ததைப்பற்றி மட்டும் தயவுசெய்து பேசுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** ஒரேயொரு வார்த்தை சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சொல்கிற மற்ற பிரச்சினைகள் எல்லாம் உண்மையில்லை என்று நான் மறுக்கவில்லை. நான் மாண்புமிகு அமைச்சர் மாதிரிகூட உங்களிடம் அதிலே சவால் எல்லாம் விடவில்லை. நான் இப்பொழுது உங்களுக்குக் கொடுத்திருக்கிற அனுமதி, மாண்புமிகு முதலமைச்சர் சொன்னதுபோல், உங்களை இந்தக் கொலை வழக்கில் தவறாக சேர்த்திருப்பதை விவாதிப்பதற்காகத்தான். அதைப்பற்றி மட்டும் நீங்கள் தயவுசெய்து பேசுங்கள்.

[1998 நவம்பர் 25

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** நான் அங்கு கொத்தடிமைப் பிரச்சினை இருக்கிறதா, இல்லையா என்பதற்கு ஒன்றேயொன்றை மட்டும் சொல்கிறேன். அதாவது, "The employer shall not deny to the public free access to those parts of the plantations where the workers are housed". தொழிலாளர்கள் எங்கே வேண்டுமானாலும் நடமாடுவதற்காகத்தான், நடமாடுகிறமாதிரி இருக்கும் என்று சொல்லியிருக்கிறது. ஆனால் மாலை 6 மணியிலிருந்து 7½ மணி வரையிலும் பி.பி.டி.சி. நிர்வாகம் தனி கதவு போட்டு மூடி வைத்துவிடுகிறார்கள். இது ஒன்றே போதும். பல விஷயங்களை நான் சொல்ல முடியும்.

***மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறுக்கிடுவதற்காக மன்னிக்க வேண்டும். தவறான தகவலை அவர் திரும்பத் திரும்பக் கொடுக்கிறார். உதாரணத்திற்குச் சொல்கிறேன். தோட்டத் தொழிலாளியின் சம்பள உயர்வு சம்பந்தமாக ஏற்கெனவே ஓர் ஒப்பந்தம் இருக்கிறது. 1998 டிசம்பரில்தான் அது காலாவதி ஆகிறது. சட்டப்படி அப்போதுதான் பேசமுடியும். இது ஒரு எஸ்டேட்டுக்கு மட்டும் அல்ல, எல்லா எஸ்டேட்டுகளுக்கும் பொருந்தும். அவருக்கும் இந்த விவரம் தெரியும். தெரிந்தும் பேசுகிறார்.

கொத்தடிமைப் பிரச்சினையைப் பொறுத்தமட்டில் அவர் கவனத்திற்குக் கொண்டுவந்தால், அது மாவட்ட ஆட்சித் தலைவருக்கு உட்பட்டது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை சம்பந்தப்பட்டது. இதற்கென்று தனிச் சட்டம் இருக்கிறது. காஞ்சிபுரத்திலே, வேலூரிலே இது போன்ற பிரச்சினைகளை கவனத்திற்குக் கொண்டுவந்தபோது, அந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அதைக் கண்டுபிடித்து சட்டப்படி நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். ஆதாரத்தோடு இந்த இடத்திலே, இங்கே என்று அவர் கொடுத்தால் நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறோம். இது என்னுடைய துறையில்லை என்று சொன்னாலும், inter related என்ற முறையில் இந்தகுப் பதிலை அளிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் அதற்குத்தான் டாக்டர் கிருஷ்ணசாமியிடம் சொல்கிறேன். நீங்கள் இதுவரை பேசியவை பூராவும் மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சரின் பிரச்சினை. நான் சட்டம் ஒழுங்குப் பிரச்சினைபற்றி உங்களைப் பேச அனுமதி கொடுத்திருக்கிறேன். தயவுசெய்து அதை மாத்திரம் பேசுங்கள்.



1998 நவம்பர் 25]

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பெயரை ஒரு தொழிலாளி கொலை வழக்கிலே சேர்த்ததைப்பற்றி சகோதரர் தாமரைக்கனி அவர்களும், சந்தானம் அவர்களும் பேசியதற்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால், இந்த மாமன்றத்திலே இருக்கக்கூடிய உறுப்பினர்களுக்கும், நாட்டு மக்களுக்கும் இந்த மன்றத்தின் மூலமாக விளக்கம் அளிப்பதே சரியானதாக இருக்க முடியும். "மடியிலே கனம் இருந்தால்தான் வழியிலே பயம் இருக்க முடியும்". நான் அங்கே மூன்று மாதமாக போராடிக் கொண்டிருக்கக்கூடிய தொழிலாளர்களைப் பார்ப்பதற்காகச் சென்றேன். இரவு வீரவநல்லூரில் நடந்த கலவரத்தைப் பார்ப்பதற்காக அங்கே சென்றபோது போராடிக்கொண்டு இருக்கக்கூடிய தொழிலாளர்கள் மீது Contition bail போட்டுக்கொண்டு இருந்தார்கள். கல்லிடைக்குறிச்சியிலும் அவர்கள் இருந்தார்கள். அவர்களைப் பார்த்துவிட்டு நான் மறுநாள் தொழிலாளர்களுடைய வேண்டுகோளுக்காக மாஞ்சோலை செல்வதற்காக கலெக்டரிடம் அனுமதி கேட்டேன். காலை ஏழேமுக்கால் மணி இருக்கும். கல்லிடைக்குறிச்சியிலிருந்து புறப்படுவதற்கு முன்பாகவே 7½ மணிக்கு மாஞ்சோலையிலே ஒரு கொலை நடந்திருக்கிறது. தென் மாவட்டங்களில் எங்கே சுற்றுப்பயணம் செய்தாலும் காவல் துறை என்னோடு கூடவே வந்துகொண்டிருக்கிறது. நான் போகின்றபோதெல்லாம் முன்னால் ஒரு ஜீப் வரும்; பின்னால் ஒரு ஜீப் வரும். நான் கல்லிடைக்குறிச்சியிலிருந்து புறப்படும்போது போலீஸ் கூடவே வந்தது. நாலுமுக்கு எஸ்டேட்டிலே பேசுகிறபோது போலீஸ் கூடவே இருக்கிறது. ஊத்து எஸ்டேட்டுக்குப் போகிறபோது போலீஸ் கூடவே இருக்கிறது. அப்பொழுது கிருஷ்ணசாமி எங்கே அந்தக் கொலையிலே சம்பந்தப்படுவது? திட்டமிட்டே 'போலீஸ் அதிகாரிகள் தூத்துக்குடி எஸ்.பி-யும், திருநெல்வேலி எஸ்.பி-யும் இரண்டு பேரும் . . .

முற்பகல் 11-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் காவல் துறை பற்றித்தான் உங்களைப் பேச அனுமதித்தேன். நான் நேற்றைக்கே சொன்னேன், என்னிடம் ஆதாரம் காட்டாமல் இதைப் பேச நான் அனுமதிக்க மாட்டேன் என்று; நீங்கள் ஒட்டுமொத்தமாக காவல் துறை என் பேரிலே காழ்ப்புணர்ச்சியோடு இருக்கிறது என்று சொல்லுங்கள். அது வேறு சமாச்சாரம்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** இரண்டு காவல் துறை அதிகாரிகள் காழ்ப்புணர்ச்சியோடு எப்படியாவது இந்தப் போராட்டத்திலே கலந்து

கொள்ளக்கூடாது; ஏனென்றால் இதற்கு முன்பு நடந்த எல்லா போராட்டங்களையும் எப்படியாவது அவர்கள் தோற்கடித்திருக்கிறார்கள் அல்லது விலை கொடுத்து வாங்கியிருக்கிறார்கள். இப்போது இதை ஒன்றும் செய்ய முடியவில்லை. அப்பொழுது இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி காவலர்கள் கூடவே ஜீப்பிலே வருகிறார்கள். இன்ஸ்பெக்டர் கூட வருகிறார். முன்னால் ஒரு ஜீப் வருகிறது. பின்னால் ஒரு ஜீப் வருகிறது. எனக்கு எதுவுமே தெரியாது. மேலே 11½ மணி வரையிலும் இருந்துவிட்டு நான் கீழே இறங்கிய பிறகு காலை 7½ மணிக்கு நடந்த கொலைக்கு சாயந்திரம் 6 மணிக்கு மேலே F.I.R. போடுகிறார்கள். இதிலே எப்படி கிருஷ்ணசாமி சதி வருகிறது? எப்படி சம்பந்தம் இருக்கிறது? நான் என்ன கேட்கிறேன் என்றால் இந்த காவல் துறை அதிகாரிகள் திட்டமிட்டே, வேண்டுமென்றே நிர்வாகத்தோடு கைகுலுக்கிக் கொண்டு என் மேலே களங்கம் சுமத்துவதற்காக செய்திருக்கிறார்கள். அதனால்தான் முதலமைச்சர் இதைப் பார்த்து, என்னுடைய பெயர் அதிலே சேர்த்தது சட்டவிரோதமானது; நியாயத்திற்குப் புறம்பானது உண்மைக்கு மாறானது, நீக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறேன்.** நான் அப்படியெல்லாம் இல்லை. (மணியடிக்கப்பெற்றது) (குறுக்கீடுகள்)

**திரு. லா. சந்தானம்:** என்னைப்பற்றிச் சொன்னதை டாக்டர் கிருஷ்ணசாமி திரும்பப்பெற வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் கிருஷ்ணசாமி அவ்வாறு எல்லாம் பேசக் கூடாது. அது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, கிருஷ்ணசாமி பேசும்போது தாமரைக்கனியைப் பற்றி சந்தானத்தைப் பற்றியெல்லாம் குறிப்பிட்டார். அதற்குத் தாங்கள் உடனடியாக தடை விதித்திருக்கிறீர்கள். ஆனால் தங்கள் காதில் விழுந்திருக்காது என்று கருதுகிறேன். இன்னொன்றையும் சொன்னார். ** என்று சொன்னார். அது அவைக் குறிப்பிலே இடம்பெறக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. நீங்கள் வாதத்தில் தரமாகப் பேசுங்கள். தாமரைக்கனி ரொம்ப ஜாக்கிரதையாகப் பேசினார். உங்கள் கட்சியைச் சார்ந்தவர்கள்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



செய்தார்கள், நீங்கள் செய்யவில்லை என்றுதான் பேசினார். அதற்குமேலே அவர் என்ன குற்றச்சாட்டு சொல்கிறார் என்றால் "F.I.R.-ல் பெயர் இருப்பதால் நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். இல்லையென்றால் அவராவது முன் ஜாமீன் கேட்டிருக்க வேண்டும்" என்று சொன்னார். "என் பெயரை அநியாயமாகச் சேர்த்துவிட்டார்கள்; அரசாங்கம் பழி வாங்குகிறதோ, அதிகாரிகள் பழி வாங்குகிறார்களோ" என்று நீங்கள் சொல்லுங்கள். எனக்கு அதிலே கருத்து வேறுபாடு கிடையாது. நீங்கள் உறுப்பினர்கள் இரண்டு பேர்களோடும் விவாதம் பண்ணிக்கொண்டு இருக்காதீர்கள். நீங்கள் முதலமைச்சரிடம் இந்த வழக்கு விஷயமாக என்ன செய்ய வேண்டும் என்பதைச் சொல்லி, உட்காருங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** எனவே, இந்த அந்தோணிமுத்து தொழிலாளி கொலை வழக்கில் என்னுடைய பெயரைச் சேர்த்தது தவறானது, உண்மைக்கு மாறானது, இதை நான் முதலமைச்சரிடத்திலே நேரடியாக விளக்கியிருக்கிறேன். இந்த மாமன்றத்தின் மூலமாகவும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எனவே F.I.R.-லிருந்து என் பெயர் முழுமையாக நீக்கப்பட வேண்டும் என்பதை இந்த மாமன்றத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அத்தோடு கொத்தடிமை தொழிலாளர்கள் விடுதலைக்கும் அரசு ஏதாவது ஒரு விசாரணை கமிஷன் அமைக்க வேண்டும். 150 ரூபாய் கூலி கேட்டு போராடக்கூடிய தொழிலாளர்களுடைய பிரச்சினையிலேயும் முதலமைச்சர் அவர்கள் நேரடியாகத் தலையிட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு விடை பெறுகிறேன். நன்றி. வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளிர்கால கூட்டத்தொடர் குளிர் மயமாகவே ஆகிவிடக்கூடாது என்பதற்காக கம்பளி கேட்டதற்கு மாறாக சற்று சூடான விவாதம் இந்தச் சிறப்புக் கவன ஈர்ப்பிலே நடைபெற்றிருக்கிறது. இருந்தாலும் இந்தச் சூடு இந்த அவையோடு நின்றுவிட வேண்டும். இதற்கு வெளியிலும் பரவிடக்கூடாது என்கின்ற ஆழ்ந்த அக்கறையோடு இந்தச் சிறப்புக் கவன ஈர்ப்பிலே உரையாற்றிய சட்டமன்ற உறுப்பினர்கள் திருவாளர்கள் தாமரைக்கனி, சந்தானம், கிருஷ்ணசாமி ஆகியோருடைய கருத்துக்களின் அடிப்படையில் அல்ல, அவை குறித்து சிலவற்றை நான் இங்கே கூற விரும்புகின்றேன்.

[கலைஞர் மு. கருணாநிதி] [1998 நவம்பர் 25

முற்பகல் 11-25

முதலில், இந்த நெல்லை மாவட்டத்திலேயுள்ள மாஞ்சோலை தேயிலைத் தோட்டத்தைப் பற்றி ஒரு சிறு குறிப்பை வழங்க விரும்புகின்றேன். Bombay Burma Trading Corporation Ltd., என்ற நிறுவனம் 1929 ஆம் ஆண்டிலிருந்தே திருநெல்வேலி மாவட்டத்தில் மாஞ்சோலைப் பகுதியில் தேயிலைத் தோட்டத் தொழிலைத் தொடர்ந்து செய்து வருகின்றது. இந்தத் தொழிற்சாலையிலே ஆண்களும் பெண்களும் சேர்ந்து நிரந்தரமாக 1,631 பேரும், தற்காலிகமாக 714 பேரும் பணியாற்றி வருகின்றார்கள். இந்த 2,345 தொழிலாளர்களில் 1,190 தொழிலாளர்கள் INTUC., AITUC., தி.மு.க., அ.இ.அ.தி.மு.க. தொழிற் சங்கங்களிலே உறுப்பினர்களாக இருக்கின்றார்கள். தொழிலாளர்கள் பிரச்சினை தோன்றும்போதெல்லாம், மேற்கண்ட சங்கப் பிரதிநிதிகளை நிர்வாகம் அழைத்துப் பேசி, சுமுகமான சூழ்நிலையிலே இதுவரையிலே இயங்கி வந்தது. திடீரென்று கடந்த ஆகஸ்ட் திங்களில் புதிய தமிழகம் கட்சியின் தலைவர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, நிர்வாகத்திற்கு நீண்டகால குத்தகைக்கு விடப்பட்ட தேயிலைத் தோட்டத்தை அரசாங்கம் திரும்பப் பெற்று அங்கே பணியாற்றும் தொழிலாளர்களுக்குப் பிரித்து வழங்க வேண்டுமென்றும், தொழிலாளர்களுக்கு நாளொன்றுக்கு ரூபாய் 150 கூலியாகவும், அதற்குமேல் சில பணச் சலுகைகளையும் வழங்க வேண்டுமென்றும் ஏற்க முடியாத சில கோரிக்கைகளை வலியுறுத்தி போராட்டத்தைத் தொடங்கினார். 18-8-1998 அன்று சேரன்மாதேவி R.D.O. முன்னிலையிலேயும், 19-8-1998 அன்று திருநெல்வேலி D.R.O. முன்னிலையிலேயும், பேச்சுவார்த்தைகள் நடந்தன. 20-8-1998 அன்று டாக்டர் க. கிருஷ்ணசாமி தடையை மீறி மாஞ்சோலைப் பகுதிக்கு 300 நபர்களோடு சென்று கூட்டங்களை நடத்தியிருக்கிறார். 25-8-1998 மற்றும் 28-8-1998 ஆகிய தேதிகளில் மதுரையில் தொழிலாளர் நலத் துறை இணை ஆணையாளர் முன்னிலையில் நடந்த பேச்சுவார்த்தைக்கு, புதிய தமிழகம் கட்சியைச் சேர்ந்த தொழிற் சங்கம் அங்கீகரிக்கப்பட்ட சங்கம் இல்லை என்றபோதிலும் அந்தக் கட்சியின் சார்பில் கிருஷ்ணகுமார் என்பவர் கலந்துகொள்ள அனுமதிக்கப்பட்டார். இந்தப் பேச்சுவார்த்தையின்போது வேலை நிறுத்தத்தை விலக்கிக்கொள்ளவும் ஊதிய உயர்வு குறித்து ஜனவரி 1999-இல் முடிவு செய்வது என்றும் அனைத்து தொழிற் சங்கங்களாலும் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தில் புதிய தமிழகம் கட்சியின் சார்பில் கலந்துகொண்டவரும் கையெழுத்து இட்டுள்ளார். ஆனால், அந்த ஒப்பந்தத்திற்கு மாறாக திரும்பவும் வேலைநிறுத்தம் என்று அறிவித்து, அதைத் தொடர அவர்கள் முடிவு செய்தார்கள்.



1998 நவம்பர் 25] [கலைஞர் மு. கருணாநிதி]

மாஞ்சோலை தேதியிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்குத் தற்போது வழங்கப்பட்டுவரும் நாள் கூலி 54 ரூபாய் 68 காசு. இந்த நாள் கூலியை நாளொன்றுக்கு 150 ரூபாயாக உயர்த்த வேண்டுமென்று கிருஷ்ணசாமி கூறுகிறார். தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு கூலி நிர்ணயம் தனிப்பட்ட ஒரு நிறுவனம் மாத்திரம் செய்ய இயலாது. இந்தக் கூலி, அகில இந்திய அளவில் •தேயிலைத் தோட்ட நிர்வாகங்களும், தொழிற்சங்கப் பிரதிநிதிகளும் 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை பேசி, ஒப்பந்தம் செய்து அதன் அடிப்படையிலே நிர்ணயிக்கப்படுவது ஆகும். தற்போது நடைமுறையிலே உள்ள ஒப்பந்தம் டிசம்பர் 1998 வரைதான் அமலிலே இருக்கும். இன்னும் 2 மாதங்கள் முடிந்து அவர்களுடைய கூலி ஒப்பந்தம் புதிதாக நிர்ணயிக்கப்படவுள்ளது. அவ்வாறு நிர்ணயிக்கும்போது, அதை ஏற்றுக்கொள்வதாக அந்த நிறுவனம் ஏற்கெனவே ஒத்துக்கொண்டுவிட்ட பிறகு போராட்டத்தை நடத்தியிருக்கிறார்கள்.

அவர்கள் சொன்னார்கள், ஏதோ கொத்தடிமை முறை எல்லாம் அங்கே இருப்பதாக. 27-9-1998 அன்று வெளி வந்த 'எக்ஸ்பிரஸ்' பத்திரிகையில் தொழிற் சங்கங்களின் தலைவர்களுடைய பேட்டி வெளியாகியிருக்கிறது.

" Leaders of various trade unions have said that the Mancholai B.B.T.C. Estate issue is politically motivated and not even a single case of bonded labour exists in the issue.

கொத்தடிமை என்ற நிலையே அங்கே இல்லை என்று சொல்லுகிறார்கள்.

Speaking to newsmen today, leaders of Anna Thozhil Sangam , National Estate Workers' Union affiliated to INTUC and AITUC said, for the past 70 years the workers had been leading a peaceful and happy life in the estate.

அதற்குப் பிறகுதான் கிருஷ்ணசாமி அங்கே போகிறார்.

Dr. Krishnasamy had given tall promises to workers, which nobody could fulfil, they added.

யூனியன் தலைவர்களே சொல்கிறார்கள் இந்தக் கருத்தை.

Dr. Krishnasamy had given tall promises to workers, which nobody could fulfil, they added.

They said the workers had good housing facility, power supply, six schools, hospital, police station, bus services and other facilities. If the factory was not opened immediately, the workers would be severely affected".

என்கின்ற அளவிற்கு யூனியனைச் சேர்ந்தவர்கள், மற்ற பல்வேறு யூனியன்களைச் சேர்ந்தவர்கள், நான் குறிப்பிட்டதைப்போல பெரும்பான்மையான தொழிலாளர்களைக் கொண்ட யூனியனைச் சேர்ந்தவர்கள் அங்கே கொத்தடிமை முறை அறவே இல்லையென்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறார்கள்.

*முற்பகல் 11-30*

இதற்கிடையிலேதான் கிருஷ்ணசாமி அவர்கள் அங்கே சென்று 150 ரூபாய் பெறுவதற்கான போராட்டத்தை அந்தத் தொழிலாளிகளிடத்திலே அறிவித்து, அவருடைய சங்கத்தைச் சேர்ந்தவரே கலந்துகொண்டபேச்சுவார்த்தைக் கூட்டத்திலே ஒப்புக் கொள்ளப்பட்டதை மீறி, மீண்டும் ஒரு போராட்டத்தை நடத்தியிருக்கிறார். இது என்ன நியாயம் என்று எனக்கே தெரியவில்லை. நான் கிருஷ்ணசாமி அவர்களுக்குச் சொல்லிக்கொள்வேன். இங்கே நம்முடைய தாமரைக்கனி, சந்தானம் இவர்கள் எல்லாம் குற்றஞ்சாட்டினார்கள் என்பதற்காகக் கோபப்பட்டுக்கொள்ளக்கூடாது. அவர்கள் பொதுவுடைமை என்றெல்லாம் சொன்னார்கள். மக்களுக்காகத்தான் தன்னுடைய கடமைகளை ஆற்றுவதாகச் சொன்னார். அதிலே யாருக்கும் கருத்துப் பாகுபாடு இல்லை. ஆற்றத்தான் வேண்டும். கிருஷ்ணசாமியைப் போன்ற வாலிபர்கள் ஆக்கபூர்வமான காரியங்களிலே ஈடுபடுவதை எல்லோரும், எல்லாக் கட்சிகளிலே உள்ளவர்களும் நிச்சயமாக விரும்பத்தான் செய்வார்கள். ஆனால், அவருக்கு ஒன்று சொல்லுகின்றேன். அப்படி, ஆக்கபூர்வமான காரியங்களிலே ஈடுபடும்போது, ஒரு பழமொழி உண்டு, "அகல உழுவதைவிட ஆழ உழுவது நல்லது" என்று. எனவே, ஒரு குறிப்பிட்ட இடத்திலே, அவரவர் சக்திக்கு ஏற்றபடி, அவர் வேண்டுமானால் தமிழ்நாடு முழுவதும் தனக்கு சக்தி இருப்பதாக எண்ணிக்கொண்டு பணியாற்றலாம். இருந்தாலும்கூட, ஆழ உழ கற்றுக்கொள்ள வேண்டும். கண்டதேவி தேரா, அங்கே செல்வேன்; கோயம்புத்தூரிலே ஆலயப் பிரவேசமா, அங்கே செல்வேன்; நெல்லையிலே மாஞ்சோலையா, அங்கே செல்வேன் என்று இப்படி அகல உழ ஆரம்பிப்பது நல்லதல்ல என்பதை அவருக்கு நான் உரிமையோடு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், 3-9-1998 முதல் இந்தப் போராட்டத்தின் தொடர்ச்சியாக அந்தப் பகுதியிலே பதற்றம் நிலவத் தொடங்கியது. 4-9-1998 அன்று மாஞ்சோலை, நாலுமுக்கு, ஊத்து ஆகிய இடங்களில் தொழிலாளர்கள் வன்முறையிலே ஈடுபட்டார்கள்.



அன்றே தொழிற்சாலை மூடப்பட்டது. 23-10-1998 அன்று தொழிற்சாலை மீண்டும் திறக்கப்படும் என்று 19-10-1998 அன்று நிர்வாகம் அறிவித்ததைத் தொடர்ந்து கிருஷ்ணசாமியும், அவருடைய ஆதரவாளர் கிருஷ்ணகாந்தும் அடிக்கடி மாஞ்சோலைக்குச் சென்று பாதிரியார் பால் ரத்தினசாமி என்பவரோடு கலந்து ஆலோசனை நடத்தினார்கள். 23-10-1998 அன்று 113 தொழிலாளர்கள் வேலைக்குச் சென்றார்கள். 25-10-1998 அன்று காலை மாஞ்சோலை எஸ்டேட்டில் வேலை செய்யும் அந்தோணிமுத்து என்ற தொழிலாளியை மருத்துவமனைக்குச் செல்லும் வழியில் ஜோஸ், சிங்கராயன் என்கிற மரியசிங்கராஜ், ஜெயபால், சாமுவேல், வேலுச்சாமி, சின்னச்சாமி, மணிவண்ணன், ராபர்ட் என்கிற தொழிலாளர்கள் அரிவாளாலும், கத்தியாலும் தாக்கியதில் அந்தோணிமுத்து என்ற அந்த வாலிபர், அதாவது வேலைக்குச் சென்றார் என்ற காரணத்திற்காக அவர் கொல்லப்பட்டு, சம்பவ இடத்திலேயே அவர் உயிர்விட்டார். இதுகுறித்து -மாஞ்சோலை காவல் நிலையத்திலே வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. எதிரிகள் 3, 4, 5, 6 ஆகியோர் 26-10-1998 அன்றும், இரண்டாவது எதிரி 27-10-1998 அன்றும் கைது செய்யப்பட்டு, அவர்களிடமிருந்து கொலைக்குப் பயன்படுத்தப்பட்ட ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டிருக்கின்றன. கைது செய்யப்பட்ட எதிரிகள் ஐவரும் நீதிமன்றக் காவலில் இருக்கிறார்கள். ஏழாவது எதிரி மணிவண்ணன் 11-11-1998 அன்றும், எட்டாவது எதிரி ராபர்ட் 16-11-1998 அன்றும், திருநெல்வேலி குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் சரண் அடைந்துள்ளார்கள். எதிரி-1 ஜோஸ் என்பவரைக் கைது செய்ய தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

24-10-1998 அன்று கல்லிடைக்குறிச்சியில், கிருஷ்ணசாமி, கிருஷ்ணகாந்த், பாதிரியார் பால ரத்தினசாமி ஆகியோர் கொலை வழக்கின் எதிரிகள் எட்டு பேரைச் சந்தித்து மாஞ்சோலையிலே நிலவி வந்த சூழ்நிலை பற்றியும், நிர்வாகத்திற்கு ஆதரவாக உள்ள அந்தோணி முத்தை கொலை செய்வது குறித்தும் விவாதித்தார்கள் என்றும், இதுகுறித்து அந்தோணிமுத்துவின் மனைவி அந்தோணியம்மாள் கொடுத்த புகாரின்பேரில் இம்மூவரும் வழக்கில் குற்றவாளிகளாகச் சேர்க்கப்பட்டுள்ளார்கள். அந்தோணிமுத்துவின் கொலைக்கான சதியில் இம்மூவரது பங்கு குறித்து விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது. Investigation இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. உடனடியாக ஏன் கைது செய்யவில்லை என்று தாமரைக்கனி அவர்களும், சந்தானம் அவர்களும் இங்கே கேட்டார்கள். சந்தானம் அவர்கள் இங்கே பேசும்போது திருவாரூர் இலக்கியம் ஒன்றைச் சொன்னார்கள். "மகன்

தவறு செய்தபோது அவனையே தேர்க்காலில் வைத்த மனுநீதிச் சோழன்" என்பதை, பூம்புகார், அதாவது சிலப்பதிகாரத்திலே வருகின்ற வரிகளை எடுத்துக்காட்டிச் சொன்னார்கள். அதைச் சொல்லியுங்கூட கண்ணகிக்கு அங்கே நீதி கிடைக்கவில்லை என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. அதற்குமுன்பே அப்படிப்பட்ட கண்ணகி வந்து வாதாடுகிற அந்தக் கொலு மண்டபத்திலேதான் நெடுஞ்செழியப் பாண்டியன் அவசரப்பட்டு நீதி வழங்கி, நாடு இழந்து, மதுரையே தீக்கு இரையாகிற அளவுக்குச் சூழ்நிலை ஏற்பட்டது. ஆகவேதான், நெடுஞ்செழியனைப்போல கருணாநிதி அவசரப்பட மாட்டான் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) நான் சந்தானம் அவர்களுக்கு எடுத்துக் கூறி - பாண்டியனைச் சொல்கிறேன் - எடுத்து எடுத்துக் கூறி, விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது; விசாரணையிலே உண்மை வருமேயானால் யாரும் தப்ப முடியாது என்பதை மாத்திரம் தெரிவித்து அமைகின்றேன்.

(முற்பகல் 11-35

## 4. அறிவிப்பு

### எடுத்துக் கொள்ள அறிவித்த சிறப்புக் கவன ஈர்ப்பை நேரமின்மை கருதி மறுநாள் எடுத்துக் கொள்ளுதல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த சிறப்புக் கவன ஈர்ப்பு சர்க்கரை ஆலைத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்வது குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் 11 பேர் ஒத்திவைப்புத் தீர்மானமாக எடுத்துக்கொள்ள அறிவிப்பு கொடுத்திருக்கின்றார்கள். இதைச் சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்ள அனுமதிக்கிறேன். கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. த. அழகிரி அவர்களைப் பேச அழைக்கின்றேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, ஒரு வேண்டுகோள். நேற்றையதினம் மின்சார வாரியத்தில் நிறைய பேர் பேசியிருக்கிறார்கள். இன்றைக்கும் நிறைய பேர் பேச இருக்கின்றார்கள். பிறகு அமைச்சருடைய பதிலுரை இருக்கிறது. ஆகவே, தயவுசெய்து இந்தப் பொருளை நாளையதினம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தப் பிரச்சினை நாளையதினம் எடுத்துக்கொள்ளப்படும். (குறுக்கீடு)



## 3. தகவல் கோரல்—தொடர்ச்சி

### (ஆ) உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுந்தரம், உங்களுக்கு என்ன வேண்டும், சொல்லுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மைக் கொடுத்தால்தானே சொல்வதற்கு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொத்தானை அழுத்துங்கள், கொடுப்பார்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 23 ஆம் தேதியன்று நான் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தை தங்களிடம் கொடுத்திருந்தேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பல தீர்மானங்கள் கொடுத்திருக்கிறீர்கள். எதைச் சொல்கிறீர்கள்?

**திரு. பி.ஆர். சுந்தரம்:** ஒத்திவைப்புத் தீர்மானம் என்னைப்பற்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களைப்பற்றி என்று சொல்லுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** என்னைப்பற்றி ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். நீங்கள் அன்றைக்குக் கூறும்பொழுது அது பரிசீலனை செய்யப்படும் என்று கூறினீர்கள். ஆனால் நேற்று அதை நான் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டபொழுது, அது எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது என்று கூறியிருக்கின்றீர்கள். நான் இன்று காலையிலே உங்களைக் கேட்டேன். அது என்னைப் பற்றிய சொந்தப் பிரச்சினை. சேலம் மத்திய கூட்டுறவு வங்கியிலே நான் தாக்கப்பட்டேன். ஒரு சட்டமன்ற உறுப்பினருக்குப் பாதுகாப்பு இல்லை என்று உங்களுக்குத் தந்தி கொடுத்தேன். அதற்கு நீங்கள் ஒன்றும் பதில் கொடுக்கவில்லை. நான ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தை அனுமதிக்க உங்களை தினமும் கேட்டுக் கொண்டே இருக்கின்றேன். நீங்கள் இப்பொழுது நீதியை பற்றி எல்லாம் பேசிக் கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் நீதி தவறாதவர் என்று நினைக்கின்றேன். ஆகவே, தனிப்பட்ட முறையிலே நான் தாக்கப்பட்டது குறித்த எனது ஒத்திவைப்புத் தீர்மானத்தை அனுமதிக்க வேண்டுமென்று உங்களை நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[1998 நவம்பர் 25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு வாரம், அல்லது பத்து நாட்களுக்குள் அல்லது, இப்பொழுது ஏதாவது நடந்திருந்தால் இதை உடனே எடுத்திருப்பேன். இது நடந்து பல மாதங்கள் ஆயிற்று. (குறுக்கீடு) கொஞ்சம் இருங்கள். நான் பேசும்பொழுது நீங்கள் ஊடே வரக் கூடாது. நீங்கள் அந்தச் சம்பவத்திலே அடிபட்டதற்கு என்னுடைய ஆழ்ந்த அனுதாபத்தைப் பலமுறை உங்களுக்குத் தெரிவித்துவிட்டேன். அதை யாரும் மறுக்க முடியாது. இன்னொரு கருத்தையும் உங்களிடத்திலே சொன்னேன். இது ரொம்ப நாள் ஆனதனாலே உங்களுக்குப் பேச அனுமதி இல்லை என்றாலும் துணை மானியக் கோரிக்கையிலே ஒரு கட்சிக்கு ஒருவர் பேசுவதற்கு அனுமதி கொடுக்கிறபொழுது உங்கள் கட்சி சார்பிலே உங்கள் தலைவரோடு நீங்கள் கலந்து ஆலோசனை செய்து, நீங்கள் பேசுங்கள். அப்பொழுது இந்தச் சம்பவத்தைப் பற்றிச் சொல்லுங்கள் என்று நான் சொன்னேன். நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள் என்று தெரியவில்லை. உங்கள் கட்சித் தலைவர், நான்தான் பேசுவேன் என்றால், உங்கள் கருத்தை அவரை விட்டுப் பேசச் சொல்லுங்கள். அது உங்களுக்குள்ளே பேச வேண்டிய விஷயம். ஆனால், ஒரு கருத்தைச் சொல்லுகிறேன். அதிலே போலீஸ் புகார் இரண்டு பக்கமும் இருக்கிறது, அதை நல்லபடி விசாரணை செய்து அதில் குற்றவாளிகள் மீது நியாயமான நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். உட்காருங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** அது தனிப்பட்ட பிரச்சினை. ஒரு சட்டமன்ற உறுப்பினருக்குச் சபாநாயகர் பாதுகாப்பு கொடுக்க வேண்டும். ஆனால், நீங்கள் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதாகச் சொல்லியிருக்கிறீர்கள். நீங்கள் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்திருப்பதற்கு மிகவும் நன்றி. இருந்தாலும் எங்களுடைய தலைவர் பேசுகிறார் என்றால்-என்னுடைய சொந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையிலே நான் ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறேன். அதற்கு அனுமதி கொடுக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது நடந்து பல மாதங்களாகி விட்டதால் ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி கொடுக்க முடியாது என்று சொல்லிவிட்டேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** கவன ஈர்ப்புக்கு என்று அனுமதி கொடுங்கள்.



1998 நவம்பர் 25]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. இந்த விஷயத்தைப்பற்றி உங்களை நாளைக்குப் பேச அனுமதிக்கிறேன், உங்கள் கட்சி சார்பிலே நீங்கள் பேசுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** கட்சி சார்பிலே தலைவர்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் தினம்தான் பேசிக் கொண்டிருக்கிறார். அவருக்குப் பதிலாக நீங்கள் நாளை பேசுங்கள். தாமரைக்கனி விட்டுக் கொடுத்து விடுவார். ஏனென்றால் அவர் சும்மாதானே உட்கார்ந்திருக்கிறார். நாளைக்கு நீங்கள் பேசும்பொழுது இந்தக் கருத்தைச் சொல்லுங்கள். இப்போது உட்காருங்கள். (குறுக்கீடு) நாளை பேசும்பொழுது இந்தக் கருத்தைச் சொல்லுங்கள்.

## 5. அறிக்கைகள் அளித்தல்

### (அ) பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. ப. ரங்கநாதன் பொதுக் கணக்குக்குழுவின் தலைவர்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 1998-99 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் நூற்றி இருபத்தி நான்கு முதல் நூற்றி முப்பத்து மூன்று வரையிலான பத்து அறிக்கைகளை குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

### (ஆ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கைகளை அளித்தல், திரு. மீ.அ. வைதியலிங்கம், பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் தலைவர்.

முற்பகல் 11-40

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. 1998-99 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் முப்பத்தாறாவது முதல் நாற்பத்தொன்றாவது வரையிலான அறிக்கைகளை குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

## 6. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

### தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு, 1998.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 7. மின் வாரிய நிதிநிலை அறிக்கை 1998-99 மற்றும் திருத்திய மதிப்பீடுகள், 1997-98 அளித்தலும், அவற்றின் மீது விவாதமும்—*தொடர்ச்சி*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கைமீது விவாதம். பிற்பகல் 12-45 மணிக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்வதற்கு வாய்ப்பளிக்க



வேண்டும். இப்போது 8 உறுப்பினர்கள் பேசுவதாக இருந்தார்கள். அதை 6 ஆகக் குறைத்து, கட்சிக்கு ஒருவர் என்ற முறையிலே, ஒவ்வோர் உறுப்பினருக்கும் 10 நிமிடங்கள் கொடுக்கப்படும். ஆகவே, தமிழ் மாநில காங்கிரஸ் சார்பிலே யார் பேசுவது என்று முடிவெடுத்து, டாக்டர் குமாரதாஸ் அவர்களை அல்லது டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களைப் பேச அழைக்கிறேன். ஒருவர்தான் பேச முடியும்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கைமீது சில கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பளித்தமைக்கு நன்றியைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

மாண்புமிகு மின்சாரத் தறை அமைச்சர் அவர்களைப் பொறுத்தவரையில் சட்டமன்ற உறுப்பினர்கள் எந்தக் கோரிக்கை வைத்தாலும் 'இல்லை' என்று சொல்வதே கிடையாது. வாரி, வாரி வழங்குகிறார்கள். ஆனால் அவர்களுடைய துறையைப் பற்றிப் பேசுகிறபோது பாராட்டுவதற்கு வாய்ப்பே இல்லை என்ற உணர்வோடு சில கருத்துக்களை இங்கே எடுத்துக்கூற விரும்புகிறேன்.

தமிழக அரசினுடைய மொத்த வருமானத்தில் 25 விழுக்காடு மின்சாரத்திற்காகச் செலவு செய்யப்படுகிறது. வருவாய் செலவினமாக ரூ.5,808 கோடியும் வருவாய்ப் பற்றாக்குறையாக 334 கோடி ரூபாய் என்று இருந்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. கிட்டத்தட்ட 1 இலட்சம் பேர், அதாவது 91,038 தொழிலாளர்கள் பணியாற்றுகிற இந்த மின்சார வாரியத்தினால் மக்களுக்குத் தேவையான மின்சாரம் இன்றைக்கு அளிக்கப்படவில்லை என்கின்ற குற்றச்சாட்டுச் சொல்லப்படுகிறது.

தமிழ்நாட்டிலே 1966-67 ஆம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட மின்சாரம், புனல் மின் நிலையம் மூலமாக 1,400 மெகா வாட்ஸ் ஆகும். 1967-க்குப் பின்னாலே 1998 வரைக்கும் அதிகமாக உற்பத்திச் செய்யப்பட்ட புனல் மின்சாரம் 500 மெகா வாட்ஸ்தான்.

Inter-State Electricity Scheme-லே ஏதாவது வருமென்று சொன்னால், அவை அத்தனையும் ஒட்டுமொத்தமாகக் கிடப்பிலே இருக்கின்றன. புதிதாக புனல் மின் நிலையங்கள் அனுமதிக்கப்படவில்லை. மொத்தம் 6,908 மெகா வாட்ஸ் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது. மத்திய அரசு 1,841 மெகா வாட்ஸ் கொடுக்கிறது. இதை நாம் கணக்கிட்டுப்

பார்த்தோமேயானால் 5,067 மெகா வாட்ஸ்தான் நாம் உற்பத்தி செய்கிறோம். 1967 ஆம் ஆண்டைய மாநில புனல் மின் உற்பத்தியில் தற்போதைய உற்பத்தி மூன்றில் ஒரு பங்கு. இதிலே அனல் மின் நிலையம் மூலமாக 3,000 மெகா வாட்ஸ்தான் உற்பத்தி ஆகியிருக்கிறது. ஆகவே, ஒட்டுமொத்தமாகப் பார்க்கிறபோது, உற்பத்தித் திறனிலே அதிகமான அக்கறை காட்டப்படவில்லை என்ற எனது குற்றச்சாட்டை வைக்க விரும்புகிறேன். மொத்தம் 29 புனல் மின் நிலையங்களும் 4 அனல் மின் நிலையங்களும் உள்ளன. அனல் மின் நிலையத்தில் ஒரு யூனிட் மின்சார உற்பத்திச் செலவினம் 1.55 காசு எனவும், புனல் மின் நிலையத்தில் 19 காசு எனவும் உள்ளது. எனவே, உற்பத்தி செய்வதற்கு அதிகமான சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. குறிப்பாக, கீழ்பவானி, சாத்தனூர் புனல் மின் திட்டங்கள், பைக்காரா மற்றும் பார்சன் பள்ளத்தாக்கு புனல் மின் திட்டங்களை நீங்கள் அமல்படுத்தினால் கிட்டத்தட்ட 100 மெகா வாட்ஸ் மின்சாரம் நமக்குக் கிடைக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் உள்ளன. அதேபோன்று சிறிய மற்றும் நுண் புனல் மின் திட்டங்களை முக்குருத்தி, ஆழியார், பெருஞ்சாணி மற்றும் திருமூர்த்தி அணைக்கட்டுகளில் அமைப்பதற்கு திட்டம் வகுக்கப்பட்டு, அவை அடுத்த ஆண்டு மே மாதத்தில் வரும் என்று சொல்லியிருக்கிறீர்கள். அப்படி வருவதற்கான எந்தவிதமான ஆக்கப் பணிகளும் மேற்கொள்ளப்படவில்லை.

முற்பகல் 11-45

அதேபோல, தமிழகத்தினுடைய மொத்த மின் உற்பத்தியில் சென்னை மாநகருக்கு மாத்திரம் பயன்படுத்தப்படும் மின்சாரம் கிட்டத்தட்ட 1,200 மெகா வாட்ஸ் உற்பத்தியில் 5-இல் ஒரு பங்கு சென்னை மாநகருக்கு மாத்திரம் பயன்படுத்தப்படுகிறது. கிராமப்புறங்களின் வளர்ச்சி ஒட்டுமொத்தமாகப் பாதிக்கப்படுகிறது என்கிற காரணத்தினாலேதான் நான் இதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். சென்னை மாநகருக்குக் கொடுக்கிற முக்கியத்துவம் —அந்த முக்கியத்துவம் கொடுக்கப்படாவிட்டாலும், உரிய பங்கு மின்சாரத்தை கிராமப்புறங்களுக்கு நீங்கள் வழங்குவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று நான் இந்த நல்ல சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

கடந்த ஆண்டு நிலக்கரி வாங்கிய கதைகளை சொல்லி இருக்கிறீர்கள். 1997-98 ஆம் ஆண்டு வாங்கப்பட்ட நிலக்கரியினுடைய விலை 88.5 கோடி ரூபாய். ஆனால், போக்குவரத்துச் செலவு, அந்த நிலக்கரியை இங்கே கொண்டுவந்து சேர்ப்பதற்குப் பயன்படுத்தப்பட்டு



இருக்கிற தொகை 1,325 கோடி ரூபாய். என்னுடைய பகுதியிலே சொல்லுவார்கள்; சுண்டைக்காய் கால் பணம்; சுமக்கும் கூலி முக்கால் பணம் என்று. அதேபோல, இந்த நிலக்கரியை வாங்குவதைவிட 1½ மடங்கு அதிகமான தொகை நிலக்கரியைக் கொண்டு வருவதற்குச் செலவு செய்யப்பட்டு இருப்பது ஏற்புடையதுதானா என்பதை இங்கே சிந்தித்துப் பார்க்க வேண்டும்..

அதுமாத்திரமல்ல, இந்த ஆண்டு முதலீட்டுக்காக நீங்கள் ஒதுக்கீடு செய்து இருக்கிற தொகை 932 கோடி ரூபாய்தான். ஆனால் போக்குவரத்துக்கு மாத்திரம் நீங்கள் செலவு செய்ய இருப்பது 1,325 கோடி ரூபாய். அதைத் தவிர்த்து புதிய திட்டங்களை உருவாக்குவதன் மூலம், வெளிநாட்டுக்குச் சென்று நிலக்கரியை வாங்க வேண்டிய அவசியமும், ஏற்றுமதிக்கான நிகழ்ச்சிகளும் ஏற்படாமல் தடுத்திட முடியும். அதுமாத்திரமல்ல, இந்த ஏற்றுமதிக்காக தமிழக அரசு ஒரு கப்பல் வாங்குவதான ஒரு திட்டத்தை அறிவித்து இருந்தீர்கள். இந்த நிலக்கரியை ஏற்றுமதி செய்வதற்காக.. அது எந்த நிலையிலே இருக்கிறது என்பதையும் எங்களால் புரிந்துகொள்ள முடியவில்லை.

அதேபோல சுற்றுப்புறச் சூழ்நிலை காரணமாக வனத் துறையினால் தடுத்து நிறுத்தப்பட்ட திட்டங்கள் கைவிடப்படும் என்கின்ற கருத்தினையும் நீங்கள் வலியுறுத்தி இருக்கிறீர்கள். அது ஏற்புடையதாக எங்களுக்குத் தெரியவில்லை. ஏனென்றால் மனிதன்மின்சாரம் இல்லாமல் இன்றைக்கு வாழ முடியாது என்ற காலகட்டத்தில், மத்திய அரசிடம் தமிழக அரசு வலியுறுத்தி அந்தத் திட்டங்களைப் பெறுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமேயொழிய, அந்தத் திட்டங்களை அதனாலே கைவிடுவது என்பது ஏற்றுக்கொள்ள இயலாத ஒன்று.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இதற்காக வன இலாகா அதிகாரிகளோடு முதலமைச்சரே கலந்து பேசியும்கூட, மத்திய அரசாங்கம் அதற்கு அனுமதி கொடுக்க மறுத்துவிட்ட காரணத்தினால்தான், வேறு வழியில்லாமல் இப்போது அரசாங்கம் கைவிட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. உங்களுக்குத் தெரியும், வன விலங்குகளைப் பற்றியும், குறிப்பாக சுற்றுச்சூழல் பற்றியும் மத்திய அரசாங்கம் எவ்வளவு கண்டிப்பாக இருக்கிறது என்று. மான் கறி சாப்பிட்டதாக நம்முடைய

மக்களவை சபாநாயகர் மீதே இப்போது குற்றச்சாட்டு இருக்கிறது. காடுகளிலே யானைகள் இருக்கின்ற காரணத்தால், அந்த யானைகளுக்குத் தொல்லை கொடுக்கக் கூடாது என்பதற்காக காட்டு இலாகா அந்தத் திட்டத்தை அமல்படுத்தக் கூடாது என்று வற்புறுத்தி வருகிறது.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுவாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லிய கருத்தினை நான் ஏற்றுக்கொண்டாலும், 1972 ஆம் ஆண்டு சில திட்டங்களுக்கு அனுமதி வழங்கி இருக்கிறார்கள். அந்தக் காலக்கட்டத்திலே அந்தப் பணிகளை மேற்கொண்டிருந்தால், இப்போது இந்தத் தடங்கல் வந்து இருக்காது. இருந்தாலும், முன்பு அவர்களுடைய Clearance இருந்ததை அரசினுடைய கவனத்திற்கு எடுத்துரைத்து அதை மீண்டும் அமல்படுத்துவதற்கு, அந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு நீங்கள் முன்வர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல காற்றாலை, எரிவாயு மூலம் மின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டு இருப்பதாகச் சொல்லி இருக்கிறீர்கள். நான் அவற்றைப் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன். அணு உலையைப் பொறுத்தவரைக்கும், இப்போது கூடங்குளம் பகுதியிலே ஒரு அணு உலை வருவதாகவும் 2,000 மெகா வாட் மின் உற்பத்தி செய்யப் போவதாகவும் சொல்லப்பட்டு இருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது) அந்தத் திட்டத்தைப் பொறுத்தவரைக்கும் இரண்டொரு கருத்துக்கள் அங்கே நிலை கொண்டிருக்கிறது. மின்சாரம் வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து யாருக்கும் கிடையாது. ஆனால், பேச்சிப்பாறை தண்ணீர் எடுப்பதன் மூலம் கன்னியாகுமரி மாவட்டத்தினுடைய விவசாயம் பாதிக்கப்படுமோ என்ற ஒரு கேள்விக்குறியும் ஒரு பீதியும் மக்கள் மத்தியிலே இருந்து கொண்டிருக்கிறது. எனவே, அணு உலைக்காகப் பயன்படுத்தக்கூடிய தண்ணீர், கடல்நீரை எடுத்துப் பயன்படுத்துகிற வகையில் இருக்க வேண்டுமே தவிர பேச்சிப்பாறை தண்ணீரிலிருந்து கூடங்குளம் அணு உலைக்குத் தண்ணீர் எடுக்கக் கூடாது. அதேபோல், கூடங்குளம் அணு உலையிலிருந்து வெளியேறுகிற கழிவுநீர் கடலிலே கலக்காமல் நீங்கள் பார்த்துக் கொள்ள வேண்டும்.

*முற்பகல் 11-50*

எண்ணூரில் நாங்கள் பார்க்கின்றபோது பல கிலோ மீட்டர் தூரம் சுற்றுப்புறச் சூழல் பாதிக்கப்பட்டிருப்பதைக் காண முடிந்தது.



அதைப்போன்ற நிலை குமரி மாவட்டத்திலும் வரும் என்று சொன்னால், மீனவர்கள் ஒட்டுமொத்தமாகப் பாதிக்கப்படுகின்ற சூழ்நிலை ஏற்படும். எனவே, கூடங்குளம் அணுமின் நிலையத்திலிருந்து வருகின்ற கழிவுநீர் கடலில் கலக்காமல் இந்த அரசு கண்காணிக்க வேண்டுமென்ற வேண்டுகோளையும் உங்கள் முன் வைக்க விரும்புகிறேன்.

பொதுவாக, கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரைக்கும் மின் உபகரணங்கள் இல்லை என்ற காரணத்தால் அங்கே வேலைகளெல்லாம் மிகமிகச் சுணக்கமடைந்திருக்கின்றன. (மணியடிக்கப்பெற்றது) பேசி முடித்து விடுகிறேன். கன்னியாகுமரி மாவட்டம் மட்டுமல்ல, மற்ற மாவட்டங்களிலும் மின் உபகரணங்கள் பற்றாக்குறையை நீக்குவதற்காக தமிழ்நாடு மின்சார வாரியம் தனிக் கவனம் செலுத்தி, நான் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சார்ந்தவன் என்ற காரணத்தால் அங்கே வேலைகள் நடைபெற, அந்த மாவட்டத்திற்குத் தேவையான மின் உபகரணங்களை முன்னுரிமை கொடுத்து வழங்கிட வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. குத்தாலம் பி. கல்யாணம்.

**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1998-99 ஆம் ஆண்டிற்கான மின்சார வாரிய நிதிநிலை அறிக்கை மற்றும் 1997-98 ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு குறித்த விவாதத்தில் என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். நம்முடைய நாட்டைப் பொறுத்த அளவில் பொருளாதார வளர்ச்சிக்கும், தொழில் வளர்ச்சிக்கும், உணவு உற்பத்திக்கும், வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழும் உழைக்கும் வர்க்கமான விவசாயப் பெருங்குடி மக்களுக்கும் உற்ற துணையாக இருக்கக்கூடிய வாரியம், இந்த மின்சார வாரியம். தமிழ்நாட்டைப் பொறுத்த அளவில் இந்தத் துறையைச் செம்மையாக நடத்திக் கொண்டிருக்கின்ற, நிர்வகித்துக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே தரப்பட்டுள்ள கொள்கை விளக்கப் புத்தகத்தில் "நீர் ஆதாரங்கள் முழுமையாகப் பயன்படுத்தப்பட்டுவிட்டன; எனவே, குறுகிய காலத்தில் நிறுவி பயனளிக்கும் எரிவாயு, நாப்தா மற்றும் டீசல் போன்ற எரிபொருளைப் பயன்படுத்தி அமையும் மின் உற்பத்தித்

திட்டங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படும்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. என்னுடைய தொகுதியைப் பொறுத்த அளவில் ஒரு வரப்பிரசாதமாக ஏறக்குறைய 180 கோடி ருபாய்க்கு எரிவாயுவிலிருந்து மின்சாரம் தயாரிக்கின்ற Gas Turbine திட்டத்திற்கு ஒரு செயல் வடிவம் கொடுக்கக்கூடிய சூழ்நிலை உருவாகியிருக்கிறது. பலமுறை இந்த மாமன்றத்தில் பேசி, மாண்புமிகு அமைச்சர் அவர்களும் உறுதியளித்து, 180 கோடி ரூபாயில் நிறைவேற இருக்கிறது. அந்தத் திட்டத்திற்கான இடங்களைத் தேர்வு செய்ய சம்பந்தப்பட்ட திட்ட இயக்குநர் நாகை மாவட்ட ஆட்சித் தலைவருக்குக் கடிதம் எழுதி, கடந்த 21 ஆம் தேதி இடங்களைப் பார்வையிட்டு, அந்த இடம் சரியான இடம் என்று கொள்கை அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டு தேர்வு செய்யப்பட்டிருக்கிறது என்பதை நான் மிக்க மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அந்த இடத்தைப் பற்றி குறிப்பிட்டிருக்கிற ஒரு நிகழ்வை மட்டும் நான் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இப்படிப்பட்ட திட்டங்களுக்கு இடங்கள் தேர்வு செய்யும்போது, நேரடிப் பேச்சுவார்த்தை என்று வருகிறபோது அங்கிருக்கிற வருவாய்த் துறை வழிகாட்டி நெறிமுறைகளுக்கும், நடைமுறையில் இருக்கிற விலைகளுக்கும் வித்தியாசம் இருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்வது என்னவென்றால், மூன்று நிலச் சொந்தக்காரர்கள் நிலம் கொடுக்க முன்வந்திருக்கிறார்கள். எனவே, சந்தை விலையைவிட நேரடிப் பேச்சுவார்த்தை என்ற பெயரில் கொஞ்சம் அதிக விலையைக் கொடுத்து அந்த நிலத்தை வாங்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். காரணம், தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த அளவில் தரிசு நிலங்கள் கிடைப்பது அரிது. மேலும் தேவையான நிலம் கிடைத்தால்கூட, அவர்கள் வைத்திருக்கிற வழிகாட்டி முறைகளை வைத்து, குறிப்பாக, வருவாய்த் துறையைச் சார்ந்த அலுவலர்கள் நிலம் கொடுப்பவர்களைப் பயமுறுத்திவிடுகிறார்கள். எனவே, தாராளமாக நடந்துகொண்டால அருமையான திட்டம் அந்தப் பகுதியில் நிறைவேறும். குறிப்பாக, மயிலாடுதுறை, குத்தாலம் போன்ற பகுதிகள் பயனடையும் என்பதை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அடுத்து, Gas Turbine-ஐ வைத்தால் அதை நிர்மாணிக்கின்ற செலவு அதிகமாகிறதே தவிர, அதைப் பராமரிக்கின்ற செலவு, உற்பத்திச் செலவு மற்ற பொருட்களைவிடக் குறைவு என்ற ஒரு புள்ளிவிவரம் சொல்லப்படுகிறது. எனவே, எல்லாவகையிலும் சாத்தியக்கூறுகள் இருக்கின்ற அந்தத் திட்டத்தை விரைந்து நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



முற்பகல் 11-55

சென்ற ஆண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்னுடைய தொகுதியில் இரண்டு துணை மின் நிலையங்களை வழங்கினார்கள். ஒன்று, குத்தாலம் அருகில் இருக்கிற கடலங்குடியில்; இன்னொன்று குடவாசல் பக்கத்தில் இருக்கிற சேங்காலிபுரம் என்ற இடத்தில். இந்த இரண்டு இடங்களிலும் வேலைகள் கொஞ்சம் மெதுவாகத்தான் நடக்கின்றன. என்னுடைய சட்டமன்ற உறுப்பினர் தொகுதி நிதியிலிருந்து கூட குடவாசல் நிலையத்திற்குத் தேவையான ஒரு பாலம் கட்டுவதற்கு 5 இலட்சம் ரூபாய் தந்திருக்கிறேன். அதைப்போல குத்தாலத்தில் நிலம் முழுமையாகக் கையகப்படுத்தப்பட்டுவிட்டது. எனவே அந்தப் பணிகளைத் துரிதமாக நிறைவேற்றித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று, நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புவது, விவசாயிகளைப் பொறுத்த அளவில், இயல்பாக Normal priority-இல் கிடைக்கின்ற Seniority-இல் சில விவசாயிகளுக்கு மின் இணைப்பு கொடுக்கிறீர்கள். அதைப்போல Special scheme என்ற வகையில் ரூ.10,000 கட்டினால் மின் இணைப்பு கொடுக்கப்படும் என்று திட்டம் இருக்கிறது. இதிலே நான் என்ன சொல்கிறேன் என்றால், Normal seniority-ஐ ஒருவர் அடைவதற்கு முன்னால் ரூ.10,000 கட்டுவதற்கு அவர் முன்வந்தால், அதற்கு முன்னுரிமை அளித்து மின் இணைப்பு அவருக்குக் கொடுக்கப்படுகிறது. ஆனால் Normal-ஆக மின் இணைப்பு கிடைக்கக் கூடியவரைவிட இப்படி பத்தாயிரம் ரூபாய் செலுத்தி மின் இணைப்புப் பெறுகிறவர் மின் கட்டணம் செலுத்த வேண்டும் என்று இருக்கிறது. நான் அதிலே கூட மாறுபடவில்லை. ஆனால் இயல்பாக ஒருவர் பதிவு செய்து, அவருடைய பதிவு உரிய முறையில் எந்தத் தேதியில் Normal priority அடைகிறதோ அதுவரைக்கும் ரூ.10,000 கட்டியவர் கட்டணம் கட்டவேண்டும். இயல்பான அவருடைய Priority-ஐ அவர் அடைகிறபோது அதிலிருந்து அவர் கட்டத் தேவையில்லை என்ற சலுகையை வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களுக்கு என்று சலுகை என்ற வகையில் அவருடைய சொந்த நிலத்தில் Filter point இருந்தால் முன்னுரிமை அடிப்படையில் மின் இணைப்பு வழங்கலாம் என்று அரசாணை இருப்பதாகச் சொல்கிறார்கள். அதிலே கூட பத்தாயிரம் ரூபாய் பணம் கட்டவேண்டுமென்றுதான் இருக்கிறது. எனவே, இது வழக்கமான நடைமுறைதானே தவிர, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு என்று பிரத்தியேகமான சலுகை ஏதும் அந்த அரசாணையில் இல்லை என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில், அதிலும் என்னுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரையில், மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் நான் வேண்டிக் கேட்டுக்கொள்வது, நான் முன்னாலே சொன்ன இரண்டு துணை மின் நிலையங்களையும், அடுத்து நான் சொன்ன, அதாவது, உங்களால் அடிகோலப்பட்ட அந்த 180 கோடி ரூபாய் திட்டத்தில் அமைய இருக்கிற எரிவாயு மின்திட்டத்திற்கு மத்திய அரசு Letter of Commitment என்கிற வழங்கல் ஒப்பந்தத்தை இன்னமும் வழங்கவில்லை என்று தெரிகிறது. அது ஒரு மிகப்பெரிய திட்டம், ரூ.180 கோடியில் அமைய இருக்கிற அந்தத் திட்டத்திற்கு, அதிலும் என்னுடைய தொகுதியில் அமையவிருக்கிற அந்தத் திட்டத்திற்கு மத்திய அரசை மீண்டும் மீண்டும் வலியுறுத்தி, அந்த வழங்கல் ஒப்பந்தத்தைப் பெற்று, அந்த எரிவாயு மின் சுழலி (Gas turbine) திட்டத்தை என்னுடைய தொகுதியில் அமைத்துத்தர ஆவன செய்யவேண்டுமென்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களை வேண்டிக் கேட்டுக்கொண்டு அமைகிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1998-99 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மற்றும் 1997-98 ஆம் ஆண்டுக்கான திருத்திய மதிப்பீடுகள் மீதும் சில கருத்துக்களை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் தெரிவிக்க விரும்புகிறேன்.

மின் துறையைப் பொறுத்தவரையிலும் பல்வேறு கருத்துக்களை விரிவாகப் பேசவேண்டிய அவசியமும் தேவையும் இருந்தாலும், அதற்குரிய கால வாய்ப்பு இல்லாத காரணத்தால், மிகச் சுருக்கமாகச் சில அவசியமான கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அதிகபட்சமான இலக்கை எட்டவேண்டுமென்று வரையறுத்த சில துறைகளில் மின் துறையும்



ஒன்று. அதற்காக ஒரு தோராய மதிப்பீடு என்ற முறையிலே 1,50,000 கோடி ரூபாயில் 50,000 மெகா வாட்ஸ் மின் உற்பத்தி செய்யக்கூடிய இலக்கு தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரையிலும், தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கு மிகப் பெரிய சவாலாக இருப்பதே மின் பற்றாக்குறைதான்.

தமிழக அரசினுடைய தொழில் கொள்கை மற்றும் பல்வேறு சமூக பொருளாதாரக் கொள்கைகளின் வெற்றி மின் உற்பத்தியில் ஏற்படும் வெற்றியைப் பொறுத்துதான் அமைந்து இருக்கிறது என்பதை நாம் மறந்துவிட முடியாது.

நண்பகல் 12.-00

தமிழ்நாட்டில் மின் உற்பத்தியை எடுத்துக்கொண்டால் இரண்டாயிரம் மெகாவாட் பற்றாக்குறை இருக்கிறது. தமிழகம் நீண்டகாலமாக மின் உற்பத்தியில் ஒரு பற்றாக்குறை மாநிலமாக இருந்து வருகிறது என்பதற்கு இது ஒரு அடையாளமாக நிலவுகிறது. மின் உற்பத்தியை அதிகப்படுத்துவது மட்டுமல்ல, உற்பத்தி செய்யப்பட்ட மின்சாரத்தைக் கொண்டு செல்லுகின்ற முறையிலான தொழில் நுட்பத் துறையிலும், அவற்றை விநியோகிக்கின்ற முறையிலும் நாம் இன்னும் வெகுதூரம் முன்னேற வேண்டியிருக்கிறது. அதுபற்றிய விரிவான விவரங்கள் இந்த அறிக்கையில் இல்லை. ஆனால் கடந்த 22ஆம் தேதி நம்முடைய மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் 'சன் டி.வி'-இல் சில கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். இன்னும் 4 ஆண்டு காலத்தில் தமிழ்நாடு மின் துறையிலே ஒரு தன்னிறைவு மாநிலமாக மாற்றி அமைக்கப்படும் என்ற மிகுந்த நம்பிக்கையை தெரிவித்திருக்கிறார்கள். அவருடைய அந்த நம்பிக்கைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவருடைய அந்த நம்பிக்கையைத் நடைமுறைப்படுத்துகின்ற சில திட்டங்கள் இந்தக் குறிப்பிலே கொடுக்கப்பட்டிருக்கின்றன. நான் அதுபற்றிய விரிவான விவரங்களுக்குள் போக விரும்பவில்லை. ஆனால் விடப்பட்டிருக்கின்ற சில விஷயங்களை மாநில அரசின் கவனத்திற்குக் கொண்டுவருவது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன்.

அடுத்து, வட சென்னையிலே 3 திட்டங்களைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். 500 மெகாவாட் திறன் கொண்ட 4 அனல் மின் நிலையங்களை உருவாக்குவது என்பது ஆரம்பகட்டத்தில் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒரு விஷயம் ஆகும். ஆனால் இரண்டு மட்டும்தான் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது; இரண்டு மட்டும்தான் தொடங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

கல்பாக்கத்தில் 1,000 மெகா வாட்ஸ் திறன் கொண்ட அனல் மின் நிலையம் தொடங்கப்படும் என்று சொல்லப்பட்டது. அதனுடைய கதி என்ன என்று தெரியவில்லை.

அடுத்து, இந்தக் குறிப்பிலே காஞ்சிபுரம் செய்யூரிலே 2,000 மெகா வாட்ஸ் திறன் கொண்ட அனல் மின் நிலையம் அமைக்கப்படுவது என்பது 1,000 மெகாவாட்ஸ் ஆகக் குறைக்கப்பட்டிருக்கிறது, சுருக்கப்பட்டிருக்கிறது. அதேபோன்று நெய்வேலியிலே 3.ஆவது மின் நிலைய உற்பத்திப் பிரிவு 1,500 மெகா வாட்ஸ் திறன் கொண்டது தொடங்கப்பட்டிருக்க வேண்டும்;. ஆனால் தொடங்கப்படவில்லை. இதுகுறித்தெல்லாம் இந்த நிதிநிலை அறிக்கையில் விவரங்கள் இல்லை என்பது என்னுடைய கருத்தாகும்.

கடந்த 30 ஆண்டு காலமாக நாம் பேசிக் கொண்டிருக்கின்ற ஒரு விஷயம் ஒகேனக்கல் ஹைட்ரோ எலக்ட்ரிக் திட்டமாகும். தற்போது காவரிப் பிரச்சினை ஓரளவுக்கு முடிவுக்கு வந்திருக்கிறது. காவிரிப் பிரச்சினை ஓரளவுக்கு மின்னி, இடித்து ஒரு முடிவுக்கு வருகின்ற கட்டத்தில் இருக்கின்ற இன்றைய நிலையில் நீண்டகாலமாகப் பேசப்பட்டு வருகின்ற -அந்த ஒகேனக்கல் திட்டம் நிறைவேற்றப்படுமானால் ஏறத்தாழ 900 மெகா வாட்ஸ் அதிலிருந்து நமக்குக் கிடைக்கும். அதனுடைய பெரும்பகுதியை தமிழகம் பயன்படுத்திக் கொள்வதற்கான வாய்ப்பு இருக்கிறது. காவிரிப் பிரச்சினை முடிவதில் ஏற்படும் மிக முக்கியமான ஒரு நல்ல அம்சமாக நான் இங்கே குறிப்பிட விரும்புவது, இந்த ஒகேனக்கல் ஹைட்ரோ திட்டம்தான். எனவே அந்தத் திட்டத்தை 6 வருடங்கள், 7 வருடங்கள் என்று தள்ளிப் போடாமல் துரித நிலையில், முக்கியத்துவம் கொடுத்து 3 ஆண்டுகளில் முடிப்பதற்கு உண்டான உரிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, தமிழ் நாட்டிலே ஒரு கோடியே 20 இலட்சம் நுகர்வோர்கள் மின்சாரத் துறையைப் பொறுத்த வரையிலே இருக்கிறார்கள். அதில் Domestic என்று பார்த்தால் 65 இலட்சம் பேர்களும், விவசாயம் மற்றும் [illegible]க்கு ஒரு விளக்கு என்று பார்த்தால் 30 இலட்சம் Small Scale Industry-H.T. என்று பார்த்தால் 20 இலட்சம் பேர்களும் இருப்பார்கள். தமிழ்நாட்டில் ஒரு யூனிட் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு 1 ரூபாய் 90 காசு ஆகிறது. ஆனால் விநியோகத்தை எடுத்துக்கொண்டால் Small Scale Industry-H.T.-ல் மட்டும்தான் அசலுக்கு மேல் வாங்க முடிகிறது. மற்ற நுகர்வோர்களுக்கு நஷ்டத்தில்



கொடுக்கவேண்டிய ஒரு நிலைமை இருக்கிறது. அதனால்தான் மின்சாரத் துறை பற்றாக்குறையில் இருந்து வருகிறது.

அதேபோல் இன்னொரு விஷயத்தைப் பார்ப்போமானால், கடந்த 1988-இல், அதாவது 10 ஆண்டுகளுக்கு முன்னால் மின்வாரியத்தின் வருமானம் 890 கோடியாக இருந்தது. ஆனால் 1998-இல் அதனுடைய வருமானம் 5,500 கோடியாக உயர்ந்து இருக்கிறது. அன்றைக்கு கோல் இந்தியாவிற்கு 300 கோடி ரூபாய் நாம் நிலக்கரி வாங்குவதற்காகக் கொடுத்து வந்தோம். ஆனால் இன்றைக்கு எவ்வளவு கொடுக்கிறோம் என்றால் 1,600 கோடி ரூபாய்க்கு மேல் கொடுக்கிறோம். மின் விநியோகம் செய்வதில், அசலுக்குக் கீழாக விற்கின்ற நிலை அதிகபட்சமாக இருப்பது என்பது நஷ்டத்திற்கான ஒரு காரணமாகும்.

இன்னொரு விஷயம், அனல் மின் நிலையங்களைப் பெரிதும் நம்பியிருக்கின்ற தமிழ் நாட்டின் மின் உற்பத்திக்கான நிலக்கரி பிரச்சினை பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேள்வி ஒன்றுக்குப் பதில் அளிக்கின்றபோது நேற்றையதினம் குறிப்பிட்டார்கள். எனவே, அந்தப் பிரச்சினையும் சேர்ந்து, மின் உற்பத்தியில் ஒரு கடும் நெருக்கடியைத் தோற்றுவித்திருக்கிறது என்ற யதார்த்த உண்மையை நாம் மறந்துவிடுவதற்கில்லை. இந்தப் பிரச்சினையைத்தான் நாம் ஒரு கடுமையான சவாலாக முன்னரே குறிப்பிட்டேன். எனவேதான், T.N.E.B. பற்றாகுறையில் இயங்கி வருகிறது; நட்டத்திலே இயங்கி வருகிறது என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டியிருக்கிறது. இந்த நிலையிலேகூட, பல மாநிலங்கள் கோல் இந்தியாவிற்குப் பாக்கி வைத்திருக்கின்றன; ஆனால், தமிழ்நாடு பாக்கியில்லாமல் கொடுத்து வருகிறது என்பது ஒரு பாராட்டுதற்குரிய விஷயம்தான்.

முற்பகல் 12-05

இப்போது சில விஷயங்கள் பேசப்படுகின்றன. மின் வாரிய சீரமைப்பு பற்றி; அதற்கான ஆய்வு என்றெல்லாம் சில விஷயங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அதில் நான் ஒரு விஷயத்தை எச்சரிக்கையாகச் சொல்ல விரும்புகிறேன். என்னதான் மின் துறையின் உற்பத்தியிலே நெருக்கடிகள் இருந்தாலும், நுகர்வோர் மீது அந்தப் பளுவைச் சுமத்தி விடக்கூடாது. சமீபத்திலேகூட, Orissa Electricity Regulatory Commission guidelines-ன் படி; அவர்கள் மாற்றியமைத்த அந்த `tariff குறித்து Orissa High Court தீர்ப்பு அளித்திருப்பதைத் தயவு செய்து மாநில அரசு கவனத்தில் கொள்ள வேண்டும். அவர்களுடைய `Power tariff' நிறுத்தி `tariff' நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது

வைக்கப்பட்டிருக்கிறது. பழைய நிலைக்குக் கொண்டு வரவேண்டுமென்று உயர்நீதிமன்றம் சொல்லிவிட்டது. எனவே, Consumer-களை அதிகம் பாதிக்கின்ற அளவில், சீரமைப்பு என்ற பெயரால் நிலைமை வந்து விடக்கூடாது என்பதை நான் முன்னெச்சரிக்கையாகக் குறிப்பிட விரும்புகிறேன்.

அதேபோல, தற்போது மின்சாரத் துறையைப் பொறுத்தவரையில் இருக்கின்ற மிக முக்கியமான பிரச்சினை என்பது, மின் விநியோகத்தைப் பொறுத்தவரை T.N.E.B.-ஐ பாதிப்பதில் ஒரு மிக முக்கியமான விஷயம்தான் Technician பற்றாக்குறை. இது ஒரு மிக முக்கியமான விஷயமாகும். தற்போது ஆயிரம் பொறியாளர்கள் அளவுக்குப் பற்றாக்குறை இருக்கிறது. தொழில்நுட்ப உதவியாளர்கள் 1,500 பேர் பற்றாக்குறை. 1,500 பேர் என்பது T.N.E.B.-ன் ஒட்டுமொத்தத் தேவையில் 50 சதவிகிதம் பற்றாக்குறையாக இருக்கின்றது என்றால், எப்படிச் சிறப்பாகச் செயலாற்ற முடியும் என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும். அதேபோல, Helper, wireman 20,000 பேர் இன்றைக்கும் பற்றாக்குறை இருக்கிறது. அதேபோல், கிட்டத்தட்ட எட்டு வருடங்களுக்கும் மேலாக Contracts workers என்ற பெயரால் தினக்கூலிகள் பணியாற்றி வருகிறார்கள். அப்படி 12,000 பேர் பணியாற்றி வருகிறார்கள். அவர்கள் நிரந்தரம் செய்யப்பட வேண்டும். அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லையென்றால் T.N.E.B. சரியாகச் செயல்பட முடியாது.

அதேபோல், மிக முக்கியமானதொரு பிரச்சினை, நீதிமன்றத்தில் நிறைய வழக்குகள் நிலுவையில் இருக்கின்றன. உயர்நீதிமன்றம்கூடச் சொல்லியிருக்கிறது; நேரடிப் பேச்சுவார்த்தை நடத்தி அதில் சுமுகத் தீர்வு காண்பது நல்லது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, பணியிலே இருக்கும்போது இறந்தவர்களின் வாரிசுகளுக்கு கல்வித் தகுதியிலும், வயது வரம்பிலும் சலுகை அளிக்கபபடும் என்று மிகுந்த பரிவோடு மன் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அந்த அறிவிப்பு T.N.E.B.-இல் முறைப்படி செயல்படுத்தப்படவில்லை என்பதை நான் வருத்தத்தோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதுபற்றிப் பல விவரங்கள் இருக்கின்றன. அதையும் அமைச்சர் அவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இந்தநேரத்தில் இரண்டொரு விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் மிகுந்த



அக்கறையெடுத்து, மாதம் ஒருமுறை அல்லது இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை, T.N.E.B.-ல் நிர்வாகத் தரப்பையும், தொழிலாளர் தரப்பையும் அழைத்துப் பேசி, இருக்கின்ற பிரச்சினைகளைப் பரிசீலித்து, அவற்றிற்கு உடனுக்குடன் தீர்வு காண்பதிலேயும், தீர்வு காணவேண்டும் என்று நம்பிக்கையூட்டுவதிலேயும் மிகுந்த அக்கறை செலுத்துகிறார்கள் என்பதை நான் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக மனம்திறந்து பாராட்ட விரும்புகிறேன். இத்தகைய முறை நல்ல முறை. அந்த நல்ல முயற்சி தொடர வேண்டும் என்பதோடு, ஊதிய உயர்வில் நல்ல பல முன்னேற்றங்களைச் செய்திருக்கிறார்கள். சிலர்கூட, வாரி வழங்கியதாகச் சொன்னார்கள். அமைச்சர் அவர்கள்கூட, வாரி வழங்கவில்லை, கொடுக்க வேண்டியதைத்தான் கொடுத்திருக்கிறோம் என்றார்கள். ஆகவே, அதற்கும் நான் பாராட்டைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒரேயொரு விஷயத்தைச் சொல்லி முடித்துக்கொள்கிறேன். அது மிக முக்கியமானதொரு விஷயம். உள்ளாட்சிகள் இயங்குவதே பெரிய பிரச்சினையாக இருக்கிறது. இப்போது ஒரு கம்பத்திற்கு பஞ்சாயத்துக்கள் 7,500 ரூபாய் கட்டவேண்டுமென்று T.N.E.B. நிர்ப்பந்திக்கிறது. பல பஞ்சாயத்துகளிலே பணமே கிடையாது. பணமே இல்லாமல், விளக்குப் போட வேண்டுமென்று சொன்னால், 7,500 ரூபாய் கட்டவேண்டுமென்று நிர்ப்பந்திப்பதன் மூலம், அரசாங்கம் நடைமுறையில்...

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** துணைத் தலைவர் அவர்களே, 7,500 ரூபாய் கிராமப் பகுதிகளிலே செலவாகிறது என்றும், நகர்ப்பகுதிகளிலே குறைவாகச் செலவாகிறது என்றும், உள்ளாட்சித் துறை அமைச்சர் இரண்டிற்கும் பொறுப்பு வகிக்கின்ற காரணத்தினாலும் சராசரியில் அதைப் பங்கிட்டுக் கொள்ளலாம் என்றும், ஒரு கருத்து பேசப்பட்டு, கடந்த ஆண்டு முதலமைச்சர் அவர்கள் 3,720 ரூபாய்க்கு மேல் 4,200 ரூபாய் மின்சார வாரியம் கேட்கின்ற காரணத்தால், அந்த இடைப்பட்ட தொகையை அரசாங்கமே கொடுக்கும் என்று உத்தரவாதம் அளித்து, நாம் 75,000 தெரு விளக்குகளை அமைத்திருக்கிறோம். இப்பொழுதும் மாண்புமிகு உறுப்பினர் சொல்கின்ற பிரச்சினை குறித்தும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள், மின்சார வாரியம், நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் ஆகியோருடன் கலந்து பேசி ஒரு நல்ல முடிவை எடுக்க இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-10

**திரு. கே. சுப்பராயன்:** அப்படிப்பட்ட ஒரு நல்ல முடிவை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, குடிசைக்கு ஒரு விளக்கு திட்டத்தைப் பற்றி ஒரேயொரு விஷயத்தை சொல்லி முடித்துக்கொள்கிறேன். குடிசைக்கு ஒரு விளக்கு என்பதே நடைமுறையில் விளம்பரத்திற்கு நன்றாக இருக்கிறது. குடிசைக்கு ஒரு விளக்கு என்பதில் உள்ளுக்குள் புதைந்து கிடக்கிற மர்மம் என்னவென்றால், குடிசைக்கு ஒரு விளக்கு என்றால், எல்லா குடிசைகளுக்கும் விளக்கை. கொடுப்பது இல்லை. ஒவ்வொரு ஏரியாவுக்கும் ஒரு வரம்பு கட்டி, அந்த வரம்புக்கு மேல் கொடுப்பது இல்லை என்ற நடைமுறை, அந்த நல்ல திட்டத்தையே கேலிக்கூத்தாக்கி விடுகிறது. மாநில அரசை நான் கேட்டுக்கொள்ள விரும்புவது, குடும்பத்திற்கு ஒரு விளக்கு என்று சொல்லிவிட்டு, 1,000 பேருக்கு மட்டும் கொடுப்பது என்பது, விளம்பர உத்திக்கு மட்டும் பயன்படுமே தவிர, வாழ்க்கையில் தேவையானதை, தேவையான நேரத்தில் கொடுப்பதற்கு பயன்படாது என்பதால் அந்த வரம்பை நீக்க வேண்டுமென்று சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மின் வாரிய நிதிநிலை அறிக்கையின்மீது எனது கருத்துக்களை முன்வைக்க விரும்புகிறேன். பொதுவாக, சர்க்கஸிலே மின் கம்பியிலே நடப்பது என்பது ஒரு கடினமான விளையாட்டாகத் தோன்றும். அதேபோல, இந்த மின் கம்பியிலே ஓடுகின்ற மின் துறையை நிர்வகிப்பது என்பது ஒரு கடினமான காரியம் மட்டுமல்ல, மிகக் கவனத்திற்கு உரிய செயலும்கூட, நமக்குத்தான் பார்ப்பதற்குக் கடினமாக இருக்குமே தவிர, சர்க்கஸிலே மின் கம்பியிலே நடந்து செல்கிறவர்கள் மிக இலாவகமாக நடந்து சென்று விடுவார்கள். அதேபோல, இந்தச் சிக்கலான மின் துறையை தன்னுடைய திறமையினால் மிகச் சிறப்பாக நிர்வகித்து வருகின்ற மாண்புமிகு ஆற்காட்டார் அவர்களுடைய செயலை நான் பெரிதும் பாராட்டி வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்போது நம்முடைய தேவையானது, ஆண்டுதோறும் 400 மெகா வாட்ஸ் என்ற அளவுக்கு வளர்ந்து வருகிறது. இதிலே பல்வேறுவகையான மின் உற்பத்தித்



திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். இது நம்முடைய தேவைக்கு ஏற்ப இல்லாத ஒரு சூழ்நிலை சில நேரங்களிலே வந்து விடுகிறது.

வள்ளுவருடைய,

*"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த*
*வகுத்தலும் வல்ல தரசு."*

என்ற குறளானது, எந்தத் துறைக்கு மிகப் பொருத்தமாக இருக்கிறதோ, இல்லையோ, இந்த மின் துறைக்கு மிகச் சிறப்பாக பொருந்தக்கூடியது.

மின்சாரத்தை ஈட்டுவதிலே நீங்கள் பல்வேறு முறைகளை அறிமுகப்படுத்தி இருக்கிறீர்கள். அதிலே, குறிப்பாக அணுமின் திட்டத்தின் மூலமாக குறைந்த செலவிலே மின்சாரம் தயாரிப்பதற்காக, நாம் அந்த அணுமின் திட்டத்தை கைக்கொண்டு வருகிறோம். ஒரு பொறுப்பு வாய்ந்த குடிமகன் என்ற முறையிலே இப்போது இருக்கிற சுற்றுச்சூழ்நிலை வல்லுநர்கள் வற்புறுத்துகின்ற செய்திகளையும் அரசினுடைய கவனத்திற்கு நான் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த அணுமின் திட்டத்திற்கு இதுவரையிலே 60,000 கோடி ரூபாய்க்கு மேலே இந்தியாவிலே செலவு செய்யப்பட்டிருக்கிறது; ஆனால், அடைந்த இலாபங்கள் குறைவு என்பதை நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

கங்கை-காவிரியையே இணைத்திருக்கலாம், அதன்மூலமாக இந்த நாட்டை பசுமையாக்கி வறுமையை போக்கியிருக்கலாம். ஆனால் 60,000 கோடி ரூபாய் இந்தியாவில் உள்ள அணுமின் நிலையங்களுக்கு, அணுமின் உலைகளுக்கு எல்லாம் செலவிட்டும்கூட அதற்குரிய பலனை நாடு கண்டிருக்கிறதா என்றால் இல்லை. குறிப்பாக, கூடங்குளம் அணுமின் நிலையத்திற்கு 10,000 கோடி ரூபாய் செலவிட்டு, 2,000 மெகா வாட்ஸ் மின் உற்பத்தி என்று குறிப்பிட்டு சொல்லப்பட்டிருக்கிறது. ஆனாலும், எளிமையைக் கருதி, அணுமின் உற்பத்தியை ஆதரித்தால், அந்த அணுமின் உற்பத்திக்கு பின்னாலே ஏற்படுகின்ற கழிவுகளை பாதுகாக்க ஆகின்ற செலவுகள் மிக மிக அதிகமானது என்பதையும் நாம் மறந்து விடக்கூடாது.

இப்போது, ஐரோப்பிய நாடுகள், டென்மார்க், ஸ்காண்டிநேவிய தீபகற்பத்திலே உள்ள நாடுகள் எல்லாம்கூட, ஏன் அமெரிக்கா போன்ற வசதி படைத்த நாடுகள்கூட, தங்களுடைய அணுமின் உற்பத்தித் திட்டத்தை குறைத்துக்கொண்டு வருகிற சூழ்நிலையிலே நாம் இதை

விடுத்து, காற்றாலைகள் மூலமாக, சூரிய ஒளி மூலமாக, அதற்கு தொடக்கச் செலவினங்கள் அதிகமாக இருந்தாலும்கூட, சுற்றுப்புறச் சூழல் பாதிக்காத வகையிலே இருக்கின்ற காரணத்தாலே, அத்தகைய வழிமுறைகளை நாம் கைக்கொண்டு, நம்முடைய மின் உற்பத்தித் திட்டத்தை வைப்பது என்பது சாலப் பொருத்தமாக இருக்கும் என்பதை நான் இந்தநேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காற்றாலைகள் மூலமாக நாம் அடையக்கூடிய இலக்கு 2,000 மெகா வாட்டாக இருந்தாலும்கூட, இப்போது மூன்றிலே ஒரு பங்குதான் நாம் எட்டியிருக்கிறோம். எனவே, அவற்றிலே அதிக அக்கறை செலுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-15

அதேபோல, குப்பைகளிலேயிருந்து மின்சாரம் தயாரிக்கின்ற முறை, சென்னை மாநகரத்தை ஒட்டியிருக்கிற பகுதிகளிலே முதலாவதாக தொடங்கப்பட இருப்பதாக நாங்கள் இந்தக் குறிப்பேட்டிலே பார்க்கிறோம். குப்பைகள் அதிகமாக உள்ள இடங்களிலே, கொஞ்சம் அதிகமாகச் செலவிட்டுக்கூட இந்தத் திட்டத்தை உடனடியாகத் தொடங்கலாம். குறிப்பாக, சென்னை, கோவை, மதுரை, சேலம், நெல்லை போன்ற மாநகராட்சிப் பகுதிகளிலாவது, மக்கள்தொகை அதிகமாக இருக்கிற பகுதிகளிலாவது, குப்பைகளிலேயிருந்து மின்சாரம் தயாரிக்கிற திட்டத்தை நீங்கள் அறிமுகம் செய்ய வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது மின்சாரத்தைப் பயன்படுத்துகிறபோது, அதை மிச்சப்படுத்துவதற்கு எவ்வளவோ வழிமுறைகள் இருக்கின்றன. நான் ஒன்றிரண்டை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஐரோப்பிய நாடுகளிலே, நியான் விளக்குகளைத்தான் பயன்படுத்த வேண்டுமென்று சட்டமியற்றி, அவற்றை நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். காரணம், 40 சதவிகித மின்சாரம் அதன் காரணமாக மிச்சமாகிறது. அந்த நியான் விளக்குகளை உற்பத்தி செய்கிற செலவு, அதிகம் என்கிற காரணத்தினால் அங்கேயெல்லாம் சலுகைகள் பல கொடுத்து, அவற்றை உற்பத்தி செய்து மக்கள் பயன்படுத்த, அவற்றை அறிமுகப்படுத்தி வெற்றி கண்டிருக்கிறார்கள். மின்சாரத்தை சேமித்து அதனை மிச்சப்படுத்தியிருக்கிறார்கள். ஆகவே, நம்முடைய நாட்டிலேகூட அந்த நியான் விளக்குகளை—அவற்றின் உழைக்கின்ற தரத்தினைப் பார்த்தால், சாதாரண பல்புகள் 3 ஆயிரம் மணிநேரம் எரிகிறது என்றால், நியான் விளக்குகள் 10 ஆயிரம் மணி நேரம் எரியக்கூடியவை; எனவே, நியான் விளக்குகளை—பயன்படுத்துவதன் மூலமாக மின்சாரத்தை நாம் சேமிப்பதற்கான வாய்ப்பு இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். குறைந்தபட்சம், அதை முதற்கட்டமாக, நடுத்தர வர்க்கமாக இருக்கக்கூடிய அரசு ஊழியர்கள், பொதுத் துறை நிறுவன ஊழியர்கள் இப்படிப்பட்டவர்களிடமாவது அந்த நியான் பல்புகளுக்கு 100 சதவீத அளவுக்கு வரிச் சலுகை கொடுத்து, அறிமுகப்படுத்தினால் மின்சாரத்தைச் சேமிப்பதற்கு ஒரு வாய்ப்பாக இருக்கும் என்பதை நான் இந்த நேரத்திலே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.



அதேபோல, ஜப்பான் போன்ற நாடுகளிலே வீடுகளிலே, சூரிய மின்கலப் பெட்டிகளைக் கொடுத்து, சூரிய ஒளியிலேயிருந்து மின்சாரம் தயாரிப்பதற்கு ஏராளமான உதவிகளை அந்த அரசு செய்து வருகிறது. அதேபோல, வீட்டு உபயோகத்திற்கான மின்சாரத்தை நாம் மிச்சப்படுத்துவதற்கு, சூரிய ஒளியின் மூலமாக மின்சாரம் தயாரிக்கின்ற மின்கலப் பெட்டிகளை நீங்கள் அதிகமாக அறிமுகப்படுத்தலாம். அதையும் அரசு கவனத்தில் கொள்ளவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

'காத்தலும் காத்த வகுத்தலும்' என்று பார்க்கிறபோது, உற்பத்தியாகின்ற மின்சாரத்தைக்கூட, எத்தனையோ வழிகளிலே, மின் கசிவின் மூலமாக, மின் திருட்டின் மூலமாக நாம் இழக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. மின் கசிவிற்கு துறையிலே இருப்பவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், பழைய மின்கம்பி போன்ற மின்சாரத் தளவாடங்களைப் பயன்படுத்துகிற காரணத்தினால், ஏறத்தாழ 25 சதவிகித மின்சார இழப்பு ஏற்படுகிறது; அதற்குப் போதுமான நிதி, இந்தத் துறை நட்டத்திலேயும், பல நெருக்கடிகளிலேயும் இயங்குகின்ற காரணத்தினால், ஒதுக்கீடு செய்து அவற்றை மாற்றுவது என்பது மிகவும் கடினமாக இருக்கிறது என்று சொல்கிறார்கள். அதற்கு ஏதேனும் சிறப்புக் கடன் உதவிகளை, உலக வங்கியிடமிருந்தோ, அல்லது மற்றவர்களிடமிருந்து பெற்றோ அந்தப் பழைய மின் தளவாடப் பொருள்களை மாற்றியமைத்தால், 25 சதவீத அளவுக்கு ஏற்படுகின்ற மின்சார இழப்பைத் தவிர்ப்பதற்கு ஒரு வாய்ப்பாக இருக்கும் என்பதையும் நான் இந்த நேரத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது)

மின் திருட்டைப் பொறுத்தவரையில், இப்போதுகூட அம்பத்தூர் பகுதியிலே மின் திருட்டு தடுக்கப்பட்டதாக செய்தி வந்திருக்கிறது. மின் திருட்டை தடுப்பதற்கு, அதைப்பற்றி அறிவிப்பவர்கள் அரசு ஊழியர்களாக இருந்தாலும் சரி, அந்தத் துறையைச் சார்ந்த ஊழியர்களாக இருந்தாலும் சரி அல்லது பொதுமக்களாக இருந்தாலும் சரி, அவர்களுடைய பெயர்கள் இரகசியமாக வைத்துக்கொள்ளப்பட்டு, அவர்களுக்கு ஊக்கப் பரிசு அல்லது ஊதிய உயர்வுகள் வழங்கப்படுமேயானால், அந்த மின் திருட்டை இன்னும்கூட அதிகமாகக் கண்டுபிடித்து, அதைத் தடுத்து நிறுத்திவிடலாம். இதையும் அரசு கவனத்தில் கொள்ளவேண்டும்.

அதேபோல், தொழிற்சாலைகள் மூன்றிலே ஒரு பங்கு மின்சாரத்தைப் பயன்படுத்திக் கொண்டிருந்தபோதிலும்கூட, பல நூற்றுக்கணக்கான கோடி ரூபாய்கள், பல ஆயிரம் கோடி ரூபாய்களுக்குமேல் மின் கட்டண பாக்கிகள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. சில தொழிற்சாலைகள், சில காரணங்களைச் சுட்டிக்காட்டி, இன்னும் மின் கட்டணத்தைச் செலுத்தாமல் இருந்து கொண்டிருக்கிறார்கள். அத்தகைய தொழிற்சாலைகள் எவையெவை என்பதைக் கண்டுபிடித்து உடனடியாக அவற்றை வசூலிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஜீவன்தாரா கிணறுகளுக்கும், குடிசைக்கு ஒரு மின்விளக்கு திட்டத்தின்கீழும் ஆதிதிராவிட மக்களுக்கு உதவிகளை வழங்குகிறீர்கள். நான் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்; மிகப் பிற்படுத்தப்பட்ட மக்களும் வாழ்க்கை நிலையிலே அதேபோல உள்ளவர்கள்தான். எனவே, அந்த இரண்டு திட்டங்களையும், மிகப் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் விரிவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சுயநிதி மின் இணைப்புத் திட்டத்தின் கீழே, ரூ. 50 ஆயிரத்திற்கும் குறைவாக செலவாகும் விரிவாக்கத்திற்கு ரூ.10 ஆயிரம் செலுத்தினால் போதும் என்றும், ரூ.50 ஆயிரத்திற்கு மேல் போனால், முழுத் தொகையையும் செலுத்த வேண்டுமென்றும் சொல்கிறீர்கள். அது மிகவும் வேடிக்கையாக இருக்கிறது. ரூ.50,001 என்றாலும்கூட, அவர் முழுத் தொகையையும் செலுத்த வேண்டியிருக்கிறது. நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களை வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்; 50 ஆயிரம் ரூபாய்க்கு மேலே எவ்வளவு தொகை அந்த விரிவாக்கத் திட்டத்திற்குச் செலவாகிறதோ, அந்த மேற்படுகிற தொகையை மட்டும்



வசூலிப்பதற்கு நீங்கள் வழிவகை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

பிற்பகல் 12-20

ஜெயங்கொண்டம் பழுப்பு நிலக்கரிச் சுரங்கம், மற்றும் அனல்மின் திட்டம் வருவதற்கு அந்தப் பகுதியிலுள்ள சில பேர் தடையாக இருக்கிறார்கள். அவர்கள் தனியார் நிறுவனங்களை மிரட்டி அதிகமான விலை தந்தால்தான் நிலங்களைக் தருவோம் என்று எல்லாம் சில முறைகளைக் கையாண்டுக் கொண்டிருக்கிறார்கள். தனியார் துறையை அச்சுறுத்திக் கொண்டிருக்கிறார்கள். அப்படி அச்சுறுத்திக் கொண்டிருக்கிற இடைத்தரகர்களை அரசு கண்காணித்து நிலக்கரிச் சுரங்கமும், அனல்மின் நிலையமும் அந்தப் பகுதியிலே வந்து, அந்த மக்களுக்கு உரிய வேலைவாய்ப்பும், நஷ்டயீடும் அவர்களுக்கு வழங்குவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

ஒரே ஒரு கோரிக்கையை மட்டும் வைத்து முடிக்க விரும்புகிறேன். தமிழ்நாடு மின்சார வாரியத்தில் இளநிலை உதவியாளர் நிர்வாகப் பணிக்கு 7-12-1995-லே தேர்வு செய்யப்பட்டு மருத்துவச் சான்றிதழும் அனுப்பிய 119 பேர்களுக்கு இன்னும் வேலை வாய்ப்பு கிடைக்காமல் அவர்கள் தவியாகத் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு 35-லிருந்து 45 வயது வரை ஆகிவிட்டது. வேலை வாய்ப்பு அலுவலகத்திலே அவர்களுடைய பதிவும் நீக்கப்பட்டுவிட்டது. இனிமேல் அவர்களால் எந்த வேலைக்கும் போக முடியாது. இதுவரையிலே மின்வாரியத் துறையிலே தேர்வு செய்யப்பட்ட நபர்கள் அனைவருக்கும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகாவது பணியிடம் வழங்கப்பட்டிருக்கிறது. இப்போதுகூட 279 பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. எனவே, இந்த இளநிலை உதவியாளர் நிர்வாகப் பணிக்காக மருத்துவச் சான்றிதழ் எல்லாம் அனுப்பி, பணிக்காக காத்துக் கிடக்கின்ற அந்த 119 பேருக்கும் பணியிடம் வழங்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1998-99 ஆம் ஆண்டு மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கையின் மீது பேச அனுமதியளித்த தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. பி. ஆர். சுந்தரம்] [1998 நவம்பர் 25

சேலம் மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு, நாமக்கல் மாவட்டத் தலைநகராக ஆனபிறகும் நாமக்கல்லுக்கு இன்னும் மேற்பார்வை பொறியாளர் அலுவலகம் வரவில்லை. உடனடியாக அதை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சேலம் மாவட்டத்தில் ராசிபுரத்தில் ஜவ்வரிசி ஆலைகள்தான் அதிகமாக இருக்கின்றன. அந்த ஜவ்வரிசி ஆலைகளுக்குத் தண்ணீரை அதிகமாகப் பயன்படுத்துகிறார்கள். அப்போது கிணற்றிலேயிருந்து தண்ணீரை வெளியேற்றும்போது அந்தத் தண்ணீர், தண்ணீர் தொட்டியில் வந்து விழுகிறது. அந்தத் தண்ணீரைப் பயன்படுத்தி மின்சாரத்தை எடுத்து அதை கிழங்கு அரைவைக்குப் பயன்படுத்துகிறார்கள். ஆக, இரண்டு இடத்திலும் அவர்கள் மின்சார மோட்டாரைப் பயன்படுத்துவதால் அவை இரண்டுக்கும் அவர்கள் பணத்தைக் கட்ட வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, அதை மாற்றி கிணற்றிலிருந்து தண்ணீர் எடுப்பதற்கு விவசாயத்திற்குப் பயன்படுத்தப்படும் மின்சாரத்திற்கு விதிக்கப்படும் கட்டண விகிதத்திலும், அதைப்போல தண்ணீர் தொட்டியிலிருந்து எடுப்பதற்கு Commercial கட்டண விகிதத்திலும் மின்சாரக் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டால் வசதியாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். புறம்போக்கு நிலத்திலே உள்ள குடிசைகளுக்கும் இலவச மின்சாரம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எனக்கு முன்னால் பேசிய சட்டமன்ற உறுப்பினர் திரு. குத்தாலம் பி. கல்யாணம் அவர்கள் கூறியதுபோல அமைச்சர் அவர்கள் 10,000/- ரூபாய் கட்டினால் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்று இந்த அவையிலே ஏற்கெனவே கூறியிருந்தார்கள். ஆனால், அது நடைமுறையிலே இல்லை. நான் சென்று கேட்டபோது அதுபோன்ற G.O. வரவில்லை என்று கூறுகிறார்கள். நான் இதை எதற்காகக் கூறுகிறேன் என்றால், அமைச்சர் அவர்கள் வாய்ச் சொல்லில் வீரர், சொல்கிறாரேயொழிய அதன்படி அவர் செயல்படவில்லை என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். என்னுடைய விவசாயத் தோட்டத்திற்கு மின் இணைப்பு வேண்டுமென்று நான் கேட்டேன். அப்போது G.O. வரவில்லை என்று கூறிவிட்டார்கள். இதை நான் எதற்காக கூறுகிறேன் என்றால் அமைச்சர் அவர்கள் பொறுப்பு வகிக்கிற மற்றொரு துறையிலே அதாவது மக்கள் நல்வாழ்வுத் துறையிலே... (மணியடிக்கப்பெற்றது)



1998 நவம்பர் 25]

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் கொடுத்த அந்த வாக்குறுதியை நிறைவேற்றக்கூடிய வகையில் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு நமது சட்டமன்ற உறுப்பினர் திரு. ஆசையன் அவர்கள் மின்சாரத்தையே பெற்று இருக்கிறார்கள் என்ற தகவலைத் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** அவர் ஆளுங்கட்சி சட்டமன்ற உறுப்பினர். அதனால் அவருக்கு வேண்டுமானால் கிடைத்திருக்கலாம்... (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** இதிலே ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்பதே கிடையாது. எந்த உறுப்பினராக இருந்தாலும் அவர் கேட்டால் உடனடியாக விண்ணப்பம் கொடுத்தவுடன் இணைப்பு கொடுக்க வேண்டும் என்று வாரியத்திற்கு ஆணையிடப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரம் அவர்கள் கேட்டு, இணைப்பு கொடுக்காமல் இருந்திருப்பார்களானால் அவர் கொடுத்த விண்ணப்பத்தினுடைய தேதியைக் கொடுத்தால் அந்த அதிகாரிகள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** 1996-97-இல் முதன்முதலில் நான் வந்தபோது அமைச்சர் அவர்கள் வகிக்கிற மற்றொரு துறையான மக்கள் நல்வாழ்வுத் துறை விவாதத்திலே நான் பேசியிருக்கிறேன். அவர் உறுதிமொழி கொடுத்திருக்கிறார். வெண்ணந்தூர் ஒன்றியத்திலே போகமலையிலே ஒரு மருந்தகம் ஆரம்பிக்கப்படும் என்று 1996-97-லே கூறினார். அது ஆரம்பிக்கப்படவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதையெல்லாம் நீங்கள் ஏற்கெனவே கூறியிருக்கிறீர்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** நான் இதை எதற்காக குறிப்பிடுகிறேன் என்றால் அமைச்சர் அவர்களுக்கு இரண்டு துறை இல்லை, மூன்று துறை என்றுகூட கூறலாம். மின்சாரத் துறை, மக்கள் நல்வாழ்வுத் துறை, முதல்வர் அவர்களை நிழல்போல பின்பற்றிக் கொண்டிருக்கிற துறை இந்த மூன்று துறைகளையும் அவர் பார்த்துக் கொண்டிருக்கிற காரணத்தால்தான் அவர் கூறுகிற எந்த வேலையும் நடைபெறவில்லை என்பதை நான் இந்த மன்றத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-25

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எதுவும் நடக்கவில்லை என்று சொன்னீர்கள். ஆனால், திரு. ஆசையன் அவர்கள் நேரிலே சொல்லியிருக்கிறார்கள். 'நான் கேட்டேன், எனக்கு இணைப்புக் கொடுத்திருக்கிறார்கள்' என்று சொல்லியிருக்கிறார். அதற்குப் பிறகு, நீங்கள், ஆளுங்கட்சியாக இருப்பதால் கொடுத்திருப்பார்கள் என்று சொல்கிறீர்கள். அந்த பேதம் எல்லாம் கிடையாது என்றுதான் அமைச்சர் சொல்கிறார். இதற்கும் மேலே, நீங்கள் மீறி, மீறிப் போய்க் கொண்டிருந்தால் நன்றாக இருக்காது. இப்போது நீங்கள் மின்சார வாரிய பட்ஜெட்டைபற்றிப் பேசுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** கொள்கை விளக்கக் குறிப்பிலே இரண்டாவது பக்கத்திலே, மின்சாரத் தட்டுப்பாடு பற்றி அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அதுவும் மிகக் குறுகிய அளவிலேதான் கூறியிருக்கிறார்கள். "12-3-1998-லிருந்து விவசாய மோட்டார்களுக்கு மின்சாரம் வழங்குவது தினசரி 14 மணியிலிருந்து 10 மணியாகக் குறைக்கப்பட்டது. புறநகர்ப் பகுதிகளில் தினமும் ஒன்றரை மணி நேரம் மின்சாரம் நிறுத்தப்பட்டது. தொழிலகங்கள் தங்களுடைய சொந்த மின் உற்பத்தியில் தொழிற்சாலைகளை இயக்குமாறு கோரப்பட்டன" என்று கூறியிருக்கிறார்கள். இது முற்றிலும் தவறு. உண்மைக்குப் புறம்பானது. நாங்கள் எல்லாம் கிராமப்பகுதிகளிலே இருக்கின்றோம். அங்கே மின்சாரம் எப்போது வரும், எப்போது போகும் என்ற நிலை தெரியாமல் இருந்ததேயொழிய, குறிப்பிலே குறிப்பிட்டதுபோல எந்த இடத்திலேயும் இல்லை. அந்த நேரத்தில் விவசாயிகள் பயன்படுத்திக் கொண்டிருந்த மின் மோட்டார் Coil எல்லாம் தீய்ந்துபோய், அவற்றைச் சரிப்படுத்துவதற்கு அந்த விவசாயிகளால் முடியாத நிலைதான் இருந்ததேயொழிய, அமைச்சர் கூறுவதுபோல இல்லை என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கறேன். சென்னையிலே வேண்டுமானால், கோபாலபுரத்திலே வேண்டுமானால், விளக்குகள் எரிந்து கொண்டிருக்கலாம். ஆனால், தமிழகத்திலே, கிராமப்புறங்களில் எந்த இடத்திலேயும்....

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, ஒரு நோக்கம் கற்பித்துப் பேசக்கூடாது. கோபாலபுரத்திலே மட்டுமல்ல, போயஸ் கார்டனிலேயும் எப்போதும்



விளக்குகள் எரிந்துகொண்டுதான் இருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இந்த நிலைமைக்கெல்லாம் காரணம், நாங்கள் எங்களுடைய ஆட்சிக் காலத்திலே, 5 ஆண்டு காலத்திலே போட்ட மின் திட்டங்களையெல்லாம் நீங்கள் கிடப்பிலே போட்டதுதான், தடங்கல் ஏற்பட்டு, தமிழகம் இன்று இருளடைந்திருக்கிறது என்று நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** என்னென்ன திட்டங்கள் என்று இந்த அவைக்குத் தெரிவித்தால் நன்றாக இருக்கும்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, உதாரணத்திற்கு, எங்களுடைய ஆட்சிக்காலத்தில், என்னென்ன திட்டங்கள் போடப்பட்டன என்பதை நீங்கள் கேட்டதையொட்டிச் சொல்கின்றேன்.

பழுப்பு நிலக்கரியைப் பயன்படுத்தி 250 மெகா வாட்ஸ் அனல் மின் உற்பத்தி செய்யும் திட்டம்; கடலூரில் 1,000 மெகா வாட்ஸ் அனல் மின் நிலையத் திட்டம்; தூத்துக்குடியில் 500 மெகா வாட்ஸ் அனல் மின் உற்பத்தி நான்காவது கட்டம்; குலசேகரப்பட்டணத்தில் 100 மெகா வாட்ஸ் சூரிய ஒளி மூலம் மின் உற்பத்தித் திட்டம்; ஸ்ரீமுஷ்ணத்தில் 250 மெகா வாட்ஸ் பழுப்பு நிலக்கரி மின் உற்பத்தித் திட்டம். இந்தத் திட்டங்களை எல்லாம் நாங்கள் ஆரம்பித்திருந்தோம். நீங்கள் அவற்றையெல்லாம் கிடப்பில் போட்டுவிட்ட காரணத்தினால்தான் இந்தச் சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது...

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்தத் திட்டங்களில் சில திட்டங்களுக்கு M.O.U அனுமதி வழங்கிவிட்டு P.P.A.-விலே கையெழுத்துப் போடாமலேயே போய்விட்டார்கள். இந்த அரசு வந்ததற்குப் பிறகு, மின் உற்பத்தி செய்யக்கூடிய அந்த முதலாளிகளை எல்லாம் அழைத்து P.P.A. ஒப்பந்தத்திலே கையெழுத்து போட்டு, அந்தத் திட்டங்கள் எல்லாம் இப்போது செயல்படுத்துவதற்கான நடைமுறையிலே இருந்துகொண்டிருக்கின்றன. விரைவிலே அந்தத் திட்டங்கள் எல்லாம் அமல்படுத்தப்படும்.

[1998 நவம்பர் 25

**திரு. பி.ஆர். சுந்தரம்:** அந்தத் திட்டங்கள் எல்லாம் விரைவிலே செயல்படுத்தப்பட்டிருந்தால் இன்றைக்கு இந்தச் சூழ்நிலையே வந்திருக்காது. அவற்றையெல்லாம் கிடப்பிலே போட்டுவிட்டீர்கள் என்றுதான் நான் சொல்கிறேன்.

அடுத்தபடியாக நண்பர் திரு. சுப்பராயன் அவர்கள், திரு. தீரன் அவர்கள் கூறியதைப்போல, மின்வாரியத்திலே 1,000 பொறியாளர்கள் பணியிடங்கள் காலியாக இருப்பதாகவும், அந்தப் பொறியாளர் பணிக்கான Interview எல்லாம் நடத்தப்பட்டு, அவர்களை வேலைக்கு எடுத்துக்கொள்ளவில்லை என்றும் கூறியிருக்கிறார்கள். அந்தப் பொறியாளர்களுக்கும், நிர்வாகத்திற்கும் ஒழுங்கான பேரம் நடைபெறாத காரணத்தினால்தான் இன்னும் அவர்கள் எல்லாம் வேலைக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை...

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** துணைத் தலைவரவர்களே, இந்த ஆட்சியிலே பேரங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்பே கிடையாது. அந்தப் பணியிடங்களை நிரப்புவதுபற்றி நீதிமன்றத்திலே வழக்கு இருக்கின்ற காரணத்தினாலே, Interview எல்லாம் நடத்தப்பட்டு, நியமனம் செய்வதிலே கொஞ்சம் காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது. இலாகா, உயர்நீதிமன்றத்தை முறைப்படி அதற்காக அணுகிக் கொண்டிருக்கிறது. கடந்த காலத்தை மனதிலே வைத்துக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர் இப்படிப் பேசுவது நல்லதல்ல. (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மின்சார வாரியம் நட்டத்திலே இயங்கிக் கொண்டிருக்கிறது. ஆகவே, மின் வாரியத் தொழிலாளர்களுக்கெல்லாம் சம்பளம் கொடுக்கமுடியவில்லையென்று அமைச்சர் அவர்களே ஒரு கூட்டத்திலே பேசியிருக்கின்றார்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** அவர்களுடைய தலைவியார் வெளியிலே சொல்வதையெல்லாம் உள்ளே பேசக்கூடாது. எந்த இடத்திலே மின்சார ஊழியர்களுக்குச் சம்பளம் கொடுக்கப் பணம் இல்லையென்று நான் பேசினேன்? அதற்கு என்ன ஆதாரம் இருக்கிறது? அதை இந்த அவையிலே எடுத்துவைத்தால் மாண்புமிகு உறுப்பினருக்கு நல்லது.



1998 நவம்பர் 25]

பிற்பகல் 12-30

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு பேட்டியில் குறிப்பிடும்போது அவர்கள் கூறியிருக்கிறார்கள். மின் வாரியத்தில் நிதிப் பற்றாக்குறை இருந்த காரணத்தினால், வங்கிகளிடம் 300 கோடி ரூபாய் அளவிற்குக் கடன் பத்திரங்கள் அடகு வைக்கப்பட்டு கடன் வாங்கியதை மறுக்கிறாரா என்று என்னுடைய தலைவியார் கேட்டுள்ளார். வங்கிகளிடம் அடகு வைத்து கடன் வாங்க மின் வாரியத்திடம் எந்தவிதக் கடன் பத்திரங்களும் கிடையாது என்று நீங்கள் கூறியிருக்கிறீர்கள். ஆனால் தினத்தந்தியில் 27-7-1998 அன்று 100 கோடி ரூபாய்க்கு பங்குப் பத்திரங்களைத் தமிழ்நாடு மின் வாரியம் வெளியிட்டிருக்கிறது என்று கூறியிருக்கிறீர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு விவரம் தெரியவில்லை என்றால், அதற்காக இலாகாவைக் குறை கூறக் கூடாது. பங்குப் பத்திரங்களைப் பொது மக்களிடமிருந்து பெற்றுக் கடன் வாங்குவது என்பது வேறு. ஆனால் அவருடைய தலைவியார், 300 கோடி ரூபாய்க்குக் கடன் பத்திரங்களை அடகு வைத்து கடன் வாங்கியதாகச் சொன்னார்கள். எப்போதுமே கடன் பத்திரங்கள் என்பது ஏற்கெனவே மின்சார இலாகா ஒரு Private நிறுவனமாகவோ அல்லது பொது நிறுவனமாகவோ இருந்து Share certificate இருந்தால், அதை வைத்துக் கடன் வாங்கலாம். ஆனால் இந்தக் கடன் பத்திரங்களை வைத்துக் கடன் வாங்க முடியாது. அதைத்தான் நான் ஏற்கெனவே தெளிவுபடுத்தினேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம், இன்னும் ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** நீங்கள் மின்சார வாரியம் யாரிடமும் கடன் வாங்கவில்லை என்று ஏற்கெனவே கூறியிருக்கிறீர்கள். ஆனால் மின்சார வாரியம் யார் யாரிடம் கடன் வாங்கியிருக்கிறது என்பதைப் பட்டியல் போட்டுச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதாவது பன்னாட்டு நிதி நிறுவனத்திடம் நீங்கள் வாங்கவில்லை என்றாலும், ஆசிய வளர்ச்சி வங்கியில் வாங்கியிருக்கிறீர்களா, இல்லையா? அதுபோல மும்பையில் உள்ள ஒரு பொது நிறுவனத்திடம் தமிழ்நாடு மின்வாரியம் 90 கோடி ரூபாய்க்கு அடகு வைத்து இருப்பதை அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய அறிக்கையிலே நான் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். ஆசிய நிதி நிறுவனத்திடமிருந்து கடன் வாங்குவது, L.I.C. நிறுவனத்திடமிருந்து கடன் வாங்குவது தொன்றுதொட்டு நடைமுறையில் இருந்து வருகின்ற ஒரு பழக்கம். நான் மறுத்தது எல்லாம் I.M.F.-இல் மின்வாரியம் சம்பளம் கொடுப்பதற்கு அடமானம் வைத்து கடன் வாங்கினோம் என்பதைத்தான். எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் என்னுடைய அறிக்கையை முழுமையாகப் படித்துவிட்டுப் பேசினால் நல்லது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி. (குறுக்கீடு) திரு. பி.ஆர். சுந்தரம், உங்களுடைய நேரம் முடிந்துவிட்டது, நீங்கள் உட்காருங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இன்னும் ஒரு நிமிடத்தில் பேசி முடிக்கிறேன். குறுக்கீடுகள் இருந்தன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இப்போது இருக்கின்ற மின்சாரத் தடங்கலுக்கு, மின்சாரப் பற்றாக்குறைக்கு அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்க வேண்டும். நிர்வாகச் சீர்குலைவுக்கு அமைச்சர்தான் காரணம். இதை நான் சொல்லவில்லை. முன்னாள் தொழில் துறை அமைச்சர் திரு. முரசொலி மாறன் அவர்கள் ஒரு பொதுக் கூட்டத்தில் கூறியிருக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி.

**Thiru B. Venkatasamy:** Hon. Deputy Speaker Sir, I thank you for giving me an opportunity to speak on behalf of Janata Dal about the Annual Financial Statement for the year 1998-99 and Revised Estimate for 1997-98 of the Tamil Nadu Electricity Board.

At the outset, I want to thank the Hon. Electricity Minister for taking a firm stand in not collecting electricity tariff for agricultural pumpsets despite compulsion from the Central Government. I congratulate the Government for taking this decision in the interest of agricultural community. No nation can develop without sufficient electricity. Industries, Transport and even Agriculture need electricity. I am very happy to note that deficit in our State



is only 400 M.W. In Karnataka, there is shortage of electricity and lot of people are coming to Tamil Nadu to start industries.

*பிற்பகல் 12-35*

People from Bangalore come in large numbers to Hosur with a view to start industries. I asked them as to why they were coming here when Bangalore itself was a very big city. They said that our administration in Tamil Nadu is good and that electricity distribution is also good and because of that only they come to Hosur. I am very happy to hear this.

We are facing deficit in electricity generation. We must improve. We should stand first in India. We are producing Hydro electric power. Thermal power, power generation by means of Coal, Sugar mills captive, Bio gas from the municipal waste, Solar power etc. Participation by private people should be encouraged. I came to know that 20 applications had been received from private people and that only 5 were permitted. I request that permission should be given to all the 20 applicants. One of the applicants belongs to Hosur. In so many places you can have private participation so that they could meet out the deficit.

I request the Hon. Minister to get our requirement of 440 M.W. from the Centre. I also wish to state about line loss which is 17% here. I request the Hon. Minister to see that the same is reduced.

I am very thankful to the Hon. Minister who was kind enough to declare power connections to houses constructed in Poramboke lands. Regarding this, I have also raised a question in the Assembly earlier.

I thank the Government for giving free supply of power to jaggery manufacturers. I think this is an incentive to agriculturists.

Low Voltage of electricity is very much prevalent in my area. Nearly 20% of the villages are facing this problem. I request the Government to see that proper supply of power is ensured in all these areas.

Regarding pumpsets, I would like to point out one thing. There is no sufficient rain in Dharmapuri. It is a drought-prone area. We are depending only on rain water. There is no river also. So why not we consider giving connections to the applications which are pending now.

In Thanjavur, they are having plenty of water. Still they get power concession. Is it not possible to give concessions in Dharmapuri district also which is a drought-prone area? There is no rain, there is no dry crop and so agriculturists go to other places as coolies. Since vast agricultural lands are available in Dharmapuri district, I request the Hon. Minister to see that all the pending applications in Dharmapuri district are given power connections so that we can also grow on par with other districts in agricultural produces.

In Karnataka, they are giving power connections within 10-20 days from the date of application. I discussed about this with our Hon. Minister personally and he stated that in Tamil Nadu they have given more connections to more number of pumpsets and hence it was not possible to give connections quickly. I think it may be true that more connections had been given in the State as a whole but not in Dharmapuri.

I request the Hon. Minister to give power at concessional rate to pumpsets in Dharmapuri district.

Thank you very much for giving me this opportunity.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. டி. மணி, 5 நிமிடங்கள் மட்டும்.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1998-99 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையில் சிலவற்றை மட்டும் இங்கே நான் கூற விரும்புகிறேன். குறிப்பாக, மின்சார உற்பத்தியைப் பெருக்குவதற்குப் பல்வேறு திட்டங்களை அரசு அறிவித்துள்ளது. அது பாராட்டுவதற்குரிய விஷயம். ஆனால், அது வேகமாக செயல்படுவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். அதிலே ஒன்று கூடங்குளம், இன்னொன்று கன்னியாகுமரி மாவட்டத்திலே இருக்கக்கூடிய பெருஞ்சாணி திட்டம். இவற்றைத் துரிதமாக நடத்துவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

அதேபோன்று, காற்றாலை மூலமாக மின்சாரத்தை அரசே தயாரிப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். தனியாருக்கு நாம் இதைக் கொடுப்பதன் மூலமாக அரசுக்குப் பெரிய இலாபம் வந்ததாகத் தெரியவில்லை. காற்றாலைகளின் மூலமாகச் சில இடங்களில்





Sub stations வைத்திருக்கிறார்கள். அது இன்றைக்குச் சரிவர செயல்படாத நிலையில் உள்ளது. அதில் ஒன்று பூளவாடி, மற்றொன்று குன்னுபுரம். ஆகவே, இதையும் அரசு கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-40

அடுத்தபடியாக, என்னுடைய கன்னியாகுமரி மாவட்டத்திலே என்னுடைய தொகுதியிலே இருக்கின்ற சில பிரச்சினைகளை மட்டும் நான் இங்கே சொல்ல விரும்புகிறேன். மேல்புரம் ஊராட்சி ஒன்றியத்திலே களியல் கிராமத்திலே ஆதிவாசி பழங்குடியினர் பெரும் பகுதியினர் வாழ்கின்றனர். அது பேரூராட்சி என்ற காரணத்தினாலே அங்கு மின்சாரம் வழங்கப்படாத ஒரு சூழ்நிலை இருந்துகொண்டே இருக்கிறது. நான்கு ஆண்டுகளுக்கு முன்னாலே பேணூர் என்ற பகுதியில் ஆறு பேர் மின்சார இணைப்பிற்குத் தேவையான பணத்தை அதற்கு வேண்டிய மின்கம்பிகளுக்கான பணத்தையெல்லாம் கொடுத்ததற்குப் பிறகும், மின் இணைப்பிற்குத் தேவையான கம்பிகள் இல்லை என்று சொல்லக்கூடிய ஒரு குறைபாடு இருந்து கொண்டேயிருக்கிறது. மேலும் மின் அழுத்தம் என்பது அறவே இல்லாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, அந்தப் பகுதியில் மின் அழுத்தக் குறையைப் போக்குவதற்கு நடவடிக்கையினை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

களிங்கராஜபுரத்தில் ஒரு Sub-station அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று ஏற்கெனவே கடந்த கூட்டத்தொடரிலேயே சொல்லியிருந்தேன். அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மார்த்தாண்டம் பகுதியினை மையமாகக் கொண்டு ஒரு Sub-station அமைப்பதன் மூலம் அதனைச் சுற்றியுள்ள கிராமப்பகுதியில் மின் அழுத்தக் குறைவைத் தீர்த்துக்கொள்ள முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், பொதுவாக என்ன சொல்கிறார்கள் என்றால், கம்பிகள் இல்லை, உதிரிப் பொருட்கள் இல்லை என்கின்ற காரணங்களைச் சொல்கிறார்கள். எனவே, இதில் ஒரு துரிதமான நடவடிக்கையினை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேற்சொன்ன பகுதிகளில் இன்னொரு நிகழ்வு நடக்கிறது. அது நியாயமா என்ற கேள்வி எழுகிறது. அதாவது மத்திய மின் துறை அமைச்சகத்திலிருந்து, மீஞ்சிரை ஒன்றியத்திலே, ஒரு [illegible] மின்சார

D V2 11,3 N98 N98 61.1
219402

இணைப்பைக் கொடுப்பதற்காக பல மைல் தூரத்திற்கு கம்பியை இழுத்து, மின் இணைப்பைக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக நம்முடைய போர்டு ஆபீசிலிருந்து தகவலைச் சொல்கிறார்கள். எனவே, அந்தத் தாலுகாவிற்கு வருகின்ற உதிரிப் பொருட்கள் பூராவும் அந்தப் பணிக்குப் போகின்ற ஒரு நிலை இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, இதையெல்லாம் கணக்கில் எடுத்துக்கொண்டு மின்சாரப் பற்றாகுறையைப் போக்குவதற்கு உரிய நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பொதுவாக S.E. அல்லது P.A. யாரையாவது கேட்டால் மின்சாரம் எப்போது வரும் எப்போது போகும் என்று எங்களுக்கே தெரியாது என்கின்ற கதையைத்தான் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். எனவே, இந்த மாதிரியான நிலையை எல்லாம் போக்குவதற்கு உரிய நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மின்வாரியத்திலே பணிபுரிகின்ற ஒப்பந்தத் தொழிலாளர்களைப் பொறுத்தமட்டில், ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு ஒப்பந்தத்தைப் போட்டு இருக்கின்றார்கள். அந்த ஒப்பந்தத்தினை நாங்கள் வரவேற்கின்றோம். இருந்தாலும்கூட, அனைத்துத் தொழிலாளர்களையும் நிரந்தரத் தொழிலாளர்களாக ஆக்கி அவர்களுடைய உரிமைகளைப் பாதுகாத்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

புலியூர்சாலை கிராமப் பஞ்சாயத்திலே மின்வாரியப் பணியாளர்கள் ஒரு வாரத்திலே ஒரு நாள்தான் கம்பங்களில் ஏறி இறங்கி Light போடுவதோடு அவர்களுடைய பணி முடிகிறது. அவர்களிடம் ஏதாவது கேட்டால் எங்களுக்கு வேறு வேலைகள் இருக்கின்றன என்று சொல்லிவிடுகிறார்கள். எனவே, இந்த மாதிரியான சிற்றூர்களில் நம்முடைய கவனத்தை செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். புலியூர்சாலை பஞ்சாயத்திலே தெருவிளக்குகள் போடுவதற்குக் கூடப் போதுமான பொருட்கள் இல்லை. அதை வாங்குவதற்கான நிதி ஆதாரம் இல்லை.

இந்த மாவட்டத்தினைப் பொறுத்தவரையில் கிராமப் பஞ்சாயத்துப் பகுதிகளும் பேரூராட்சிகளும் மலைப்பாங்கான பகுதியை வைத்துக் கொண்டிருக்கின்றன. கடையால்மூடு பேரூராட்சி என்பது முழுக்க முழுக்க மலைப்பாங்கான பகுதியாகும். அதுபோல பேச்சிப்பாறைப் பகுதியும் முழுக்க முழுக்க மலைப்பாங்கான பகுதியாகும். அந்தப் பகுதிகளிலே பெரும்பாலும் ஆதிவாசி பழங்குடியினர் இருக்கிறார்கள்.



அவர்களுக்கு சாலை ஓரத்தில் வீடு இருந்தாலும்கூட மின்சார இணைப்பு மறுக்கப்படுகிற ஒரு சூழ்நிலை இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கு கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளில் ஆதிவாசி பழங்குடியின மக்களுக்கு முன்னுரிமையிலே மின்சாரம் தரப்படும் என்ற விவரங்களைச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் நடைமுறை அனுபவத்திலே அது இல்லாத ஒரு சூழ்நிலையைப் பார்க்கின்றோம். எனவே, கடையால்மூடு பகுதியிலும் மற்றும் பேச்சிப்பாறைப் பகுதியிலே இருக்கின்ற ஆதிவாசி பழங்குடியினருக்கு, குறிப்பாக அணைமுகம் பகுதியில் இருக்கின்ற ஆதிவாசி பழங்குடியின மக்களுக்குப் அந்த பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு மின்சாரம் அளிப்பதற்கு உரிய நடவடிக்கையினை அரசு மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்வாரியத்தினுடைய 1998-99ஆம் ஆண்டிற்கான நிதிநிலை விவர அறிக்கை மற்றும் 1997-98ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் 17 பேர் நேற்றும் இன்றும் வழங்கிய அரிய கருத்துக்களுக்காக நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் எடுத்துச்சொன்ன கருத்துக்கள் அனைத்தும் மின்வாரிய அதிகாரிகளாலே குறிப்பு எடுக்கப்பட்டு பெரும்பாலும் அந்தக் குறைபாடுகளைப் போக்குவதற்கு மின்சார வாரியம் நிச்சயம் நடவடிக்கை மேற்கொள்ளும் என்ற உறுதியை இந்த அவையில் நான் அளிக்க விரும்புகிறேன்.

*பிற்பகல் 12-45*

1998-99-ல் வரவு ரூ. 6232.88 கோடியாகவும், செலவு ரூ. 6655.44 கோடியாகவும் பற்றாக்குறை ரூபாய் 422.56 கோடியாகவும் இருக்குமென்று ஆண்டுத் தொடக்கத்திலே எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் 20-4-1998 முதல் 10-7-1998 வரை உயர் மின் அழுத்த நுகர்வோருக்கு 30 சதவீதம் மின்வெட்டு அமல்படுத்தப்பட்டதனால் வருவாய் குறைய ஆரம்பித்தது. அதோடு கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு நிலக்கரி மற்றும் எரிபொருள் வாங்குவதில் 18.20 சதவீதம் விலை உயர்ந்திருக்கிறது. வெளி மாநிலங்களிலிருந்து வாங்குகின்ற மின்சாரத்திற்கு விலை 16.62

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1998 நவம்பர் 25

சதவீதம் அதிக விலை கொடுத்து வாங்க வேண்டிருந்தது. தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட ஊதிய உயர்வு மற்றும் நிர்வாகச் செலவுகளுக்காக 26 சதவீதம் வழங்க வேண்டியிருந்தது. தேய்மானம் மற்றும் வட்டிக்காகக் கடந்த ஆண்டைவிட 10 சதவீதம் இந்த ஆண்டு கூடுதலாக ஆகியிருக்கிறது. எனவே இந்த ஆண்டு வரவு ரூ. 5691.21 கோடியாகவும், செலவு ரூ. 6382.11 கோடியாகவும், நிகரப் பற்றாக்குறை ரூ.690.90 கோடியாகவும் உயர்ந்திருக்கிறது. அதாவது எதிர்பார்த்த பற்றாக்குறையைவிட ரூ.268.34 கோடி அதிகமாக உயர்ந்திருக்கிறது என்பதை இந்த அவைக்கு நான் முதலிலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கே உரையாற்றிய உறுப்பினர்களில் பலர் நல்ல அரிய கருத்துக்களை இந்த வாரியத்திற்கும், தமிழ்நாட்டினுடைய முன்னேற்றத்திற்கும் சொல்லியிருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் நன்றி தெரிவித்துக்கொள்கின்ற அதேநேரத்தில், அவர்கள் சொன்ன கருத்துக்களிலே ஒன்றிரண்டை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

சட்டமன்ற உறுப்பினர் எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களும், ஆர்.ஆர். சேகரன் அவர்களும் பேசும்போது தமிழ்நாட்டில் தொழிற்சாலைகளுக்கு அதிக மின் கட்டணம் வசூலிப்பதால் இன்றையதினம் தொழிற்சாலைகள் எல்லாம் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. உயர்த்தப்பட்ட அந்த மின் கட்டணத்தை இரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள்.

மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் தமிழகம் தொழிற்சாலைகளுக்கு உயர்த்திய கட்டணம் இன்னமும் குறைவாகத் தான் இருக்கிறது என்பதை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். உயர் அழுத்த மின்சாரத்தைப் பயன்படுத்தும் தொழிற்சாலைகளுக்கு தமிழகத்தில் ஒரு யூனிட்டிற்கு 368 காசுகள் வசூல் செய்கிறோம். ஆனால் கர்நாடகா 403 காசுகள் வசூல் செய்கிறார்கள். மகாராஷ்டிரா 433 காசுகள், மத்தியப் பிரதேசம் 394 காசுகள் வசூல் செய்கிறார்கள். அதைப்போலவே குறைந்த மின் அழுத்தத்தைப் பயன்படுத்தக்கூடிய L.T. தொழிற்சாலைகளுக்கு தமிழ்நாட்டில் ஒரு யூனிட்டிற்கு 318 காசுகள் வசூல் செய்கிறோம். ஆனால் கர்நாடகாவில் 505 காசுகள் வசூல் செய்கிறார்கள். கேரளாவில் 356 காசுகள் வசூல் செய்கிறார்கள்.



1998 நவம்பர் 25] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

வேடிக்கை என்னவென்றால் கேரளாவிலே பெரும்பாலும் நூற்றுக்கு 90 மின் திட்டங்கள் நீர் மின் திட்டங்கள். அவர்கள் மிகக் குறைந்த செலவிலேதான் மின்சாரத்தை உற்பத்தி செய்கிறார்கள். கேரளாவிலேயே L.T. Industrial Services-க்கு 356 காசுகள் வசூல் செய்யப்படுகிறது. மகாராஷ்டிராவிலே 450 காசுகள் ஒரு யூனிட்டிற்கு வசூல் செய்யப்படுகின்றது. எனவே தமிழகத்தில் இப்போது உயர்த்தியுள்ள மின் கட்டணம் என்பது மற்ற மாநிலங்களை ஒப்பிட்டுப் பார்க்கின்ற நேரத்தில் இன்னமும் குறைவுதான் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் புகழேந்தி அவர்கள் பேசுகின்ற நேரத்தில் விவசாயிகள் பயன்படுத்தக்கூடிய மின்சார பம்ப் செட்டுகள் அவருடைய தாத்தா பெயரிலோ அல்லது தகப்பனார் பெயரிலோ இருந்தால், விவசாய மின் இணைப்புகளின் பெயர் மாற்றம் செய்வதில் பல சிரமங்கள் இருக்கின்றன; தாசில்தார் அலுவலகத்திலேயிருந்து வாரிசுதாரர் சான்றிதழ் வாங்கிக்கொடுத்தால் அதை உடனடியாக மாற்றிவிடலாம் என்ற ஒரு நல்ல கருத்தைச் சொன்னார்கள். அதை நிச்சயமாக மின்சார வாரியம் விரைவாக ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க ஆவன செய்யும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் நிஜாமுதீன் அவர்கள், புதிய மின் இணைப்பு பெறும்போது இலாகாவில் மீட்டர் இல்லாவிட்டால் வெளியிலேயிருந்து வாங்கித் தரச் சொல்கிறார்கள். பிறகு அந்த மீட்டருக்கு மின்சார இலாகா பணம் கொடுப்பதில்லை என்ற குற்றச்சாட்டைச் சொன்னார்கள். அது தவறு. அப்படி வாங்கிக் கொடுக்கப்படுகின்ற மீட்டர்களுக்கு நியாயமான விலை எதுவோ அந்த விலை மின்சார இலாகாவாலே திருப்பிக் கொடுக்கப்படுகிறது. அப்படி எங்காவது கொடுக்கப்படாமல் இருந்தால், என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தால் அவற்றைத் திருப்பித் தருவதற்கான ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-50

திரு. ஜி.கே. மணி அவர்கள் தெரு விளக்குகளே இல்லாத கிராமங்கள் இன்னும் இருப்பதாகச் சொன்னார்கள். மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் நான்காவது முறையாகப் பொறுப்பேற்றுக் கொண்டவுடன், எந்த அளவிற்கு அதிகமான தெரு விளக்குகள் அமைக்க முடியுமோ, அந்த அளவிற்கு அமைக்க வேண்டுமென்று

ஆணை பிறப்பித்து, 1997-98-இல் மட்டும் 78,178 தெரு விளக்குகளை நாம் அமைத்து இருக்கின்றோம். இந்த ஆண்டு 74,000 தெரு விளக்குகள் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, ஏறக்குறைய 60,000 தெரு விளக்குகள் இதுவரையிலும் அமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கின்றோம். இன்னமும் பல தெரு விளக்குகளை அமைக்க வேண்டும் என்பதில் கருத்து வேறுபாடு இல்லை. இருந்தாலும், நிதி நிலைமைக்கேற்ப இவையெல்லாம் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள் பெரிய பண்ணையாளர்களுக்குத்தான் இலவச மின்சாரம் வழங்கப்படுகிறது என்பது போன்ற ஒரு கருத்தைச் சொன்னார்கள். தமிழகத்திலே 16,07,976 பம்ப் செட்டுகள் மின் இணைப்புப் பெற்றிருக்கின்றன. அதிலே ஏழை விவசாயிகள், நடுத்தர விவசாயிகள் பயன்படுத்தக் கூடியவை 3 H.P. மற்றும் 5 H.P. மின் இணைப்புகள். அந்த 3 H.P. எவ்வளவு என்று பார்த்தால் 5,57,968. 5 H.P. எவ்வளவு என்று பார்த்தால் 8,21,098. ஆக இவையெல்லாம் ஏழைகளும், நடுத்தர விவசாயிகளும் பயன்படுத்தக்கூடிய மின் இணைப்புகள். பணக்காரர்கள், வசதி படைத்தவர்கள் பயன்படுத்துவது எவ்வளவு என்று பார்த்தால் 12.5 H.P., 15-லிருந்து 20 H.P., 20-லிருந்து 50 H.P. அது எவ்வளவு என்று பார்த்தால் மொத்தமே சேர்த்து 14,471 பம்ப் செட்டுகள்தான். அந்த அளவிலே இயங்கிக் கொண்டிருக்கின்றன என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். பெரும்பாலும், ஏழை விவசாயிகள்தான் இந்தச் சலுகைகளை அதிகமாகப் பெறுகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமச்சந்திரன் அவர்கள், கும்பகோணத்திலுள்ள கிராமிய கூட்டுறவுச் சங்கம் இலாபத்திலே இயங்குவதாகவும், அதை மின்சார வாரியமே ஏற்றுக் கொண்டது சரியல்ல என்ற ஒரு கருத்தைச் சொன்னார்கள். அவர்களுக்கு நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். கும்பகோணம் கிராமிய கூட்டுறவுச் சங்கம் 1-7-1980 முதல் செயல்பட்டு வருகின்றது. அந்தச் சங்கம் மின்சார இலாகாவிடமிருந்து ஒரு யூனிட் 18 காசு என்று குறைந்த விலைக்கு வாங்கி தொழிற்சாலைகளுக்கு, வீடுகளுக்கு, எல்லா கன்சியூமர்களுக்கும் மின்சார இலாகா என்ன கட்டணம் வசூல் செய்கிறதோ, அதையே வசூல் செய்கிறார்கள். இதன்மூலம் மட்டும் ஆண்டிற்கு, கடந்த ஆண்டு மட்டும் 21 கோடியே 59 இலட்சம் ரூபாய் மின்சார இலாகாவிற்கு இழப்பு ஏற்பட்டிருக்கிறது. 18 காசுக்கு



மின்சாரத்தை வாங்கி ரூ. 3.50 காசுக்கு அவர்கள் விற்பது என்ன நியாயம் என்பதை எண்ணிப் பார்த்துத்தான் மின்சார இலாகாவே அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. வேலாயுதன் அவர்கள் பேசும்போது, எஸ்.ஆர். புதூரிலே ஒரு புதிய Sub-station தொடங்கப்பட்டிருக்கிறது. அதை விரைவிலே கட்டி முடிக்க வேண்டுமென்று சொன்னார்கள். அந்த Sub-station 18-6-1998-லேயே கட்டி முடிக்கப்பட்டு, இப்போது அது இயங்கி வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மோகன் கந்தசாமி அவர்கள் பேசுகின்ற நேரத்திலே அவருடைய பொங்கலூர் தொகுதியிலே காற்றாலை மூலம் உற்பத்தி செய்யக்கூடிய மின்சாரத்தை எடுத்துச் செல்ல மின்பாதைகளும், மின்மாற்றிகளும் அமைக்க வேண்டுமென்று சொன்னார்கள். இப்போது, தேவையான மின்பாதைகளும் மின்மாற்றிகளும் அங்கே அமைக்கப்பட்டிருக்கின்றன என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

திரு. பெ.சு. திருவேங்கடம் அவர்கள் பேசுகின்ற நேரத்திலே சாத்தனூர் புனல் மின் திட்டத்தை விரைவிலே முடிக்க வேண்டுமென்று சொன்னார்கள். அது, அடுத்த ஆண்டு 1999 பிப்ரவரி மாதத்திலே அமலாக்கப்படவிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

டாக்டர் குமாரதாஸ், மின் உபகரணங்கள், குமரி மாவட்டத்திற்குக் கொஞ்சம் கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அந்த உபகரணங்கள் எல்லாம், மின் மாற்றிகளாக இருந்தாலும், மீட்டராக இருந்தாலும் அல்லது வேறு எந்தக் கருவிகளாக இருந்தாலும் எல்லா மாவட்டத்திற்கும் வேகமாக அனுப்பப்பட்டு வருகின்றன, குமரி மாவட்டத்திற்கும் நிச்சயமாக அனுப்பப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. குத்தாலம் பி. கல்யாணம் அவர்கள் 180 கோடி ரூபாயிலே வரக்கூடிய எரிவாயு திட்டத்தை அவர்கள் தொகுதியிலே வேகமாக அமல்படுத்த வேண்டுமென்று சொன்னார்கள். மத்திய அரசோடு அதற்காக வாதாடி, இந்த ஆண்டே அந்தத் திட்டத்தை எடுத்துக்கொள்வதற்கான நடவடிக்கைகளில் மின்வாரியம் ஈடுபட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1998 நவம்பர் 25

திரு. சுப்பராயன் அவர்கள் பேசுகின்ற நேரத்தில் மின்சார சீரமைப்பு என்ற பெயராலே பயனாளிகளுக்குப் பாதிப்பு ஏற்பட்டுவிடக் கூடாது என்ற கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் அதை மனதிலே கொண்டுதான் அப்படிப்பட்ட சீரமைப்பு வாரியம் அமைக்கின்ற நேரத்தில் என்னென்ன விளைவுகள் ஏற்படும் என்பதை இந்தியாவிலே, மற்ற மாநிலங்களிலே எங்கெங்கே அமைக்கிறார்கள், அதனுடைய விளைவுகள் என்ன என்பதைப் பார்த்து, நாம் நிதானமாக அதை அமல்படுத்தலாம் என்று முடிவு எடுத்திருக்கிறார்கள் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. தீரன் அவர்கள் பேசுகின்ற நேரத்திலே மாநகராட்சிகளுக்கு எல்லாம் குப்பையிலேயிருந்து மின்சாரத்தைத் தயாரிப்பதற்கான அனுமதியை வழங்கலாம் என்று சொன்னார்கள். சென்னை மாநகராட்சி அப்படிப்பட்ட ஒரு அனுமதியைக் கேட்டது. அதை வழங்கியிருக்கின்றோம். மற்ற மாநகராட்சிகளிலும் அப்படிப்பட்ட அனுமதி கேட்பார்களானால் மின்சார வாரியம் உடனடியாக அனுமதி வழங்கும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 12-55

திரு. பி.ஆர். சுந்தரம் அவர்கள் பேசும்போது புறம்போக்கு நிலத்திலே உள்ள குடிசைகளுக்கு மின் இணைப்பு வழங்க வேண்டும் என்று சொன்னார்கள். அப்படிப்பட்ட இணைப்பு வழங்க வேண்டும் என்று ஏற்கெனவே இந்த அரசு ஆணை பிறப்பித்து இருக்கிறது. அந்த புறம்போக்கு நிலத்திலே குடிசை போட்டு இருக்கின்றவர்கள், வரி கட்டினாலோ அல்லது குறைந்தபட்சம் அவர்கள் ஒரு குடும்ப அட்டை வைத்துக்கொண்டு இருந்தாலும் கூட இணைப்பு வழங்க வேண்டும் என்று இந்த அரசால் ஆணை பிறப்பிக்கப்பட்டு பல குடிசைகளுக்கு மின் இணைப்பும் வழங்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. வெங்கடசாமி அவர்கள் பேசும்போது பல தொழில அதிபர்கள் இப்போது தமிழகத்தை நாடித்தான் தொழில் தொடங்க வந்து கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அது உண்மை. இப்போது தென் மாநிலங்களிலே தமிழ்நாட்டை நோக்கித்தான் எல்லா தொழில் அதிபர்களும் வந்து கொண்டிருக்கிறார்கள். எனவே அப்படி வரக்கூடிய தொழில் அதிபர்களுக்கு நாம் தேவையான மின்சாரத்தைத் தடையின்றி கொடுப்பதற்கான நடவடிக்கைகளிலே ஈடுபட்டிருக்கிறோம் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.



1998 நவம்பர் 25] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. மணி அவர்கள் பேசுகின்ற நேரத்திலே கன்னியாகுமரி மாவட்டத்திலே குறைவான மின் அழுத்தம் இருப்பதாகச் சொன்னார்கள். அங்கே தேவையான Sub-stations கட்டி அந்தக் குறையைப் போக்குவதற்கு நடவடிக்கையை இந்த அரசு எடுக்கும் என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்த ஆண்டு, அதாவது 1999-2000 ஆம் ஆண்டில் நம்முடைய தேவை 5,400 மெகா வாட்டாக இருக்கும். ஆனால் நம்மிடத்திலே உற்பத்தி செய்யப்படுவது 4,800 மெகா வாட்தான் இன்றைய நிலையில். இருந்தாலும்கூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடந்த ஆண்டைப்போல் ஓர் அனுபவம் நமக்கு வந்துவிடக் கூடாது என்பதற்காக, அந்தப் பற்றாக்குறையைப் போக்குவதற்கு நடவடிக்கை எடுங்கள் என்று எங்களுக்கு ஆணையிட்டதால், நாங்கள் மராட்டியம் மற்றும் வேறு சில மாநிலங்களுக்குச் சென்று, டிசம்பர் மாதத்திலேயிருந்தே மராட்டியத்திலிருந்து 200 மெகா வாட்டும் மற்றும் பஞ்சாப், ஓரிசா போன்ற மாநிலங்களிலிருந்து 200 மெகா வாட்டும், மின்சாரம் வாங்குவதற்கான ஒப்பந்தங்களிலே கையெழுத்திட்டு வந்திருக்கிறோம். நம்முடைய மாநிலத்திலே இயங்கிக் கொண்டிருக்கிற ஜி.எம்.ஆர். வாசவி....

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடையிலே குறுக்கிடுவதற்கு மன்னிக்கவும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் டிசம்பர் மாதத்திலிருந்து மஹாராஷ்டிரத்திலிருந்தும், பஞ்சாபிலிருந்தும் மின்சாரம் பெறுவதற்கு ஆவன செய்யப்பட்டிருக்கிறது என்று கூறியிருக்கிறார்கள். மத்திய மின் துறை அமைச்சர் அவர்கள் ஒரு கூட்டத்திலே கூறும்போது வெளி மாநிலங்களிலிருந்து மின்சாரம் இங்கே வந்தாலும் அதைப் பெறுவதற்கு Capacitors சரியாக அமைக்காத காரணத்தினால் அங்கிருந்து மின்சாரம் வந்தும் இங்கே பயன்பெற முடியவில்லை என்று கூறியிருக்கிறார்கள். அதைப் பொறுத்தவரையில் இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறது?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, மாண்புமிகு மத்திய அமைச்சர் அவர்கள் அப்படிச் சொன்னதும் உண்மை. மாண்புமிகு உறுப்பினர் கேட்டதும் உண்மை. ஆனால் உண்மை என்னவென்றால் டிசம்பர் மாதத்திற்குள்ளாக தமிழ்நாட்டில் நாம் பொருத்த வேண்டிய 1,344 Capacitor-களைப் பொருத்துவதற்கான

நடவடிக்கை எடுக்கப்பட்டு, இப்போது ஆயிரம் Capacitor-களை நாம் பொருத்தி விட்டோம். இன்னும் 344 Capacitor-களை டிசம்பர் மாதம் 15 ஆம் தேதிக்குள்ளாகப் பொருத்த இருக்கிறோம் என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். ஆக வெளி மாநிலங்களிலேயிருந்து வருகின்ற 400 மெகா வாட், ஜி.எம்.ஆர். வாசவி என்ற நிறுவனம் அடுத்த மாதத்திலிருந்து உற்பத்தி செய்ய இருக்கின்ற சுமார் 200 மெகாவாட், இந்த 600 மெகா வாட்டோடு ஏற்கெனவே நம்முடைய மாநிலத்திலே உற்பத்தியாகின்ற 4,800 மெகா வாட்டையும் சேர்த்துப் பார்த்தால் 5,400 மெகா வாட். அடுத்த ஆண்டு எந்தவிதமான குறையுமின்றி மின்சாரத்தை வழங்குவதற்கான நடவடிக்கைகளிலே இந்த அரசு ஈடுபட்டிருக்கிறது என்பதையும் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த ஆட்சி பொறுப்பேற்றுக்கொண்ட உடனே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மின்சாரத் திட்டத்திலேதான் அதிகமான கவனத்தைச் செலுத்தினார்கள். இந்த இலாகாவிற்கு நான் அமைச்சராக இருந்தாலுங்கூட இப்போதும் ஒவ்வொரு மாதமும் இரண்டு முறையாவது மின்சார வாரிய அதிகாரிகளைத் தன்னுடைய அறைக்கு அழைத்து இதுபற்றி விவாதித்து அவர்களோடு கலந்து பேசுகிறார்கள். அதன்விளைவாகத்தான் பல மின்சாரத் திட்டங்கள் இப்போது வேகமாக நடைபெற்றுக் கொண்டு வருகின்றன.

TITCO மூலமாக 20 இடங்களிலே மின் உற்பத்தி செய்ய நாம் ஒப்பந்தப்புள்ளி கோரினோம். அதிலே 7 பேருக்கு திரவ வாயு Fuel linkage கொடுப்பதற்கான, நாப்தா கொடுப்பதற்கான ஆணை பெற்றோம். மற்ற 13 பேர்களிலே 6 பேர்கள் நாங்கள் வேறு எண்ணெயைப் பயன்படுத்தி மின்சாரத்தை உற்பத்தி செய்கிறோம் என்று சொன்னார்கள். இன்னும் 4 பேர் இப்போது புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டு இருக்கின்ற ஓர் எண்ணெயைப் பயன்படுத்திச் செய்கிறோம் என்று சொன்னார்கள். அதையெல்லாம் மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பி அவர்களின் அனுமதிக்காகக் காத்துக் கொண்டிருக்கிறோம். இருந்தாலும், TIDCO மூலம் ஏற்கெனவே தொடங்கப்பட்ட அந்த 6 நிலையங்களிலே 680 மெகா வாட்டும், சமயநல்லூரிலே 106 மெகா வாட்டும், சாமல்பட்டியிலே 106 மெகா வாட்டும், கோயில் களப்பால், பெருங்குளம் ஆகிய இடங்களிலே எரிவாயுத் திட்டத்தின் மூலமாக 150 மெகா வாட்டும் 2000, 2001 ஆம் ஆண்டுகளிலே நிச்சயமாக உற்பத்தியாகும். எனவே, அந்த



ஆண்டுகளிலிருந்து நமக்கு எந்தவிதமான கஷ்டமும் இல்லை என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

பிற்பகல் 1-00

மாண்புமிகு உறுப்பினர் திரு. குத்தாலம் பி. கல்யாணம் அவர்கள், அவர்களுடைய தொகுதியில் ஒரு Gas Project வரவேண்டுமென்று சொன்னார்கள். அதுபற்றியும் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, 2001, 2002இல் பிள்ளைப்பெருமாள் நல்லூரில் 330 மெகா வாட், நெய்வேலி 'ஜீரோ' யூனிட்டில் 250 மெகா வாட், ஆக 580 மெகா வாட் மின்சாரம் நமக்குக் கிடைக்க இருக்கின்றது. இவை இல்லாமல் மின்சார வாரியமே வட சென்னையில் 500 மெகா வாட் திறன் கொண்ட 2 மின் நிலையங்களையும், தூத்துக்குடியில் 500 மெகா வாட் திறன் கொண்ட ஒரு மின் நிலையத்தையும் சேர்த்து 1,500 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கான திட்டங்களையும் ஆய்வு செய்து மத்திய அரசாங்கத்தினுடைய ஒப்புதலுக்காக அனுப்பி வைத்திருக்கிறது. இத்திட்டங்களை, நிதிப் பற்றாக்குறை இருக்கின்ற காரணத்தினாலே மின்சார வாரியமே செய்யலாமா அல்லது Joint sector-லே செய்யலாமா என்பதைப் பற்றியெல்லாம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் அதிகாரிகளும் கலந்துபேசி முடிவு எடுக்க இருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன். இது, 2001 வரையிலும் இருக்கக்கூடிய நிலைமை. 2002-லேயிருந்து நம்முடைய மாநிலம் எந்த அளவுக்கு மின்சார உற்பத்தியிலே கவனம் செலுத்தும் என்று சொன்னால், 10-பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே, வட சென்னையிலே 'வீடியோகான்' 1,050 மெகா வாட் மின்சாரத்தை நிச்சயமாக நமக்கு உற்பத்தி செய்து தருவார்கள். அதற்கான அடிக்கல்லை நாட்டுவதற்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே ஜனவரி மாதத்திலே தேதி கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

அதைப்போலவே, வட சென்னையில் 'Trisakthi என்ற நிறுவனம் 525 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு P.P.A. தயாராகி மத்திய அரசாங்கத்தினுடைய ஒப்புதலுக்குச் சென்றிருக்கிறது.

தூத்துக்குடியிலே ஸ்பிக் நிறுவனம் மூலம் 525 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்ய நம்முடைய அரசு ஒப்புதல் தந்தும்கூட

நிலம் கொடுப்பதிலே மத்திய அரசாங்கத்திடம் பிரச்சினை ஆகிக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு மத்திய அமைச்சர் அவர்கள் அதுபற்றி 'தருவதற்கு இல்லை' என்று மறுத்திருக்கிறார்கள். ஆனால் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பிரதமருக்கே கடிதம் எழுதி, அவர்களே இப்போது நிலத்தைக் கொடுக்கக்கூடிய நிலையிலே இருக்கிறார்கள் என்ற செய்தியும் கிடைத்திருக்கிறது.

அதைப்போலவே, கடலூரிலே 1,320 மெகா வாட்டி ஓர் அனல் மின் திட்டப் வருவதற்கான வாய்ப்பு இருக்கிறது. ஸ்ரீமுஷ்ணத்திலே 250 மெகா வாட் மின் திட்டம் அமைப்பதற்கான நடவடிக்கைகளிலே ஈடுபட்டு, பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

ஜெயங்கொண்டத்திலே ரிலையன்ஸ் நிறுவனத்தின் மூலம் 1,500 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு அனுமதி தரப்பட்டு, 500 மெகா வாட் உடனடியாக உற்பத்தி செய்வதற்கான பணிகளைத் தொடங்குவதற்கான வேலைகளிலே அவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். Chennai Power Corporation, எண்ணூருக்கு அருகில் 1,000 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கான முழு அனுமதியும் தந்து, அவர்களின் பங்குதாரர்களுக்கிடையிலே கொஞ்சம் பிரச்சினை இருக்கின்ற காரணத்தினாலே, அடுத்த மாதம் பணியைத் தொடங்குவதாக அவர்கள் உறுதி தந்திருக்கிறார்கள். இஃதன்னியில், வேம்பாரில் 2,000 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்யவும் நாம் அனுமதி வழங்கியிருக்கின்றோம். ஆக, பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே மட்டும் 8,170 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கான அனுமதியை தந்து இந்த அரசு துரிதமான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது என்ற மகிழ்ச்சிகரமான செய்தியை இந்த அவைக்குச் சொல்வதோடு (மேசையைத் தட்டும் ஒலி) மட்டும் அல்ல, கி.பி. 2000-த்திலேயிருந்து தமிழ்நாடு தென் மாநிலங்களிலேயே ஒரு Surplus stateஆக இருக்கும் என்பதையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இது மட்டுமல்ல, நம்முடைய முதலமைச்சர் அவர்கள், இருக்கக் கூடிய கூட்டுறவுச் சர்க்கரை ஆலை அதிகாரிகள் அனைவரையும் அழைத்து அவர்கள், 'இணை மின் உற்பத்தி'--Co-generation" மூலம் மின் உற்பத்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டதற்கிணங்க 141 மெகா வாட் மின்சாரம் சர்க்கரை ஆலைகள மூலம் உற்பத்தி செய்து கொண்டிருக்கிறார்கள். மேலும், இந்த ஆண்டு 100 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்ய வேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள்



கேட்டிருக்கிறார்கள். அதற்கு அவர்கள் நிதியுதவியும் கேட்டிருக்கிறார்கள். அதற்கான ஏற்பாட்டை மின்சார இலாகா செய்து கொண்டிருக்கிறது. என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போலவே, தன் பயன் மின்னாக்கம். (Captive Power Generation) எந்தவொரு தொழிலதிபரும், தானாக முன் வந்து, 'நான் மின்சாரத்தை உற்பத்தி செய்கிறேன்; எனக்குத் தேவைப்படுகின்ற மின்சாரம் போக மிச்சம் இருக்கக்கூடிய மின்சாரத்தை மின்சார இலாகாவிற்கே தந்துவிடுகிறேன்' அளிக்க என்று முன்வருவாரேயானால், அவர் உற்பத்தி செய்கின்ற அந்த மின்சாரத்திற்குத் தேவையான எண்ணெய்க்கு வரி விலக்கு அளிக்கவும், அவர்கள் உற்பத்தி செய்கின்ற அந்த மின்சாரத்தினை மின்சார வாரியத்திற்குக் கொடுக்கும்போது ஒரு யூனிட்டுக்கு, தென் மாநிலங்களிலேயே நாம் 2 ரூபாய் 25 காசுகள் கொடுத்து வாங்குவதற்கான ஓர் ஒப்பந்தத்தையும் இப்போது நாம் செய்திருக்கின்றோம். அதன் மூலம், கும்மிடிப்பூண்டியிலே மட்டும் இந்த பிப்ரவரி மாதத்திலேயே 63 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்து அவர்கள் குறுகிய காலத்தில், 6 மாதத்திற்குள்ளாகவே நமக்கு வழங்கவிருக்கிறார்கள் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிற்பகல் 1-05

காற்றாலையிலேயிருந்து தனியார் மூலமாக 700 மெகா வாட் மின்சாரம் உற்பத்தியாகிறது. மின்சார வாரியம் 18 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்கிறது. இந்த மின்சாரத்தையெல்லாம் நாம் நல்லமுறையிலே பயன்படுத்தி இப்போது தமிழகத்திலே எல்லாத் தொழிற்சாலைகளுக்கும் வழங்கிக்கொண்டிருக்கிறோம்.

நீர் மின்சாரத்தைப் பொறுத்தவரையில், டாக்டர் குமாரதாஸ் அவர்கள் சொன்னார்கள், காங்கிரஸ் ஆட்சியிலே இருந்தபோது, நாங்கள் 1,800 மெகா வாட் அளவிற்கு நீர் மின்சாரத் திட்டங்களை அமல்படுத்தினோம் என்று. அதற்குப் பிறகு, நீர் மின்சாரத் திட்டங்களே இல்லையென்று சொன்னார்கள். பெரும்பாலான நீர் மின்சாரத் திட்டங்கள் 500 மெகா வாட் 250 மெகா வாட் என்று காங்கிரஸ் ஆட்சியிலேயே அமல்படுத்தியாகிவிட்டன. இப்போது எந்த அளவிற்குச் சென்றிருக்கிறோம் என்றால், எங்கேயாவது 5 மெகாவாட் மின்சார உற்பத்திக்குக்கூட நீராதாரங்கள் இருக்குமானால் அவற்றையெல்லாம் தேடிக் கண்டுபிடித்து, அதையும் வீணாக்கக் கூடாது என்று இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது. அப்படி, தேர்ந்தெடுக்கப்பட்ட அந்தத் 'திட்டங்களெல்லாம் 15 மெகா வாட் மற்றும் அதற்கும்

குறைவாக இருக்குமானால், அவற்றைத் தனியார்களிடத்திலே ஒப்படைக்கவும், அதற்கு மேலே இருக்குமானால் அவற்றையெல்லாம் மின்சார வாரியமே செய்து முடிப்பது என்றும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன். இவையெல்லாம், நான் இதுவரையிலே சொன்னவை, மாநில அரசு செய்யக்கூடிய திட்டங்கள். இவை தவிர, மத்திய அரசாங்கம் National Thermal Power Corporation மூலம், அறிவித்திருக்கின்ற திட்டங்கள், கடலூர் மெகா திட்டம். 1,500 மெகா வாட், செய்யூரிலே முதலிலே 2,000 மெகா வாட்ஸ் என்று சொன்னார்கள், பிறகு 1,000 மெகா வாட்ஸ் என்று மாற்றினார்கள், மறுபடியும் இப்போது 2,000 மெகா வாட்ஸ் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கான முயற்சிகளிலே ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

அதைப்போலவே, நெய்வேலியிலே 2,000 மெகா வாட்ஸ், ஒகேனக்கல்லிலே 850 மெகா வாட்ஸ். மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் போன்றவர்கள் எல்லாம் இங்கே பேசினார்கள். இந்தத் திட்டங்களிலே வேடிக்கை என்னவென்றால், இதுவரையிலே மத்திய அரசாங்கம் ஒரு கொள்கையைக் கடைபிடித்து வந்தது. மத்திய அரசாங்கத் திட்டங்கள் எதுவாக இருந்தாலும், அதிலே நமக்கு 33 சதவீதம்தான் மின்சாரத்தைத் தருவது, மீதியை மற்ற மாநிலங்களுக்குப் பங்கிட்டுத் தருவது என்று முடிவு எடுத்திருந்தார்கள். ஆனால், மத்திய மின்சாரத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. ரங்கராஜன் குமாரமங்கலம் அவர்கள் கோட்டைக்கு வந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு ஏறக்குறைய இரண்டு மணி நேரம் பேசியதற்குப் பிறகு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று அவர்கள் இங்கேயே அறிவித்துவிட்டுச் சென்றார்கள். இனிமேல் மத்திய அரசாங்கத்தின் திட்டங்கள் எதுவாக இருந்தாலும், அது தமிழ்நாட்டிலே தொடங்கப்படுமானால் 48.87 சதவீதம் மின்சாரம் தமிழ்நாட்டிற்கே வழங்கப்படும் என்பதையும் தெரிவித்தார்கள் என்பதையும் இந்த நேரத்திலே நான் மகிழ்ச்சியோடு தெரிவிக்க விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதைப்போலவே, கூடங்குளம் மின் திட்டத்தைப் பற்றி திரு. பாலசுப்பிரமணியன் அவர்கள் சொன்னார்கள், டாக்டர் குமாரதாஸ் அவர்கள் சொன்னார்கள், நம்முடைய திரு. டி. மணி போன்றவர்கள் எல்லாம் சொன்னார்கள். அந்தத் திட்டம் குறித்து மத்திய அரசாங்கத்திற்கும் ரஷ்யாவிற்கும் இடையே ஒப்பந்தம் ஆகிவிட்டது.





அதற்கான நிதியை ஒதுக்கியிருக்கிறார்கள். இப்போது பணிகளைத் தொடங்குவதற்கு அவர்கள் தயாராக இருக்கிறார்கள். ஆனால், அந்தத் திட்டத்தை முடிக்க 10 ஆண்டுகள் ஆகும். இப்போது நாம் 1998லே இருக்கிறோம். 2007 அல்லது 2008லே அந்தத் திட்டம் அமல்படுத்தப்படும். எந்தத் திட்டம் வந்தாலும் நிச்சயமாக அதனுடைய பங்கு நமக்குக் கிடைக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஒன்றை மட்டும் நான் சொல்கின்றேன். இந்தியா முழுவதும், மத்திய அமைச்சரால் அறிவிக்கப்பட்டிருப்பது என்னவென்றால், பத்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திற்குள்ளாக 40 ஆயிரம் மெகா வாட்ஸ் மின்சாரத்தை நாங்கள் உற்பத்தி செய்வோம்; நாங்கள் என்றால் மாநிலங்கள் உட்பட என்று அறிவித்திருக்கிறார்கள். ஆனால், நம்முடைய மாநிலத்திலே மட்டும் ஒன்பதாவது மற்றும் பத்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திற்குள்ளாக 10 ஆயிரம் மெகா வாட்ஸ் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கான திட்டங்களுக்கு ஏற்கெனவே ஒப்புதல் அளிக்கப்பட்டு, அவை நடைமுறைப்படுத்தப்படுவதற்கான ஏற்பாடுகள் செய்யப் பட்டிருக்கின்றன என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

Transmission-மின் அனுப்புகை-பற்றி இங்கே பலர் பல கருத்துக்களைச் சொன்னார்கள். திரு. பி.ஆர். சுந்தரம் கூட நீங்கள் வெளி மாநிலங்களிலேயிருந்து மின்சாரத்தை வாங்குகிறீர்கள், ஆனால் மின்சாரம் வருவதற்கான பாதை இல்லையே என்று சொன்னார்கள். அதை நாங்களும் உணர்ந்து, முதலிலே Capacitor போட வேண்டும் என்று சொன்னார்கள், அதைப் போட்டுவிட்டோம். அடுத்து இராமகுண்டம், கடப்பா வழியாக ஸ்ரீபெரும்புதூர் வரவேண்டும் என்று சொன்னால் மகாராஷ்டிரா மாநிலத்திலிருந்து நமக்கு வருவதற்கான வாய்ப்பு இல்லை. 200 மெகா வாட் மின்சாரம்தான் இப்போது கொண்டு வரமுடியும். அதற்காக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மத்திய மின்சாரத் துறை அமைச்சரைக் கேட்டுக்கொண்டதன் பேரில் பன்னிரண்டே மாதத்தில் இராமகுண்டம், கடப்பா, ஸ்ரீபெரும்புதூர் வழியாக மேலும் 400 கே.வி. 'transmission line' போடுவதற்கு அவர்கள் ஒப்புதல் தந்து அந்த வேலைகளிலே அவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, கடப்பா, விஜயவாடா, ஸ்ரீபெரும்புதூர், சென்னை ஆகிய உயர் அழுத்த மின் பாதைகளை அமைக்க வேண்டும் என்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று 400 மெகா வாட் மின்சாரத்தைக் கொண்டு வருவதற்கான திட்டத்தை அவர்கள் அமல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகின்றேன்.

பிற்பகல் 1-10

இங்கே பல இடங்களிலே குறைவான மின் அழுத்தம் இருக்கிறது அல்லது புதிய துணை மின் நிலையங்கள் வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்களெல்லாம் கேட்டார்கள். நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறன். புதிய துணை மின் நிலையங்களை அதிகரிக்க வேண்டுமென்று நம்முடைய முதலமைச்சர் பொறுப்புக்கு வந்தவுடனே உத்தரவு பிறப்பித்தார்கள். இதற்கு முந்தைய ஆட்சியில் ஆண்டு ஒன்றுக்கு 40 புதிய துணை மின் நிலையங்கள்தான் கட்டப்பட்டு வந்தன ஆனால் இந்த ஆட்சி பொறுப்பேற்றுக் கொண்டவுடனே ஆண்டொன்றுக்கு 60 புதிய துணை மின் நிலையங்களை நாம் கட்டி வருகிறோம். கடந்த ஆண்டு 60 இடங்களிலே துணை மின் நிலையங்கள் கட்டி முடிக்கப்பட்டு விட்டன. இந்த ஆண்டு 60 புதிய துணை மின் நிலையங்களை நாம் எடுத்திருக்கிறோம். மீதியிருக்கக்கூடிய துணை மின் நிலையங்களை அடுத்த ஆண்டுக்குள்ளாகக் கட்டி முடிக்க வேண்டுமென்று சொன்னதோடு மட்டுமல்ல, 2000-க்குப் பிறகு தமிழ்நாட்டிலே எங்கேயும் Low voltage என்ற அந்தப் பிரச்சினை இருக்கக் கூடாது என்று முதலமைச்சரவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதை மின்சார வாரியம் தலைமேல் ஏற்றுக்கொண்டு அந்தப் பணிகளிலே தீவிரமாகச் செயல்பட்டு வருகிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அடுத்து மின்சார இணைப்பு. இலவச மின்சாரத்தை நாம் இப்போது வழங்கிக் கொண்டிருக்கிறோம். இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையிலே அதிலே எந்தவிதமான மாற்றமும் இப்பொழுது செய்யத் தயாராக இல்லை. விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்குவதில் முதலமைச்சர் அவர்கள் உறுதியாக இருக்கிறார்கள். அந்த இலவச மின்சாரம் கொடுப்பதிலே என்னென்ன பிரச்சினைகள் இருக்கின்றன என்பது மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரியாது. மின்சாரம் மட்டும் நாம் இலவசமாகத் தரவில்லை. அந்த இணைப்பு கொடுப்பதும் இலவசமாகத் தருகிறோம். ஒரு மின்சார இணைப்பு கொடுக்க வேண்டுமென்று சொன்னால் மின்சார இலாகாவிற்கு 50 ஆயிரம் ரூபாயிலேயிருந்து 1 இலட்சம் ரூபாய் வரை செலவாகிறது. அந்தப் பணத்தையும் மின்சார இலாகா கடன் வாங்கி தான் அந்த இணைப்பைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. எனவே, இதையெல்லாம் எண்ணிப்பார்க்கின்ற நேரத்திலே மின்சார இலாகா விரைவிலே திவாலாகி விடக் கூடாது என்று நினைத்து, ஏற்கெனவே ஆட்சியிலே



இருந்தவர்கள் 10 ஆயிரம் செலுத்தி சில நிதி சுய மின்னிணைப்புத் திட்டத்தின் மூலம் யாராவது இணைப்பு கேட்டால் அவர்களுக்கு மின்னிணைப்பு கொடுக்கலாம் என்றும், அப்படிக் கொடுக்கும்பொழுது ஒரு யூனிட்டிற்கு 50 காசு வசூல் செய்ய வேண்டுமென்றும், அப்படி 50 காசு கொடுக்க முடியாவிட்டால் ஒரு குதிரை சக்தி 250 ரூபாய் கொடுக்கலாம் என்றும் ஆணை பிறப்பித்ததன் மூலம் ஆண்டொன்றுக்கு 10 ஆயிரம் மின்னிணைப்புகள் இப்பொழுது மின்சார வாரியம் கொடுத்துக்கொண்டிருக்கிறது. ஆனால் அதிலேயும் இப்பொழுது தேக்கம் வந்திருக்கிறது. 2 ஆண்டுகாலம், 2½ ஆண்டுகாலமாக அவர்கள் பதிவு செய்துவிட்டு மின்னிணைப்பு பெற முடியாதவர்களாக இருக்கிறார்கள். இங்கே சட்டமன்ற உறுப்பினர்களுக்குகூட அந்தத் திட்டத்தின்கீழ் மின்னிணைப்பு வேண்டுமென்றார்கள். அந்த 10 ஆயிரம் ரூபாய் செலுத்தி மின்னிணைப்பு வாங்கக்கூடிய திட்டத்திலே எந்தச் சட்டமன்ற உறுப்பினர் கேட்டாலும் ஒருவருக்கு ஓர் இணைப்பு நிச்சயமாக....

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலவச மின்சாரத்தை விவசாயிகளுக்கு வழங்குவதிலே மிகுந்த மகிழ்ச்சி. 1989ஆம் ஆண்டு, 1990ஆம் ஆண்டு இலவச மின்சாரம் வழங்குகின்ற நிலையிலே கடைசிப் பாக்கி வைத்தவர்களை, வசூல் செய்யாத சில விவசாயிகளிடம், சென்ற ஆண்டு மின்னிணைப்பு துண்டிக்கப்பட்டு இருக்கிறது. last due - அதாவது கடைசி பாக்கி 150 ரூபாய், 250 ரூபாய் என்று இருந்ததை 10 வருஷம் வசூலிக்காமல் விட்டுவிட்டு, அந்தப் பாக்கியின் காரணமாக என்னுடைய பகுதியிலும், தண்டராம்பட்டு பகுதியிலும் நூற்றுக்கணக்கான விவசாயிகளுக்கு இலவச மின்சாரத்தை இரத்து செய்திருக்கிறார்கள். இது குறித்து மதிப்பீட்டுக் குழுகூட நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. இராமலிங்கம் அவர்கள் தலைமையில் வருகை தந்தபொழுது அவர்களிடம் முறையிட்டு அதற்குண்டான பதிலை மின்சார வாரியம் அனுப்பியிருக்கிறது. ஆகவே, அந்த அநீதியைப் போக்குவதற்கு அமைச்சர் முன் வருவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எடுத்துச் சொன்னதைப்போல, கடைசி பில் கட்ட வேண்டியவர்கள் நூற்றுக்கணக்கானவர்கள்தான். இலவச மின்சாரத்தை நிரந்தரமாகப் பெறக் கூடியவர்கள், 100 ரூபாய், 150 ரூபாய் கூடக் கட்ட முடியவில்லை என்று சொன்னால் அவர்களாலே கட்ட முடியவில்லை என்று நாங்கள் நினைக்கவில்லை கட்டக் கூடாது என்று நினைக்கிறார்கள்

என்றுதான் இந்த அரசாங்கம் நினைக்கிறது. எனவே, அதைக் கட்டி விடுவார்களேயானால்—அவர்களுக்கு இப்பொழுதுகூடச் சொல்கிறேன். அப்படிக் கட்டாதவர்கள் கட்டி விடுவார்களேயானால்—உடனடியாக மின்சார இணைப்பு கொடுப்பதற்கு இலாகா உரிய நடவடிக்கையெடுக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்பொழுது 3-ஆவது ஒரு திட்டம். நம்முடைய முதலமைச்சர் அவர்களாலே எடுத்துச் சொல்லப்பட்டு அறிவிக்க இருக்கின்றேன். அதாவது 10 ஆயிரம் ரூபாய் செலுத்தினாலும் உடனடியாக விவசாயிகளுக்கு மின்சாரம் கிடைக்கவில்லை. சிலர் எவ்வளவு ரூபாய் செலவானாலும் பரவாயில்லை, மின்னிணைப்பு வேண்டுமென்று எதிர்பார்க்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு மின்சார இணைப்பு கொடுக்க முடியவில்லை. எனவே, அதே சுயநிதி மின்னிணைப்புத் திட்டத்தின் மூலமாக யார் 25 ஆயிரம் ரூபாய் செலுத்துகிறார்களோ, அவர்கள் செலுத்தியவுடனே ஒரு மாத காலத்திற்கெல்லாம் மின்னிணைப்பு கொடுப்பதற்கான உத்தரவு ஏற்கெனவே பிறப்பித்தாகிவிட்டது. அவர்களும் ஒரு யூனிட்டிற்கு 50 காசு செலுத்த வேண்டும் அல்லது ஒரு குதிரை சக்தி 250 ரூபாய் செலுத்த வேண்டும். அப்படிச் செலுத்திப் பெறுகின்றவர்கள் 50 ஆயிரம் ரூபாய் வரையிலேதான் அந்த மின்னிணைப்பைப் பெறலாம். 50,000-க்கு மேலே போனால், அந்த முழுத் தொகையையும் கட்ட வேண்டுமென்கிற விதிமுறை இதற்கும் பொருந்தும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மின் இணைப்புப் பெறுவதற்கான பட்டியலிலே 4 இலட்சம் பேர்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள். ஒரு வருடத்திற்கு 40,000 பேர்களுக்குத்தான் நம்மாலே மின் இணைப்பு கொடுக்க முடிகிறது. அந்த 40,000 பேர்களுக்கு மின் இணைப்பு கொடுப்பதற்கு ஏறத்தாழ 250 கோடி ரூபாய் மின்சார வாரியம் கடன் வாங்கித்தான் அந்த மின் இணைப்புகளைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. எனவே, மின்சார வாரியத்தினுடைய கடன் சுமையை மேலும் உயர்த்த இயலாத சூழ்நிலையிலே இதைச் செய்ய முடியவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-15*

இங்கே Line Loss-ஐப் பற்றியெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் சொன்னார்கள். தமிழ்நாட்டிலே 16.9 சதவீதமா, ஏன் இதைக் குறைக்கக் கூடாது என்றெல்லாம் கேட்டார்கள். நாட்டில் இருக்கக்கூடிய உண்மை நிலைமைகளை எண்ணிப் பார்க்க வேண்டும். இந்தியாவிலேயே





ஒரே ஒரு மாநிலத்தில், மராட்டியத்தில் மட்டும்தான் line loss 15.2 சதவீதமாக இருக்கிறது. மற்ற மாநிலங்களில் நிலைமை வேறு. தமிழ்நாட்டில் line loss, 16.9 சதவீதமாக இருக்க டெல்லியில் 44.4 சதவீதம், ஒரிசாவில் 42.3 சதவீதம். ஜம்மு-காஷ்மீரில் 41.5 சதவீதம், ஹரியானாவில் 29.5 சதவீதம், அஸ்ஸாமில் 25.9 சதவீதம், பீகாரிலே 25 சதவீதம் என்று 20 சதவீதத்திற்கு மேலேதான் ஒவ்வொரு மாநிலத்திலேயும் இருக்கிறதே தவிர, நம்முடைய மாநிலம் அனைத்து மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கிற நேரத்தில் 100 மடங்கு மிகச் சிறப்பாகச் செயல்படுகிறது என்பதை நான் தெரிவித்துககொள்கிறேன்.

இன்னும் சில மாண்புமிகு உறுப்பினர்கள் மின் திருட்டைப் பற்றிச் சொன்னார்கள். குறிப்பாக இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகு, மின் திருட்டை எந்த அளவுக்கு அக்கறையோடு கண்டுபிடித்திருக்கிறது என்பதற்காக ஒரு புள்ளிவிவரத்தை நான் சொல்ல விரும்புகிறேன். I.G. (Vigilence) அவர்கள் 1996-97-இல் எங்கெங்கே மின்சாரம் திருடப்படுகிறது என்பதைக் கண்டுபிடித்து, 22.62 கோடி ரூபாய் அளவுக்கு மின் திருட்டு செய்தவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அவர்களிடமிருந்து பணமும் வசூலிக்கப்படுகிறது. 1997-98 ஆம் ஆண்டிலே, மிக அதிகமாக மின்சாரம் திருடப்பட்டிருக்கிறது. 55.47 கோடி ரூபாய் அளவிற்கு மின்சாரம் திருடப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டு, உரியவர்களிடமிருந்து மின்சாரக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. 1998-99 ஆம் ஆண்டு அக்டோபர் வரையில், அதாவது கடந்த மாதம் வரையில், 22.32 கோடி ரூபாய் அளவிற்கு மின்சாரத் திருட்டு கண்டுபிடிக்கப்பட்டு, அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு, மின்சாரக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. இந்த ஆண்டு இறுதிக்குள்ளாக 30 கோடி ரூபாய்க்கு மேலான மின்சாரத் திருட்டு கண்டுபிடிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. எனவே, இப்படி மின்சாரத் திருட்டு எங்கே நடைபெற்றாலும் தகுந்த நடவடிக்கை எடுத்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னையிலே மின் விநியோகம் ஆங்காங்கே தடைபடுகிறது என்று சொல்லி, தீரன் போன்றவர்கள் அதைச் சீர்திருத்துவதற்கான கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். 25 ஆண்டுகள், 30 ஆண்டுகளுக்கு முன்னாலே போடப்பட்ட Transformer-கள் மற்றும் பல கருவிகளெல்லாம் பழுதடைந்துள்ளன. அவை மாற்றப்பட வேண்டுமென்று சொன்னார்கள். முதற்கட்டமாக சென்னையிலே அப்படிப்பட்ட கருவிகளை மாற்ற, Cable-களை மாற்ற, Pillar box களை மாற்ற, இவையெல்லாம் சீர்செய்வதற்காக இந்த ஆண்டு 90 கோடி

ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஜூன் மாதத்திற்குள்ளாக அந்தப் பணிகளையெல்லாம் முடிக்க வேண்டுமென அரசாங்கம் ஆணை பிறப்பித்திருக்கிறது. இது ஒரு நகரத்தில் மட்டும் நடந்தால் போதாது என்று எண்ணிய மாண்புமிகு முதல்வர் அவர்கள், மின்சார இலாகா அதிகாரிகளை அழைத்து, முதற்கட்டமாக அனைத்து மாநகராட்சிகளிலும் இப்படிப்பட்ட நடவடிக்கைகளை எடுத்துச் செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இதன் மூலம் மதுரை, கோவை, சேலம், திருச்சி, திருநெல்வேலி போன்ற மாநகராட்சிகளிலும் இந்தத் திட்டம் அமல்படுத்தப்படும். அடுத்தகட்டமாக நகராட்சிகளிலும் இந்தத் திட்டம் அமல்படுத்தப்படும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றையதினம் சுமார் இலட்சம் தொழிலாளர்கள் பணி செய்கின்ற போதிலும், மின்சார பில்கள் தயாரிப்பதிலே காலதாமதம், அதைக் கொடுப்பதிலே காலதாமதம் என்றெல்லாம் இங்கே சொன்ன குற்றச்சாட்டை நாங்களும் தொழிற்சங்கங்களோடு விவாதித்தோம். அங்கே கம்ப்யூட்டர் புகுத்துவதைப்பற்றி தொழிற்சங்கங்களோடு பேசி, அவர்களும் அதற்கு ஒப்புதல் தந்திருக்கிறார்கள். ஒப்பந்தம் என்னவென்றால் எந்தக் காரணத்தைக் கொண்டும், பணியாற்றுகின்ற தொழிலாளர்கள் வேலையிலிருந்து போய்விடக்கூடாது. அவர்கள் ஓய்வு பெறுகின்ற வரையிலே அவர்கள் பணியில் இருக்க வேண்டும் என்பதுதான். இப்படி ஒரு ஒப்பந்தத்தோடு கம்ப்யூட்டரைப் புகுத்துவதற்கு அவர்கள் இசைவு தந்திருக்கிறார்கள். எனவே, கட்சி பேதம் இல்லாமல் அனைத்துக் கட்சிகளும் ஒப்புக்கொண்டு இப்படிப்பட்ட நடைமுறையை நாங்கள் நடைமுறைப்படுத்த இருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மின்சார இலாகாவில் பணியாற்றக்கூடிய பொறியாளர்களுடைய தரத்தை உயர்த்த, அவர்கள் மேலும் பொது அறிவு பெற, இந்தத் துறையிலே அவர்கள் அதிகக் கவனம் செலுத்த மூத்த பொறியாளர்கள் அமெரிக்காவில் பயிற்சி பெற, அமெரிக்க அரசு நிதியுதவியோடு, முழுக்க முழுக்க அவர்களே நிதி உதவி செய்கிறார்கள்-'Texas utility' நிறுவனத்தோடு மின்சார வாரியம் 20-11-1998 அன்று ஒப்பந்தம் செய்துள்ளது. இதனால் ஆண்டு ஒன்றுக்கு 10 பொறியாளர்கள் அமெரிக்காவுக்குச் செல்லவும், அமெரிக்காவில் இருக்கக்கூடிய பொறியாளர்கள் தமிழ்நாட்டுக்கு வரவும், இரண்டு நாட்டுப் பொறியாளர்களும் கலந்து பேசி, நல்ல முறையிலே மின்சாரவாரியத்தை இயக்குவதற்கான நடவடிக்கைகளிலே ஈடுபட அந்த நடவடிக்கை



எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

பிற்பகல் 1-20

இன்னொன்று, பொறியாளர்கள் தங்களுக்கு இருக்கக்கூடிய அறிவாற்றலை வெளிப்படுத்த தொழில்நுட்ப ஆய்வுக் கட்டுரைகள், அவர்கள் எழுதி உலக அளவிலே வெளியிடுவார்களேயானால், அவர்களுக்கு 5 ஆயிரம் ரூபாயும், இந்திய அளவிலே அந்தக் கட்டுரைகள் வெளியிடப்பட்டு அவை பத்திரிகைகளிலே வருமேயானால், அவர்களுக்கு 3 ஆயிரம் ரூபாயும், மாநில அளவிலே அவர்களுடைய கட்டுரைகள் வெளியிடப்பட்டு அந்தக் கட்டுரைகள் வரவேற்கப்பெற்றால் அவர்களுக்கு 2 ஆயிரம் ரூபாயும் பரிசு அளிப்பது என்ற ஒரு திட்டத்தினையும், பொறியாளர்களை ஊக்குவிப்பதற்காக இந்த அரசு அமல்படுத்தி இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஒப்பந்தத் தொழிலாளர்களைப் பொறுத்தவரையிலே, மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் போன்றவர்களும் மற்ற உறுப்பினர்களும் இங்கே நல்ல கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். இந்த அரசு பொறுப்பு ஏற்றுக்கொண்ட உடனேயே, அதற்கு முன்னாலேயே பிறப்பிக்கப்பட்ட காலித் கமிஷனுடைய அறிக்கையை அமல்படுத்த முனைந்தோம். 18 ஆயிரம் தொழிலாளர்களுக்கு உடனடியாக வேலை கொடுக்க வேண்டுமென்று காலித் கமிஷன் சொன்னது. அதற்கு, முந்தைய ஆட்சியிலே எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆனால், இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்து, அந்தத் தொழிலாளர்கள்—10 ஆண்டு காலம், 15 ஆண்டு காலம் பணி புரிந்தவர்கள்—எங்கே இருக்கிறார்கள் என்றெல்லாம் தேடிக் கண்டுபிடித்து, இதுவரையிலே 12,500 பேர் இதோ இருக்கிறோம் என்று அடையாளம் காட்டினார்கள்; அவர்கள் அத்தனை பேருக்கும் வேலை கொடுத்தாகிவிட்டது. எனவே, அந்த காலித் கமிஷனுடைய அறிக்கையை இந்த ஆண்டு இந்த அரசு அமல்படுத்தி இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அனல் மின்சாரத் திட்டங்களிலே பணியாற்றக்கூடிய ஒப்பந்தத் தொழிலாளர்களைப் பற்றி என்ன நிலை என்று திரு. சுப்பராயன் கேட்டார்கள், திரு. டி. மணி கேட்டார்கள்; மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே மணி அவர்களும் கேட்டார்கள்; நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்; Seniority அடிப்படையில் அனல் மின் திட்டங்களிலே பணியாற்றக்கூடிய ஒப்பந்தத் தொழிலாளர்கள்

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1998 நவம்பர் 25

அனைவரும் படிப்படியாக நிரந்தரமாக ஆக்கப்படுவார்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியை நான் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும் Helper பல இடங்களிலே இல்லை என்று குறைபட்டுக் கொண்டார்கள், Wiremen இல்லை என்றும் குறைபட்டுக் கொண்டார்கள். அந்தக் குறையைப் போக்குவதற்காக I.T.I. படித்த, 5 ஆயிரம் பேர்களை இந்த அரசு இந்த ஆண்டு நியமிக்க இருக்கிறது என்பதையும் (மேசையைத் தட்டும் ஒலி) அதைப்போலவே சுமார் 750 தொழில்நுட்ப உதவியாளர்களை இந்த ஆண்டே தேர்வு செய்வதற்கு இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்து இருக்கிறது என்பதையும், பணிக்காலத்திலே இறந்தவர்களுடைய வாரிசுதாரர்களுக்கு அரசாங்கத்திலே என்னென்ன சலுகைகள் அளிக்கப் படுகின்றனவோ, அந்த சலுகைகளோடு அவர்களுக்குப் பணி நிரந்தரம் செய்வதற்கான ஆணையும் பிறப்பிக்கப்பட்டு இருக்கிறது என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

'Regulatory Commission' அமைப்பது பற்றி மத்திய அரசாங்கம் ஏற்கெனவே எடுத்துச் சொல்லி, இந்தச் சட்டமன்றத்திலேயும் நாம் விவாதித்து, பிறகு மத்திய அரசாங்கமும் சில பிரிவுகளை மாற்றிக் கொண்டு, மாநில அரசாங்கங்கள் அவர்கள் விருப்பப்படி சட்டம் இயற்றலாம் என்று சொன்னதன் அடிப்படையில் Regulatory Commission ஒன்றை நியமிப்பது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நீதிபதி மருதமுத்து அவர்களைத் தலைவராகவும், தலைமைப் பொறியாளரை உறுப்பினராகவும், C.E.A.-லிருந்து ஓர் உறுப்பினரை உறுப்பினராகக் கொண்டு, 3 பேர் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டு இருக்கிறது. அந்தக் குழு விரைவிலே நம்முடைய மாநிலத்துக்குத் தேவையான நிரந்தர Regulatory Commission ஒன்றை அமைப்பதற்கான பரிந்துரையைச் செய்யும். அந்தப் பரிந்துரை வந்ததற்குப் பிறகு, அரசு அது குறித்து முடிவு எடுக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்தியாவிலே பொதுவாக மாநில அரசாங்கங்கள் மத்தியிலே, மின்சார வாரியம் இலாபகரமாகச் செயல்பட வேண்டுமானால், Distribution, Generation, Transmission இவை எல்லாம் தனியாருக்குக் கொடுக்க வேண்டுமென்ற ஒரு கருத்து இப்போது பரவலாகப் பேசப்பட்டு வருகிறது. இன்று மராட்டியத்திலே, மேற்கு வங்காளத்திலே விநியோகம் தனியாரிடத்திலே ஒப்படைக்கப்பட்டு இருக்கிறது.



1998 நவம்பர் 25] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

அதேபோல இங்கேயும் ஒப்படைக்க முடியுமா என்று நாங்கள் யோசித்தோம். அதற்கு தொழிற்சங்கங்கள் கொஞ்சம் எதிர்ப்புத் தெரிவித்து இருக்கின்றன. அவர்களோடு கலந்து பேசிக் கொண்டிருக்கிறோம். அவர்களுடைய ஒப்புதலும் பெற்று, எந்த அளவிற்கு distribution, Generation மட்டும் தனியாருக்குக் கொடுக்க முடியும் என்பதைப் பற்றி இந்த அரசு பரிசீலிக்கிறது. Transmission-ஐப் பொறுத்த வரையிலே, மின்சார இலாகாவே, அதை நடத்துவது என்று முடிவு செய்து இருக்கிறது என்பதை மட்டும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

இந்த அரசாங்கம் பொறுப்பு ஏற்றுக் கொண்டதற்குப் பிறகு, நான் ஏற்கெனவே கடந்த ஆண்டுகூட சொன்னேன், Transformers meters இப்படிப்பட்ட கருவிகளை வாங்கும்போது, 10 சதவீதம் விலையைக் குறைத்து வாங்க வேண்டுமென்று முடிவு எடுத்து, அதன் மூலம் ஆண்டு ஒன்றுக்கு 70 கோடி, 80 கோடி ரூபாய் வாரியத்திற்கு இலாபம் கிடைத்துக் கொண்டு இருக்கிறது.

அதைப்போலவே கடந்த கால ஆட்சியிலே 1991-இல் நிலக்கரி இறக்குமதி செய்து, அதை லாரிகள் மூலமாக, இரயில்கள் மூலமாக அனல் மின் நிலையங்களுக்குக் கொண்டு செல்வதற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டது. ஆனால் என்ன காரணத்தினாலோ 1994-இல் மறுபடியும் டெண்டர் கேட்காமலேயே அவர்களுக்கே அந்த ஒப்பந்தத்தை நீட்டித்துக் கொடுத்தார்கள். இந்த அரசு வந்ததற்குப் பிறகு கடந்த ஆண்டு அந்த ஒப்பந்தம் காலாவதியாகிவிட்ட காரணத்தால் மறுபடியும் டெண்டர் கோரியது. அப்படி டெண்டர் கோரியதில் பலர் அதில் பங்கேற்றார்கள், அதிலே யார் குறைந்தபட்சம் விலையைக் கேட்டிருந்தார்களோ அவர்களுக்கு மின்சார வாரியம் ஆணை கொடுத்திருக்கிறது. இதிலே வேடிக்கை என்னவென்றால், கடந்த ஆட்சியிலே நடைபெற்ற Coal handling-க்கும், இப்பொழுதுள்ள Coal handling-க்கும் உள்ள வித்தியாசம் எவ்வளவு என்று கேட்டால், ஓர் ஆண்டுக்கு 130 கோடி ரூபாய். ஓா இனத்திலே ஓர் ஆண்டுக்கு 130 கோடி ரூபாய் இலாபம் மின்சார வாரியத்திற்கு வரக்கூடிய வகையில் - மொத்தத்தில் பொருள்கள் வாங்குவதிலிருந்து Coal handling வரையில் பார்த்தால் 200 கோடியிலிருந்து 250 கோடி ரூபாய் ஓர் ஆண்டுக்கு இலாபம் வரக்கூடிய வகையிலே-இந்த இலாகாவிலே இருக்கக்கூடிய தலைவர் மற்றும் உறுப்பினர்கள் அனைவருமே நேர்மையாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1998 நவம்பர் 25

பிற்பகல் 1-25

இன்னும் ஒன்றைச் சொல்கிறேன். இங்கே இருக்கக்கூடிய முதலமைச்சரோ, நானோ, இங்கு இருக்கக்கூடிய அமைச்சர்களோ டெண்டரில் யாருமே தலையிடுவதில்லை என்பதை நான் உறுதியாக இந்த அவைக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே, யாருடைய தலையீடுமின்றி மிகச் சிறப்பாகப் பணியாற்றக்கூடிய மின்சார வாரியத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்களை நான் பாராட்டுவதோடு அந்த வாரியம் மிகச் சிறப்பாகப் பணியாற்றுவதற்கு உறுதுணையாக இருக்கின்ற சுமார் ஒரு இலட்சம் தொழிலாளர்களையும், அவர்களை இயக்கிச் செல்கின்ற தொழிற்சங்கத் தலைவர்கள் அத்தனை பேருக்கும் நான் இந்த நேரத்தில் நன்றி தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இறுதியாக ஒன்றை மட்டும் இந்த அவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன் மாண்புமிகு உறுப்பினர்கள் பலர், பல ஆண்டுக் காலமாக இந்த அவையிலே கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். நலிந்துபோன ஆலயங்களுக்கெல்லாம் இலவச மின்சார இணைப்பு கொடுக்கக் கூடாதா என்று கேட்கிறார்கள். நான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்து பேசினேன். அதைப்போலவே நம்முடைய அறநிலையத் துறை அமைச்சரோடும் கலந்து பேசினேன். அப்படிப் பேசியதற்குப் பிறகு ஒரு முடிவை எடுத்திருக்கிறோம். அது என்னவென்று கேட்டால், இந்த நாட்டிலே ஏழை எளியவர்கள், குடிசைகளில் இருப்பவர்கள் வீட்டில் மின்சாரம் இல்லையென்றால், அவர்கள் இருட்டிலே இருக்கக் கூடாது என்று விரும்புகிற நம்முடைய முதலமைச்சர் அவர்கள், நம்முடைய ஆட்சியில் ஆலயங்களும் இருட்டிலே இருக்கக் கூடாது என்று விரும்புகிற காரணத்தால், ஆண்டொன்றுக்கு ஆயிரம் ரூபாய்க்கும் குறைவாக வருமானம் உள்ள எந்த ஆலயமாக இருந்தாலும் சரி அறநிலையத் துறையின் கீழுள்ள இந்து ஆலயமாக இருந்தாலும் சரி அல்லது கிருத்துவர்கள் தொழுகின்ற தேவாலயமாக இருந்தாலும் சரி அல்லது இஸ்லாமியர்கள் தொழுகின்ற பள்ளிவாசலாக இருந்தாலும் சரி எந்த மதத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அவர்களுடைய ஆலயங்களுக்கு, ஆண்டொன்றுக்கு ஆயிரம் ரூபாய்க்குக் குறைவாக வருமானம் உள்ள ஆலயங்களுக்கு, இலவசமாக ஒரு விளக்கு போட்டுக்கொள்வதற்கு மின்சாரம் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) அது மட்டுமல்ல, இதுகுறித்து சம்பந்தப்பட்ட ஆலயங்களோ அல்லது பள்ளிவாசலோ அல்லது தேவாலயமோ அவற்றின் அலுவலர்கள் மின்சார வாரியத்தைத் தொடர்பு கொண்டு அந்த மின்சாரத்தைப் பெறுவதற்கான வாய்ப்பு இருக்கிறது, அதைப்



1998 நவம்பர் 25] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

பெற்றுக் கொள்ளலாம் என்று நான் இந்த நல்ல நேரத்தில் தெரிவிக்க விரும்புகிறேன்.

மின்சார வாரியத்தினுடைய வரவு-செலவுத் திட்டத்தின் மீது 17 உறுப்பினர்கள் அரிய கருத்துக்களை எடுத்துச் சொல்லி, இந்த இலாகா திறம்படச் செயல்படுவதற்கு ஆலோசனைகள் வழங்கியதற்கு, நன்றி தெரிவித்து, விடைபெறுகிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது, (குறுக்கீடு) ஒரு கோரிக்கையில் 15 பேர் விளக்கம் கேட்கவேண்டுமென்றால், நான் அனுமதிக்க முடியாது. விவாதம் முடிவுற்றது.

## 8. அரசினர் தீர்மானம்

### விதி 32-ஐத் தளர்த்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நாளையதினம் துணை மானியக் கோரிக்கையில் பல உறுப்பினர்கள் பேச விருப்பம் தெரிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பதிலுரையும் இருக்கிறது. ஆகவே, நாளை கேள்வி நேரத்தைத் தவிர்க்கலாம் என்ற கருத்தின் அடிப்படையில் அதற்குரிய தீர்மானத்தை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சரை முன்மொழியுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-30

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம், வினாக்கள்-விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ, 26-11-1998 அன்று தளர்த்தி, அந்நேரம் அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

[பேரவைத் தலைவர்] [1998 நவம்பர் 25

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை.

தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

நாளை (26-11-1998) வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை, மீண்டும் நாளை (26-11-1998) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-31 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ). சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

50. 1998-ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விளம்பரப் பலகைகளுக்கு உரிமம் வழங்குதல், விளம்பர வரி விதிப்பு மற்றும் வரி வசூல் விதிகள் வகுப்பது குறித்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 5-8-1998-ஆம் நாளிட்ட 141-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [1919-ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1919) 348 (டி) பிரிவு, 1920-ஆம ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304(2) பிரிவு, 1971-ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1971) 432(2) பிரிவு, 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 25/1981) 431 (2) பிரிவு, 1994-ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1994) 11 (3) பிரிவு, 1994-ஆம் ஆண்டு திருநெல்வேலி மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 28/1994) 11 (3) பிரிவு மற்றும் 1994-ஆம் ஆண்டு சேலம் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 29/1994) 11 (3) பிரிவு ஆகிய பிரிவுகளின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].



1998 நவம்பர் 25]

51. 1996-97-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் பதினான்காவது ஆண்டறிக்கை (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது)]. (தமிழ், ஆங்கிலம்).

### (ஆ). அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

22. தமிழ்நாடு மின் வாரியத்தின் 1998-99-ம் ஆண்டுக்கான நிதிநிலை விவர அறிக்கை மற்றும் 1997-98ஆம் ஆண்டுக்கான திருத்திய மதிப்பீடு குறித்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் விவாதங்களைத் தொடங்கி வைத்து மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ், ஆங்கிலம்).

23. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மக்கள் உரிமைப் பட்டயம் என்ற புத்தகம் (தமிழ்).

24. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மக்கள் உரிமைப் பட்டயம் என்ற புத்தகம். (ஆங்கிலம்)

25. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று இருபத்து நான்காவது அறிக்கை, 1998-99.

26. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று இருபத்து ஐந்தாவது அறிக்கை, 1998-99.

27. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று இருபத்து ஆறாவது அறிக்கை, 1998-99.

28. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று இருபத்து ஏழாவது அறிக்கை, 1998-99.

29. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று இருபத்து எட்டாவது அறிக்கை, 1998-99.

30. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று இருபத்து ஒன்பதாவது அறிக்கை, 1998-99.

31. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று முப்பதாவது அறிக்கை, 1998-99.

[1998 நவம்பர் 25

32. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று முப்பதொன்றாவது அறிக்கை, 1998-99.

33. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று முப்பத்திரெண்டாவது அறிக்கை, 1998-99.

34. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று முப்பத்து மூன்றாவது அறிக்கை, 1998-99.

35. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் முப்பத்தாறாவது அறிக்கை, 1998-99.

36. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் முப்பத்தேழாவது அறிக்கை, 1998-99.

37. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் முப்பத்தெட்டாவது அறிக்கை, 1998-99.

38. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் முப்பத்தொன்பதாவது அறிக்கை, 1998-99.

39. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் நாற்பதாவது அறிக்கை, 1998-99.

40. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் நாற்பத்தொன்றாவது அறிக்கை, 1998-99.

219402

2

| (1) | (2) | (1) | (2) |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
816, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280
and 283 of the Tamil Nadu
Legislative Assembly Rules and
printed by the Director of
Stationery and Printing.
Chennai-600 002.